Aum!

"NALA"

A

TAMIL DRAMA

by

Sriman S. K. Parthasarathi Ayyangar, B.A., B.L.,

(District Munsif.)

Author of

Several Tamil Dramas.

With a Foreword by

M. R. Ry. R. P. Sethu Pillai Avl., B. A., B. L.,

(Lecturer in Tamil, Annamalai University.)

BHARATI PRESS, MANNARGUDI.

1932

[All Rights Reserved.] [Price : 12 Annas.

5 - AUG 1952

O-,1G^N;N:g
N32
184842

ஸ்ரீ:

நளன்

அல்லது

'கலியின் கொடுமை'

என்ற

தமிழ் நாடகம்

பல தமிழ் நாடகங்களின் ஆசிரியராகிய

ஸ்ரீமான் S. K. பார்த்தஸாரதி ஐயங்கார், B. A., B. L.,

(டிஸ்ட்ரிக்ட் முன்ஸிப்)

இயற்றியது.

அண்ணாமலை ஸர்வ கலாசாலைத் தமிழ்ப் பேராசிரியர்

உயர்திருவாளர் R. P. சேதுப் பிள்ளை, B.A., B.L., அவர்கள்

அளித்த முன்னுரையுடன் கூடியது.

முதற் பதிப்பு

(500)

பாரதி அச்சுக்கூடம்,

மன்னார்குடி.

1932

ஸர்வ காபிரைட் உரிமைகளும் ரிஸர்வ் செய்யப்பட்டன.

விலை 12 அணா

184842
-600 008.

DEDICATED

to

LOVE

AND

TRUTH

"God is Love."

"Sathyân nâsthi parô Dharma:"

(There is no Religion higher than Truth)

O>1GTPU,1:9,8
N32

Inscribed

to the sweet memory of

MY LATE BELOVED PARTNER

Srimathi

LAKSHMI AMMAL.

2780
894'8112

முன்னுரை.

அண்ணாமலை ஸர்வ கலாசாலைத் தமிழ்ப் பேராசிரியர்
உயர்திருவாளர்
R. P. சேதுப் பிள்ளை, B. A., B. L., அவர்கள்
அளித்தது.

அருந் துயருற்ற ஞான்றும் அற நெறி திறம்பாது வாழ்ந்து ஆன்ற புகழ் நிறுவிய நளன் பெருமையை அறியாதார் இந் நாட்டில் எவருமிலர். கலியின் கொடுமையால் நல்லோர் வெறுக்கும் பொல்லாச் சூதாடப் புகுந்து, நாடும் பீடும் இழந்து, காதல் மனையாளொடு கானகம் போந்து, கழுதும் கண்ணுறங்கும் காரிருளிற் காதலியைப் பிரிந்து, கரைந்த நளன் துயரமும், காதலனைக் காணாது கலங்கி, நஞ்சுயிர்க்கும் வாளரவின் வாய்ப்பட்டு நடுங்கி, கழிந்த காமுகன் வசப்பட்டுக் கருத்தழிந்து, கொழுகொம் பிழந்த கொடிபோற் குழைந்த கற்பினுக் கணியாய தமயந்தியின் துயரமும், கற்போர் மனத்தை உருக்குவனவாம். இத் தகைய சோகம் நிறைந்த காதையைச் சொல் நயம் பொருள் நயம் வாய்ந்த எளிய நடையில் நாடக மாக்கி உதவிய ஆசிரியர், திரு. பார்த்தசாரதி ஐயங்கார் அவர்கள், தமிழ் ஆர்வம் போற்றுதற் குரிய தாகும். நாடக முழுமையும் நளவெண்பாவின் நன் மணமும், நைடதத்தின் நறு மணமும் பரந்து கமழ்கின்றன.

இந் நூலின் வாயிலாகப் பல அரிய உண்மைகளை ஆசிரியர் இனிது விளக்கி யுள்ளார். நானில மாளும் வேந்தன், விதியின் விளைவால் மதி மயங்கி, மற நெறியிற் செல்லும் பொழுது, மதி நலஞ் சான்ற மந்திரத் தலைவர், ஆன்ற அற நெறியை அஞ்சாது நின்று அறைகுவர் என்பதும், ஆரஞருற்ற போதும் நிறை யமைந்த மாதர், கணவரைப் பிரிந்து வாழக் கருதா ரென்பதும், கணவனே இறைவன் என்று கருதி யொழுகும் கற்புடைய மாதர் தீயோரை அழிக் குந் திறனுடையா ரென்பதும், இந் நாடகத்தால் நன்கு அறிவுறுத்தப் படுகின்றன. இத் தகைய தெவிட்டாத் தீஞ் சுவை பயக்கும் தெள்ளிய காதையை, நடித்தும் படித்தும் தமிழ் மக்கள் நல முறுமாறு, நாடக மாக்கித் தந்த நல்லாசிரியர் அவர்களுக்கும், அன்னார் வாழ்க்கைத் துணையா யமைந்து இந் நாடகத்தை வளம் படுத்தி, பின், தோன்றாத் துணையாய் நின்று, முற்றுவித் தருளிய நற் றமிழ்ச் செல்விக்கும் தமிழகம் என்றும் நன்றி செலுத்தும் கடப்பா டுடைய தாகும்.

மேலரத வீதி,
திருநெல்வேலி,
11—6—'32.

ரா. பி. சேதுப் பிள்ளை.

ஸ்ரீ:

முகவுரை.

நள சரித்திரத்தை நாடகமாக எழுத வேண்டுமென்று பன்னிரண்டு வருடங்களுக்கு முன்பு எனக்கு ஓர் அவா உண்டாகி, எனது நண்பர் ஸ்ரீமான் V. K. பார்த்தஸாரதி ஐயங்கார் B. A., B. L., (சென்னை அட்வொகேட்) அவர்களைக் கலந்து கொண்டு, 1921-ம் வருஷத்தில், கடைசி இரண்டு காட்சிகளைத் தவிர மிகுதியை, எழுதி முடித்தேன். அப் பொழுது, நள வெண்பாவில் வல்லவளா யிருந்த என் மனைவி ஸ்ரீமதி லக்ஷ்மி அம்மாள் தினந் தோறும் நான் எழுதியதை வாசித்துப் பல விஷயங்கள் எடுத்துக் கூறி வந்தாள். அவள், 1921-ம் வருட இறுதியில் தேக அஸௌக்ய மடைந்து, 1922-ம் வருடம் ஜூன் மாதம் 16-ம் தேதி, உடல் நீத்தாள். அதனால், இது வரையில் இந் நாடகத்தை வெளியிட மனம் வராது இருந்தேன். ஆயினும், புராண சரித நாடகங்களை எழுதிப் பிரசுரப் படுத்துவதைத் தற் காலம் நிறுத்திக் கொள்ளப் போவதால், இப் புத்தகத்தை மாத்திரம், இப்பொழுது, அவளுடைய ஞாப கார்த்த மாகவே, பிரசுரிக்க வேண்டுமென்று எனக்குத் தோன்றி, அவள் சென்று 10 ஆண்டுகள் முடியும் இந் நாளில் இதை வெளி யிடுகிறேன்.

மேற் கூறிய எனது நண்பர் ஸ்ரீமான் V. K. பார்த்தஸாரதி ஐயங்கார் அவர்கள், 1921-ம் ஆண்டில், நான் எழுதியதை அவ்வப் பொழுது பார்த்துக் குற்றங்களைக் களைந்தும், அவருடைய தமிழ் வல்லமையால் சில இனிய மொழிகளைச் சேர்த்தும், உதவியதோடு, இரண்டாவது அங்கத்தில் 1 to 3, & 5 காட்சிகளை எழுதியும் ஸஹாயம் செய்தார். அவருக்கு என்னுடைய மனமார்ந்த கிருதஜ்ஞதை எஞ்ஞான்றும் உரியது.

முன் வருஷத்தில், கடைசி இரண்டு காட்சிகளையும் எழுதினேன். இவ்வாண்டில், நாடகம் முழுவதையும் பல இடங்களில் திருத்தி, நவீன நாடக முறைக்கு ஏற்றபடி மாற்றினேன்.

இப் புத்தகத்திற்கு முன்னுரை அன்புடன் தந்து அருளிய, அண்ணமலை ஸர்வகலாசாலைத் தமிழ்ப் பேராசிரியர், உயர் திருவாளர் R.P. சேதுப் பிள்ளை,(B.A., B.L.) அவர்களுக்கு மனப் பூர்வமாக என் னுடைய நன்றி யறிவை இதன் மூலமாய் வெளி யிடுவதோடு என்றும் பாராட்டக் கடமைப் பட்டி ருக்கிறேன்.

இப் புத்தகத்தை அச்சிடுவதில் சொற்பிழை அச்சுப் பிழை முதலியன திருத்தி உதவிய (Findlay College உபாத்தியாயர் கள்) ஸ்ரீமான் A. K. ஸ்ரீனிவாஸய்யங்கார் (தமிழ்ப்பண்டிதர்) அவர்களுக்கும், ஸ்ரீமான் N. பஞ்சாபகேசய்யர் (B. A., L. T.,) அவர்களுக்கும், என் மனமார்ந்த வந்தனம் அளிக்கிறேன்.

நடிகர்கள் **S** அடையாள மிட்ட இடங்களைத் தவிர வேறு இடங்களில் பாட்டுகளை அமைத்துக் கொள்ளா திருக்கும்படி வேண்டிக் கொள்கிறேன். பாட்டுகள் எவ்வளவு குறைந்தாலும் நலமே.

மன்னார்குடி,
16—6—1932.

S. K. பார்த்தஸாரதி.

அறிவிப்பு.

என் னுடைய நாடகங்களை, முழுதாகவோ, சில பாகமாகவோ, நடிப்பவர்கள் முன்னதாகவே என் உத்தரவு பெற்றே நடிக்க வேண்டும். தவறினால், என் னுடைய காபி ரைட் பாத்யங்களி லொன்றை மீறின குற்றத்திற்கு ஆளாவார்கள்.

S. K. பார்த்தஸாரதி.

பிழைத் திருத்தம்:—பக்கம் 10, வரி 23-ல், 'வலது' என்பதற்கு 'இடது' என்று கொள்க. 59-ம் பக்கம் 14-ம் வரியின் இறுதியில் '?' சேர்க்க.

நாடகப் பாத்திரங்கள்.

1. கலி புருஷன்.
2. நள மகாராஜன். (நிடத நாட் டரசன்.)
2a. வாகுகன். (நளமகாராஜனின் மாற்றுரு.)
3. வீமராஜன். (தமயந்தியின் தந்தை; விதர்ப்ப நாட் டரசன்.)
4. இந்திரசேனன். (நளமகாராஜனின் புதல்வன்.)
5. புஷ்கரன். (நளனுக்குத் தமையன் முறையாய், அவன் கீழ் ஆண்ட, ஒரு சிற்றரசன்.)
6. ருதுபர்ணன். (அயோத்தி அரசன்.)
7 to 9. நளமகாராஜனுடைய முதல் மூன்று மந்திரிகள்.
10. ஸுதேவர். (விதர்ப்ப நாட்டு பிராம்மணர்.)
11. சேதி அரண்மனைப் புரோகிதர்.
12. ஒரு சோதிடர்.
13. ஒரு வேடன்.
14. ஒரு வியாபாரி.
15. கார்க்கோடகன். (அர வரசன்.)
16. ஒரு சேவகன்.
17. ஒரு வெட்டியான்.
18. தமயந்தி. (நளமகாராஜனின் மனைவி.)
19. இந்திரசேனை. (நளமகாராஜனின் பெண்.)
20. ஸௌதாமணி. (சேதி தேசத்து இராணி.)
21. ஸுநந்தை. (சேதி தேசத்து ராஜகுமாரி.)
22. விருஹத்ஸேனை. } (தமயந்தியின் தோழிகள்.)
23. கேசினி. }
24. சேதி அரண்மனைச் சேடி.

(ஒரு நடன மாது, குடி ஜனங்கள், முதலியோர்.)

"NALA"

Serial No.	Acts and Scenes		Screens, Fittings, and Furniture	Articles	Persons Nos. as in Page vii
1	I	i	Garden. Masonry seat	A bow. Toys. A big vessel, and a small vessel, with water	1, 2, 18, 4, 19
2		ii	Garden Path	Horoscope	1, 5, 12
3		iii	Hall. Dais. Throne & 3 chairs on each side	A Gambling Table with dices. A flag	2, 7 to 9, 16, A dancing girl, [5, some people
4		iv	Chamber. A sofa		2, 18
5		v	Street		2, 18, 4, 19, 22, 7 to 9, [people, 17
6	II	i	Forest Road		2, 18, 4, 19, 22
7		ii	Forest. A ruined Mantapam	A Sickle (அரிவாள்)	2, 18
8		iii	Forest	A stick. Fire blaze	13, 18, 14
9		iv	Chamber. A chair	A book	20, 24, 18, 21
10		v	Forest	Fire. A red silk	2, 15, 2-a
11	III	i	Street		10, 11
12		ii	Garden. Lakshmi image on a dais	Puja articles, flowers, fruits, kunkumam, camphor, match-box	10, 11, 18, 21, 24, 30
13	IV	i	Garden Path. Rock seat		10, 2-a
14		ii	Chamber. Sofa	Toys. A bell	18, 19, 23, 10
15		iii	Garden Path		6. 2-a
16	V	i	Chamber. Sofa		19, 23, 10
17		ii	Garden Path. Rock seat		2-a, 4, 19, 23
18		iii	Hall	Flowers (loose)	3, 6, 2a, 18, 4, 19, 23, 10, 2, 1.

ஸ்ரீ:

5 - AUG 1932

நளன்

அல்லது

கலியின் கொடுமை.

அங்கம். 1.

காட்சி. 1.

[நிடதநாட்டரண்மனையில் ஒரு தோட்டம்—ஒரு கல்லாஸனம் இருக்கிறது—மாலை—கலி புருஷன் கவலையுடன் *வலதுபுறம் வருகிறான்.]

கலி:—(தனக்குள்) தமயந்தியின் சுயம்வரத்தை யறிந்து நான் வெகு வேகமாக வருகையில், இந்திராதி நால்வரையும் எதிரில் சந்திக்கப் பெற்று, அவள் நளனை மாலை யிட்ட விஷயததை அவர்கள் மூலமாய் அறிந்ததும், அவளையும் அவள் காதலனையும் பிரித்து வருத்துவதாய் அவர்கள்முன் சபதம் செய்தேன். நளன் ஸத்ய சீலனென்றும், என் எண்ணம் கைகூடாதென்றும், தருமனும் மற்றைய மூவரும் என்ன தடுத்தும், என்னை மணவாத தமயந்தியையும் அவள் மாலையிட்ட நளனையும் வருத்தியே தீருவேன் என்று ஆணை கூறினேன்.—ஸ்ரீமங் நாராயணமூர்த்தி கூட என் கைக்கீழ் மூன்றே முக்கால் நாழிகை கட்டுப்பட வேண்டியிருக்க, இது என்னால் முடியாத காரியமா என்று நினைத்தேன்.—

* வலதுபுறம் இடதுபுறம் என்பன ஒரு நடிகன் மேடையில் சபையோரைப் பார்த்து நிற்கும்போது உள்ளன.

ஆனல்,— நான் எவரையாவது பிடித்து வருத்த வேண்டுமென்றால் அவரிடம் ஏதாவது குற்றங் குறை யிருந்தால் தான் எனக்கு அந்த சக்தி யுண்டு.—பன்னிரண்டு வருடங்களாயும் இன்னும் நான் நளனிடத்தில் ஒரு தவறும் கண்டிலேனே!—தினத்திற்கு நூறு தவறுகள் செய்யும் மானிடருள் ஒருவனுன நளன் எப்பொழுதாவது ஒரு பிழையாவது இழையா திருப்பானு என்று எண்ணி இப்படி வீண் சபதம் செய்தேனே!—எனக்கென்ன என்று நான் சும்மா யிருந்திருக்கக் கூடாதா?— இப்பொழுது இவ் விதம் யோசித்து என்ன பயன்? நான் தேவர்களுக்கு எதிரில் சபதம் செய்த பிறகு, அதை எப்படி யாயினும், எவ்வளவு வருடங்களாயினும், நிறைவேற்றியே தீரவேண்டும்.—ஓர் அற்பமான குற்றம் கண்டாலும் போதும். உடனே அதே வியாஜமாக அவர்களை வருத்தி, நாட்டினின்றும் துரத்தி, இருவரையும் பிரித்து, அவர்களைப் பல துன்பங்களுக்கு உள்ளாக்குவேன்.— அவர்களைத் துன்பப் படுத்துவது இருக்கட்டும்; இவ் வாறிரண்டு ஆண்டுகளாக நான் படும் துயரத்திற்கு அளவு உண்டோ?. அவர்களோ!— நினைக்கவும் என் வயிறு பற்றி யெரிகிறதே!— நளனும் தமயந்தியும் சேர்ந்து, குளங்களிலும் சோலைகளிலும் அருவிகளிலும் குன்றுகளிலும் ஆறுகளிலும், விளையாடிப் புனலாடி, இணை பிரியாது, கூடிக் குலாவிக் களித்துக் காலம் கழிக்கிறார்கள். மேலும், அத் தமயந்தி காந்தி மிக்க ஓர் ஆண் பிள்ளையையும் அழகுருவான ஓர் பெண் மகவையும் பெற்று அக் குழந்தைகளுடன் கொஞ்சிக் குலாவுகிறாள். அவர்கள் இருவரும் இவ் விதம் இருக்கப் பார்த்தும் பொறுப்பேனு?— எப்படியாவது ஒரு குற்றம் கண்டு பிடிக்க வேண்டும்—(இடதுபுறம் நோக்கி) நளனும் தமயந்தியும் இதோ வருகிறார்கள்—என்ன களிப்பு!-என்ன கொஞ்சுதல்!- இவற்றைக் கண்டு எப்படி சகிப்பேன்?— ஆகட்டும்— (வலதுபுறம் மறைந்துகொள்கிறான்.)

(நளன், தமயந்தி, கையில் வில்லேந்திய இந்திரசேனன், விளையாட்டுப் பொம்மைகளுடன் இந்திரசேனை, தோழி விருஹத்ஸேனை இடதுபுறம் வருகிறார்கள்.)

நளன்:— கண்ணே! இங்கு சற்று உட்காருவோம்.— (இருவரும் கல் மேடையில் உட்காருகிறார்கள்.)—தென்றல் ஸுகமாக வீசுகின்றது. இனிமையான உனது குரலோடு ஒரு பாட்டுப் பாடுவாய்.

தம:— பிராணநாதா! அப்படியே ஆகட்டும்.— விருஹத்ஸேனு! குழந்தைகளை அழைத்துக்கொண்டு விளையாடச் செல்— இந்திரசேனு! உனது தங்கையுடன் அதோ அங்கு விளையாடிக்கொண்டிரு; நான் சற்றுக் கழித்துக் கூப்பிடுகிறேன்.— (குழந்தைகளுடன் விருஹத்ஸேனை இடதுபுறம் செல்கிருள்.)— நாதா! யாழை எடுத்துவரச் சொல்லவா?

நள:— பிரியே! உனது இனிய குரலுக் கிணையாமோ யாழினிசையும்? மேலும், உனது குரலைக் கேட்கவும் என் மனம் களிக்குமா போல் ஆனந்திக்குமோ வீணையின் நரம்புகளை நீ வருடும்போது?. என் அருகில் உட்கார்ந்து கொண்டு சற்றுப் பாடுவாய்.

தம:—S. (பாடுகிருள்.) (நளன் கைத் தாளம் போடுகிருன்.)

நள:— என் அன்பே! இன்று அரசு செலுத்துகையில் எனக்கிருந்த வேலையினுல் மிகவும் களைப்புற் றிருந்தேன். அவ்வளவும் எங்கோ பறந்து விட்டது உன் கீதத்திற்கு முன் நில்லாமல்.

தம:— பிராணேசா! கவலையினுலேனும் தொழிலாலேனும் கணவர் மனமும் தேகமும் தளர்வுற்று இருக்கும் போது ஸங்கீதத்தைக் கொண்டும் பணிவிடைகளைக் கொண்டும் தேற்றுவ தல்லவோ என் போன்ற ஸ்திரீகளின் கடமை?

நள:—வெகுநாளாய் ஸங்கீதத்திற்கு இந்த சக்தியுண்டு என்றும், மனோ வியாதிக்குப் பரம ஔஷதம் என்றும், அது ஒப்புயர் வற்ற ரஸாயனம் என்றும் சொல்லக் கேட்டிருந்தும், இன்று தான் நேரிற் கண்டு அனுபவித்தேன்.—

தம:— இது வரையில் நான் உங்களிடம் பாடிய தில்லையா?

நள:—பாடி யுள்ளாய்.— ஆயினும் இன்றைக்கு ஏனோ எனக்குந் தெரியாமல் ஓர் ஆனந்தம் உண்டாகின்றது.— கண்ணே! நீ பாடிய பாட்டில் ஏதோ நான் உன்னை விட்டுப் பிரிவேன் என்று குற்றஞ் சாற்றுவது போல் இருந்ததே?

தம:—பிராணபதி! அதெல்லாம் ஒன்று மில்லை.—எப்பொழுதும் தன்னை விட்டுக் கணவர் பிரியக் கூடா தென்றிருப்பது என் போன்ற மாதர்களுக்கு இயல்பாக வுள்ள எண்ணம். அதை வெளி யிட்டேன்— அவ்வளவுதான்.— புருஷர் களுக்கோ பல வேலைகள்— ராஜ்யபாரம், வேட்டையாடல், முதலியன— இருக்கின்றன. எங்களுக்கு எங்கள் கணவர் பாத கமலங்களைத் தவிர வேறு எண்ணம் உண்டோ? எங்கள் கொழுநரைத் தவிர எங்களுக்கு வேறு தெய்வமும் உண்டோ?

நள:—காந்தாமணி! எவ் வேலையி லிருப்பினும், எங் கிருப்பினும் என் மனம் உன்னிடத்திலேயே யிருக்கின்றது. உன் பக்க லில் இல்லாதபோது உயிர் வாழ்ந்திருப்பது போலில்லையே! உன்னோடு இருக்கும் போதும், உன் கையால் நீ எனக்கு உபசாரங்கள் செய்யும் போதும், உனது குயிலினும் இனிய குரலால் பேசும் போதும் பாடும் போதும் தான், நான் உயிர் பெற்றவனாகிறேன், என் உடலும் என் மனமும் என் உயி ரும் களிப் படைகின்றன.—அஸ்தமிக்கும் ஸமய மாயிற்று. இனி நாம் கடவுளைத் தியானிக்க வேண்டும். சேடியைக் கூப்பிட்டுக் கால் கை கழுவ நீரும், சந்தி அளிப்பதற்கு ஜலமும் கொண்டு வரச் சொல்வாய்.

தம:—அவ் வேலை எனதல்லவோ?—இதோ வருகிறேன். (இடது புறம் போகிறாள்.)

நள:—(தனக்குள்) இவ்விதம் கற்புடைய மாதர்கள் இருப்ப தால் அல்லவோ நமது நாடு பெருமை வாய்ந்து புனித நாடாய் இருக்கின்றது!— இந்திராதி தேவர்களுக்கு நான் வாக் களித்தபடி, அவர்களுக்குத் தூதனாய்ச் சென்று, அவர்களை மணக்கும்படி இவளை மனப்பூர்வமாய்வேண்டியும் ஸுரபதியையும் திரஸ்கரித்து என்னைக் காதலித்த இவளை மனைவியாகப் பெறுவதற்கு நான் பூர்வ ஜன்மங் களில் என்ன தவம் செய்தேனோ! என் பின் தூங்கி முன் எழுந்து, எனக்கு எல்லாப் பணிவிடைகளையும் செய்து, என் குறிப்பு அறிந்து ஒழுகி, எப்பொழுதும் தன் மெய்

வருத்தத்தையும் பாராது என் ஸௌக்கியத்தையும் ஸந்தோஷத்தையுமே முன்னேக்காகக் கருதி, நான் உண்ணும் போதும் உலாவும் போதும் உறங்கும் போதும் என்னைக் களிப்பித்து, என் உடலுக்கு உயிராய் இருக்கிருள்.—சற்று முன்பு பேசிக்கொண் டிருந்தபடி,— இவளை விட்டுப் பிரிய நேரிட்டால்,—

(தமயந்தி ஒரு பெரிய செம்பும் ஒரு சிறிய செம்பும் கைகளில் ஏந்தி இடதுபுறம் வருகிருள். பெரிய பாத்திரத்தைக் கையில் வாங்கி, நளன், யோசனையி லாழ்ந்தபடியே, கால் கழுவாது கைகளைமாத்திரம் கழுவி வாய் கொப்பளித்து விட்டு, அச் செம்பைக் கீழே வைத்துவிட்டு, சிறிய பாத்திரத்தை வாங்கிக்கொண்டு, சந்தியாவந்தனம் செய்கிருன்).

தம:— S. (தியானித்துப் பாடுகிருள்).

நள:—(சிறிய பாத்திரத்தைக் கீழே வைத்துவிட்டு) ஏனே எனது இடது புருவம் துடிக்கின்றதே!

தம:— (கவலையுடன்) ஒன்று மிராது, நாதா! நமது ஈசன் கருணையுள்ள வளவும், நாம் அவரையே நம்பி யுள்ள வரையிலும், நமக்கு ஒரு தீங்கும் நேரிடாது.— கவலைப் பட வேண்டாம்.—

(இரண்டு குழந்தைகளும் சண்டை யிட்டுக்கொண்டே இடதுபுறம் வருகிருர்கள்).

சேனை:— (ஓடிவந்து அழுதுகொண்டு) அம்மா! அண்ண என் வீட்டை யிடித்துவிட்டான்.

தம:— இந்திரசேனு! ஏன் உன் தங்கையை அழச் செய்கிருய்? இது உனக்கு நியாயமா?

சேனன்:— அம்மா! இன்றைய தினம் என் உபாத்தியாயர் எனக்கு வில் வித்தை கற்றுக் கொடுத்தார்.—

நள:— அதை உபயோகித்துப் பார்த்தாயோ?— மிகவும் நன்ருயிருக்கிறது!— அதற்காக இவளை அழச் செய்வதா?

சேனன்:— இல்லை அப்பா! விளையாட்டாகச் செய்தேன்—சேனீ! இதோ பார்!— உனக்குப் பெரிய வீடு நான் கட்டித் தருகிறேன்.

சேனை:— (கண்களைத் துடைத்துக்கொண்டு) எப்போ?

சேனன்:— இதோ!— அம்மா! நான் பெரியவனுய், எதிரிகளை ஜயித்து, அவர்கள் பட்டணங்களை யெல்லாம் பிடித்தால், என் தங்கைக்கு அங்கே எவ்வளவு வீடுகள் தருவேன்!—

சேனை:— எனக்கு இப்போ வேணும்—

சேனன்:—வா! நான் கட்டித் தருகிறேன் (தங்கையின் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு இடதுபுறம் செல்கின்றான்).

நள:— (நகைத்து) இத் தகைய குழந்தைகள் இல்லாவிடில் இல்லற வாழ்க்கை எதற்கு?—

“கல்லா மழலைக் கனி யூறல் கலந்து கொஞ்சும்
சொல்லா லுருக்கி யழு தோடித் தொடர்ந்து பற்றி
மல்லார் புயத்தில் விளையாடுகின்ற மைந்தர்கள்
இல்லா மனை வாழ்க்கையின் இன்ப மென்னும்?”

தம:—இந்திர சேனனுக்கு இப்போது முதல் உள்ள வீரத்தைப் பார்த்தீர்களா?— இல்லாமற் போமா உங்கள் மகனு யிருந்தும்?

நள:— அவர்கள் உள்ளவரையில் நமக்கு என்ன குறைவு?

(இந்திரசேனை இடதுபுறம் பயந்து ஓடி வருகிறுள்.)

சேனை:—அம்மா! அப்பா! போகும் போது ஏதோ கறுப்பாய்த் தெரிந்தது— பயமா யிருக்கு— (அவளைத் தமயந்தி வாரி யணைக்கிறுள்.)

நள:— ஒன்று மிராது— பயப்படாதே— வா— போவோம். (மூவரும் இடதுபுறம் போகிறுர்கள்.)

(கலிபுருஷன் வலதுபுறம் முன் வருகிறுன்).

கலி:—(பெருமூச்செறிந்து) அப்பா!—இவ்வளவு நாளாயிற்று!— இன்றே பலித்தது— கண்டுபிடித்து விட்டேன் குற்றம்— இனி யெனக்குக் கொண்டாட்டம்; தேவர்கள் முன் தைரிய மாகச் செல்லலாம்.—இன்று நளன் கால் கழுவாமல் சந்தி செய்தது எனது பாக்யமே! என்னைக் காப்பாற்றுவதற்கே

கடவுள் அவனுக்கு அவ் விதம் புத்தியைக் கெடுத்தார் போலும்!— இதற்காகவா அவர்களை வருத்துவது?—ஆம்! பொறுத்தால் இனி எவ்வளவு வருடங்க ளாகின்றனவோ இன்னும் ஒரு பிழை காண?— முடியாது— இதே போதும்.— அவர்களை இந்த நாட்டினின்றும் துரத்திப் பிரித்து வருத்தவேண்டும்.— இதற்கு என்ன செய்வது?— (சற்று யோசித்து) நளனுக்குச் சூதாடுவதில் பைத்தியம். அதைக் கொண்டே நம் எண்ணத்தை நிறைவேற்ற வேண்டும்.—புஷ்கர ராஜனும் சூதாட்டத்தில் பிரீதி யுள்ள வன்; மேலும் சிற்றரசன்; நளனுடைய செல்வத்திலும் அரசிலும் கண் வைத் துள்ளவன்; நளனுக்குப் பங்காளி.— அவனைக் கொண்டு தான் நம் காரியத்தை நிறைவேற்ற வேண்டும். இதற்குத் துவாபரனையும் நமக்கு உதவி புரியும்படி கேட்டுக் கொள்வோம்.— உடனே எல்லாம் செய்து முடிக்கவேண்டும்— இனி தாமதிக்க லாகாது— (வலதுபுறம் போகிறான்.)

அங்கம். 1.
காட்சி. 2.

[புஷ்கர ராஜனுடைய அரண்மனைத் தோட்டத்தில் ஓர் பாதை—மாலை—கலி புருஷன் யோசித்த வண்ணம் வலது புறம் வருகிறான்.]

கலி:—(தனக்குள்) துவாபரனைக் கண்டேன். இருவரும் இரண்டு பாய்ச்சிக்கைகளாக மாறி விட்டால், புஷ்கரன் என்ன பந்தயம் வேண்டுகிறானோ அவ் விதம் நாங்கள் புரண்டு விழலாம் என்று ஏற்பாடு செய்துகொண்டோம்— இனி புஷ்கரன் சுலபமாய் நளனை வென்று விடுவான்.— என்னுடைய சபதம் நிறைவேறும்.— நான் புஷ்கரனுடன் கலந்து பேசி யெல்லாம் ஏற்பாடு செய்துகொண்டு துவாபர னுக்குத் தெரிவிக்க வேண்டும்—(இடதுபுறம் நோக்கி) அதோ வருகிறான் புஷ்கரன்.— ஆனால், அவன் யாருடனோ வரு கிறான்.— அவன் தனித் திருக்கும் சமயம் பார்த்து

அவனுடன் பேச வேண்டும்.— இங்கு சற்று மறைந்து கொள்கிறேன்.— (வலதுபுறம் மறைந்துகொள்கிறான்).

(புஷ்கரனும் வலது கையில் ஒரு ஜாதகம் ஏந்திய ஒரு சோதிடரும் பேசியவண்ணம் இடதுபுறம் வருகிறார்கள்.)

புஷ்:— ஜோஸ்யரே! என் ஜாதகத்தை நன்றாய்ப் பார்த்தீரா?

சோதி:— மஹாராஜா! நன்றாய்ப் பார்த்தேன்.— பாவ சக்ரம், தசவர்க்கம், அஷ்டவர்க்கம், எல்லாம் போட்டுப் பார்த்தேன்.— இம் மாதிரி யோக ஜாதகம் பார்த்ததே யில்லை.—அநேக யோகங்கள்.—

புஷ்:— அதெல்லாம் இருக்கட்டும்,— பலனென்ன?

சோதி:— மஹாராஜா! அது தான் சொல்ல வந்தேன்.—(கையில் ஜாதகத்தை வைத்துக் கொண்டு பார்த்த வண்ணம்) மகர லக்னம்— லக்னத்தில் செவ்வாய்— நாலில் சூரியன், சந்திரன்— பேஷ்!—ஐந்தில் சுக்கிரன், புதன்— ஹா ஹா!— ஏழில் குரு, இராகு— சரி தான்— பத்தில்— சனி யிருக்கிறதே?— ஆனால்—



புஷ்:— என்ன மயங்குகிறீர்?

சோதி:—ஒன்றுமில்லை.—நான்கு கிரஹங்கள் உச்சஸ்தானங்களி லிருப்பதாலும், அந்த ஸ்தானங்களில் ஒன்று லக்னமாயும் இன்னொன்று தசமமாயும் இருப்பதாலும், மஹா ராஜா ஒரு பெரிய சக்ரவர்த்தி யாக வேண்டும்.—

புஷ்:—எப்பொழுது?

சோதி:—கூடிய சீக்கிரத்தில்—இந்த தசை—புக்தி—அந்தரம்— சரிதான்—இன்னும் ஒரு வாரத்திற்குள்—

புஷ்:— (நகைத்து) ஜோஸ்யரே! புளுகினாலும் பொருந்தப் புளுகவேண்டும்.—

சோதி:—மஹாராஜா! உங்கள் திருப்திக்காக நான் சொல்ல வில்லை.—உங்கள் ஜாதகம் சரியானதாக இருந்து, சோதிட ஞானமும் எனக்கு உண்டானால், நான் சொல்லியபடி ஒரு வாரத்திற் குள்ளாகவே—இரண்டு நாட்களுக் குள்ளேயே—தாங்கள் சக்ரவர்த்தி யாவது நிச்சயம்.— சோதிட சாஸ்திரம் உண்மை யானது.—நான் சொல்லியபடி ஆகா விடில், நான் என் பூணூலை அறுத்து விட்டு எனது ஜோஸ்ய புஸ்தகங்களைக் கட்டி ஆற்றிற் போடுகிறேன்.— இது ஸத்யம்!

புஷ்:—ஸந்தோஷம்! நீர் சென்று நம் அரண்மனையில் இரும். உமக்குத் தக்க பரிசுகள் அளிக்கிறேன்.—நன்றாய் இருட்டி விடும் முன் நான் சற்று உலாவி வருகிறேன்.— (சோதிடர் வணங்கி இடது புறம் செல்கிறார்.) — இவர் சொல்வது மாத்திரம் உண்மை யானால்?—

(கலி புருஷன் வலதுபுறம் முன் வருகிறான்.)

கலி:—புஷ்கர ராஜனே!

புஷ்:—(திடுக்கிட்டு) யார்?

கலி:—நான் தான் கலி புருஷன்.

புஷ்:—(பயப்பட்டுக் கை கூப்பி) என்ன அபராதப் பட்டேன் தாங்கள் என் முன் தோன்ற?—என்ன விசேஷம்?

கலி:—பயப்பட வேண்டாம்.—உனக்கு மங்கள முண்டாகுக!—உன்னால் ஒரு காரிய மாக வேண்டும்.—

புஷ்:—காத்துக் கொண் டிருக்கிறேன்.—உத்தரவுப்படி செய் கிறேன்.

கலி:—நிடத நாட்டரசன்—நளன்—உனது பங்காளி—சூதாட் டத்தில் தன்னை வெல்வார் எவரு மிலர் என்று கர்வ மடைந் திருக்கிறான். அவன் கர்வத்தை அழிக்க வேண்டும். நீ அவனுடன் சூதாடி அவனை ஜயித்து, மனைவி மக்களுடன் நாட்டினின்றும் துரத்தி, நாட்டைக் கைக் கொண்டு, சக்ரவர்த்தியாய், செல்வத்துடன் வாழலாம்.

புஷ்:—(சந்தோஷத்துடனும், ஆத்திரத்துடனும்) ஆகட்டும்! நிரம்பவும்— வந்தனம்— ஆனால்—எப்படி அவனை ஜயிப்பது?—என்னால் முடியுமோ முடியாதோ?

கலி:—நான் இருக்கையில், அதைப்பற்றி நீ கவலைப் படுவானேன்?

புஷ்:—உமது தய விருந்தால் எனக் கென்ன கவலை?

கலி:—நானும் எனது நண்பன் துவாபரனும் உதவி புரிகின்ருேம். நாங்கள் இருவரும் பாய்ச்சிக்கைகளாய் மாறி நீ எந்த விருத்தம் கேட்கின்ருயோ அதே விதமாய்ப் புரண்டு விழுகிருேம்.—நீ தைரியமாய் உடனே புறப்படு.

புஷ்:—(கை கூப்பி வணங்கி) சனி பகவானே! என் மீது கருணை புரிந்து உதவி யளிக்கும் உமக்கும் துவாபரர்க்கும் அநேக வந்தனம். இந்த உபகாரத்தை என்றும் மறவேன்.—இதோ புறப்படுகிறேன்.—நாளைக் காலையில் நளனது அரண்மனையில் வந்து சேருகிறேன்.

கலி:—நானும் துவாபரனும் அங்கு வந்து சேருகிருேம். (புஷ்கரன் கை கூப்பித் தலை வணங்க, கலி புருஷன் வலதுபுறம் போகிருன்.)

புஷ்:—(தனக்குள்). சோதிடன் சொல்லியது அனைத்தும் உண்மை! இவ்வளவு சீக்கிரத்தில் பலிக்குமென்று நான் நினைக்க வில்லை!—நமக்கு இது கிடைக்குமென்று நான் கனவிலும் கருதவில்லை.—எவ்வளவு நாளாய் அந்த நளனது ராஜ்யத்தை அடைய வேண்டுமென்று எண்ணியிருந்தேன்? அது இன்றே பலித மாயிற்று!—சோதிடன் சொல்லியபடி இது நல்ல காலம் என்று ஏற்படுகிறது.— காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள வேண்டும்.— (ஸந்தோஷமாக வலதுபுறம் போகிருன்.)

அங்கம் 1.

காட்சி 3.

S. [நிடத நாடு: அரண்மனையில் ஒரு மண்டபம்—காலை— நளன் மந்திரிமார்கள் புடை சூழ கொலு வீற்றிருக்கிருன். ஒரு நடன மாது நடனம் ஆடுகிருள்; ஸங்கீதம் கேட்கின்றது.]

நளன்:—(மன வருத்தம் முகத்தில் விளங்க) இவை யெல்லாம் இன்று எனக்கு உத்ஸாஹம் உண்டாக்கவில்லை.—

மந்திரி 1:—என்ன?—ஏன் முகம் ஒருவாறு இருக்கின்றது?

நள:—ஒன்று மில்லை.—நேற்றிரவு சரியாய்த் தூக்கம் பிடிக்க வில்லை—ஒரு கெட்ட கனவு கண்டேன்.—

மந் 2:—கனவுக்காக வருந்தலாமோ?

நள:—அல்ல—சில முன் தோற்றங்களையும் சேர்த்துக் கவனித் தால், அது யோசிக்க வேண்டிய தாகிறது.—

(ஒரு சேவகன் இடது புறம் வருகிறான்.)

சேவ:— (வணங்கி) சக்ரவர்த்தி! புட்கர ராஜா தனது பரிவாரங்களை அரண்மனைக்கு வெளியில் நிறுத்தி விட்டுச் சிலர்களுடன் மாத்திரம் வந்திருக்கிறார்.

நள:—உள்ளே வரச் சொல்.—(சேவகன் வணங்கி இடதுபுறம் போகிறான்.)—புஷ்கரன் நம்மைக் கண்டு வெகு நாட்களாய் விட்டது. மிகவும் சந்தோஷம்!—அவனது பரிவாரங் களுக்குத் தேவையானவை யெல்லாம் உடனே அளித்துப் புஷ்கரன் நம்முடன் தங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யுங்கள்.— நாட்டிய மாதர்கள் முதலானோர்களும் செல்லலாம்.

மந் 1:—அப்படியே!—(முதல் மூன்று மந்திரிகளைத் தவிர மற் றெல்லோரும் வணங்கி இடதுபுறம் செல்கின்றார்கள்.)

(புஷ்கரன் கர்வமாய்ச் சிலருடன் இடதுபுறம் பிரவேசிக் கிறான்; சேவகனும் வருகிறான். கூட வந்தவர்களில் ஒருவன் கையில் ஒரு கொடியைப் பிடித் திருக்கிறான்.)

நள:—(எழுந்திருந்து கைகூப்பி) வர வேண்டும்.— ஆஸனத்தில் அமர வேண்டும்.—(புஷ்கரன் தலை வணங்காது உட்காரு கிறான்; நளனும் உட்காருகிறான்.)

மந் 1:—(ஒரு பக்கமாய்) என்ன இறுமாப்பு!

நள:—முன்பாகத் தெரிவிக்காமல் திடீரென்று வந்தீரே, என்ன விசேஷம்?

புஷ்:—தாயம் ஆடுவதில் உம்மிலும் மிக்கவர் இல்லை யென்று நீர் கர்வங் கொண்டதாகக் கேள்விப் பட்டேன். நான் "சூது வெல்லுங் கொடி" எடுத் திருப்பதால், உம்முடன் ஆடி உமது திறத்தைக் காணலா மென்று வந்தேன்.

நள:— அப்படியா!— நான் கவருடுதலில் ஆசை யுடையவ னெனினும், நான், மிக்க வல்லமை யுடையான் என்ற கர்வம் ஒருகாலும் கொள்ளவில்லை.—ஆயினும், ஆடுதலில் உமக் கிஷ்ட மிருந்தால், நான் உம்மையும் வெல்லக் கூடும் என்று எண்ணுகிறேன்.

புஷ்:—ஏன் வீண் பேச்சு?—ஆடினல் தெரிகிறது.— என்ன சொல்கிறீர்?

நள:—இதோ ஆடுவோம்.—சேவகா! ஆட்டப்பலகையை எடுத்து வா இங்கு.—(சேவகன் வலதுபுறம் போகிருன்.)

மந் 1:— மஹாராஜா! ஒரு விண்ணப்பம்.— தாங்கள் விநோ தார்த்தமாய் எங்களுடன் ஆடுவதே தகுதி யென்று பன் முறை நாங்கள் கூறி யிருக்க, இவ்விதம் போட்டி போட்டு ஆடுவது மிகவும் தவருகும்.

புஷ்:—எல்லாம் விளையாட்டுத்தானே!

(சேவகன் சொக்கட்டான் பலகையை யெடுத்து வலது புறம் வந்து நளன் முன் வைக்கிருன். புஷ்கரன் தனது பாய்ச்சிக்கைகளைக் கையில் எடுத்துக் குலுக்குகிருன்.)

நள:—(புஷ்கரனைப் பார்த்து) வாரும், நாம் ஆடுவோம்.

மந் 1:—மன்னரே! விநோதமாய் ஆடுகின்றீர்களோ? பந்தயம் வைத்து ஆடுகின்றீர்களோ?

புஷ்:—பந்தயம் ஒன்று மில்லாமற் போனல் ஆட்டத்தில் ருசி யுண்டாகுமோ? ஏதோ 200 தோற்றேன் 300 ஜயித்தேன் என்ருல் யார் கவனிப்பார்? பந்தயம் வைத்தால் தான் ஊக்கம் உண்டாகும்; ஆட்டம் இன்பமா யிருக்கும்.

நள:—அப்படியே!—

மந் 1:—அரசே! தாம் அவ்விதம் ஆடுவது அடாது.—

காதல் கவருடல் கள்ளுண்டல் பொய்ம் மொழிதல்
ஈதல் மறுத்த லிவை கண்டாய்—போதில்
சினையாமை வைகுந் திருநாடா! செம்மை
நினையாமை பூண்டார் நெறி.—

இதெல்லாம் இழிவோர் செய்யும் செய லல்லவா?

புஷ்:—(சிரித்து) கேட்டதற்குப் பதில் கூறுவதுதான் மந்திரிகள் கடமையா யிருக்க, நீரே ஏன் வலுவில் இவ் விஷயத்தில் தலை யிட்டுக் கொள்கிறீர்?—மேலும், நீங்களெல்லோரும் கவறு ஆடுவது உண்டு என்று சற்று முன்பு நீரே ஒப்புக் கொண்டீ ரல்லவா?

மந் 1:—அது விளையாட்டாக—இதுவோ அப்படி யில்லையே?—

ஆயம் பிடித்தாரு மல்லற் பொது மகளிர்
நேயம் பிடித்தாரு நெஞ்சிடையே—மாயம்
பிடித்தாரின் வேறல்ல ரென்றுரைப்ப தன்றே
வடித்தாரின் னூலோர் வழக்கு.—

ஐயோ! பித்துப் பிடித்தவர் செய லல்லவோ இது? செங் கோலரசர் செய்யத் தக்க செய்கையா இது?

மந் 2:—மன்னர் மன்னரே! கவறுடுதல் சாஸ்திர விரோதமும் நியாய விரோதமு மாயிற்றே!

புஷ்:—சாஸ்திரத்தையும் நியாயத்தையும் நீர் தான் கண்டீரோ?

மந் 1:—அரசே! இச் சூது மிகக் கொடிது. இதனைக் கைப் பிடித்த லாகாது. இதனால் உண்டாகும் கெடுதிகளை இன்னும் சொல்கிறேன் கேளும்:—

அறத்தை வேர் கல்லும் அரு நரகிற் சேர்க்கும்
திறத்தையே கொண் டருளைத் தேய்க்கும்—மறத்தையே
பூண்டு விரோதஞ் செய்யும் பொய்ச் சூதை மிக்கோர்கள்
தீண்டுவரோ எண்ணாய் தெளிந்து.

மந் 2:—மன்னரே! சூதாடுவதால் பல கெடுதல்கள் நேரிடும்:—

ஐய! நீ யாடுதற் கமைந்த சூது மற்
றெய்து நல்குரவினுக் கியைந்த தூது வெம்
பொய்யினுக் கருந்துணை புன்மைக் கீன்ற தாய்
மெய்யினுக் குறுபகை யென்பர் மேலையோர்.—

புஷ்:—(நகைத்து) நள மஹாராஜனே! கேளும்.—(மந்திரிகளைப் பார்த்து) முடிந்ததோ உங்கள் பிரஸங்கம்? இன்னும் உண்டோ?

மந் 1:—நள மஹாராஜரே! நாங்கள் என்ன சொல்ல விருக்கிறது? உமக்குத் தெரியாதது ஒன்று மில்லை. உம் முடைய தகப்பனார் வீரசேனர் காலம் முதல் நான் அரண்மனையில்

இருக்கின்றேன். இது வரையில் என் வார்த்தையைத் தட்டாது இருந்ீரே! இப் பொழுதும் நான் சொல்வதைக் கேளும்.—ஐயனே! வேண்டாம்—இம் மாயச் சூது ஆட வேண்டாம்—தரும நெறி தவறாத உம்மைப் போன்றவர் மிகக் கொடிய இந்த சூது ஆட லாகுமோ?—

உரு வழிக்கு முண்மை யுயர்வழிக்கும் வண்மைத்
திரு வழிக்கு மானஞ் சிதைக்கும்—மருவும்
ஒருவரோ டன்பழிக்கு மொன்றல்ல சூது
பொருவரோ தக்கோர் புரிந்து?

மந் 3:—மஹா ராஜா! நாங்கள் இவ்விதம் எடுத் தெடுத்துச் சொல்லியும் ஒன் றும் கூறாது இருக்கின்றீரே!

புஷ்:—கூறுவ தென்ன?—நள மஹாராஜனே! ஆடப்போகிறீரா? இல்லையா?—உமக்கு ஆடச் சம்மத மில்லை யென்றால், நீர் பயந்தீர் என்றும் தோல்வி யடைந்தீர் என்றும் கொள் வேன், நான் வெற்றி யடைந்தவ னாவேன், என் சூது வெற்றிக் கொடியை இன்னும் உயர்த்திப் பிடிப்பேன். (தன்னுடன் வந்தவ னிடத்திலிருந்து கொடியை வாங்கித் தூக்கி ஆட்டி மறுபடியும் அவனிடம் கொடுக்கிறான்.)—என்ன சொல்கிறீர்?

நள:—சம்மதித்தேன்.—(மந்திரிகளை நோக்கிக் கோபித்து) தீது வரினும் வருக, நலம் வரினும் வருக; நான் மன மொப்பிச் சூதாட இசைந்து சொல்லி விட்டேன். உயி ரிழக்க நேரிடினும் நான் சொன்ன சொல் தவற மாட்டேன். ஆகையால், நீங்கள் தடுக்க வேண்டாம்.— (புட்கரனை நோக்கி) வாரும், ஆடுவோம். (மந்திரிகள் வருத்தப்படு கின்றனர்.)

புஷ்:—(சந்தோஷித்து) நல்லது, நீர் உண்மையில் ஆட இசைந்தீ ராகில், பந்தயம் என்ன வைக்கின்றீர்?

நள:—நான் என் நவ ரத்தின மோதிரத்தைப் பணயமாக வைத்தேன்.

புஷ்:—நானும் என் வயிர மோதிரத்தை வைத்தேன்.—உமது விருத்தம் சொல்லி ஆடும்.

நள:—"ஈராறு"—(பாய்ச்சிக்கைகளை எறிகிறான். சொன்ன படியே விழுகின்றன.)—நான் ஜயித்தேன்!

புஷ்:—மந்திரிகளே! பார்த்தீர்களா? உங்கள் அரசர் ஜயித்தார்.

மந் 1:—இதை நம்ப லாகாதே!—சூதாட்டத்தில் வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வருமே!

நள:—இப்பொழுது என்ன வைக்கிறீர்?— நான் எனது கடுக்கன்களை வைக்கிறேன்.

புஷ்:—நான் என் குண்டலங்களை வைக்கின்றேன்.

நள:—"நாலோரைந்து"— (எடுத்துப் போடுகிறான்)— நான் தோற்றேன்.

புஷ்:—இருந்தா லென்ன?— மறுபடியும் ஜயிக்கிறீர்— என் முத்து ஹாரத்தைப் பணயமாகச் சொல்கிறேன்.

நள:—என் ரத்ன ஹாரத்தைக் கூறுகிறேன்.

புஷ்:—(தன் பாய்ச்சிக்கைகளைக் குலுக்கி எறிந்து கொண்டு) "பகடை பன்னிரண்டு"— (அப்படியே விழுகின்றன)— ஜயித்தேன்!—எனது அடுத்த பந்தயம் எனது ரதம்— நீர் என்ன சொல்கிறீர்?

நள:—என் சதுரங்க சேனைகள்.

புஷ்:—"ஒரு நான்கு"—(விழுகிறது)—ஜயித்தேன்!— நிறுத்தலாமா?—உம் அதிருஷ்டம் இனி வரும் என்று தோன்றுகிறது—என்ன—ஆடட்டுமா?

நள:—(தலை யசைக்கிறான்.)

புஷ்:—சரி!—நூறு ஆயிரம் பொன் வைத்தேன்.

நள:—என் பொக்கிஷம் வைத்தேன்.

புஷ்:—"ஈரைந்து"—(விழுகிறது)—கொண்டேன்.—இனி, என் நாட்டையே வைக்கின்றேன்.

நள:—நானும் எனது நாட்டை வைக்கின்றேன்.

மந் 1:—மஹாராஜா! வேண்டாம்.—

புஷ்:—தடுக்கிறார்களே!—நீர் என்ன சொல்கிறீர்?

நள:—நீர் ஆடும்.

புஷ்:—(மனதில் கலி புருடனைத் தியானித்து) "நாலிரண்டு"— (விழுகிறது)—ஜயித்தேன்! அரசு கொண்டேன்!—பேஷ்! —இனி யெதை வைக்கிறா யடா?

நள:—(பெரு மூச்சு விட்டுக் கலங்குகிறான்.)

மந்திரிகள்:—(பிரமித்துக் கலங்கி வருந்துகின்றனர்.)

புஷ்:—உனது மனைவியை வைக்கலாமே?

மந்திரிகள்:—ஹா! ஹா! (வருந்துகிறார்கள்.)

நள:—ஐயோ! கெட்டேன்!—இப்படியும் ஆயிற்று என் விதி?—(மந்திரிகளைப் பார்த்து) உங்கள் வார்த்தையைக் கேளாது அழிந்தேனே! மதி மோசம் போனேனே!—(தனக்குள்) ஐயோ! தெய்வமே!— (புட்கரனைப் பார்த்து) அரசே! இனிச் சூதொழிந்தேன்.

புஷ்:—சரி! உன் நாடும், பொக்கிஷமும், சதுரங்க சேனையும், ஆபரணங்களும், எல்லாம் என தாயின. நீயும் உன் மனைவியும் உன் மக்களும், உங்கள் ஆடை ஆபரணங்களை யெல்லாம் கழற்றி விட்டு, ஒவ்வோர் ஆடையுடன் மாத்திரம், இந் நகரத்தை விட்டு இன்று மாலைக்குள் புறப்பட வேண்டும்.

நள:—அப்படியே! (தனது கிரீடம் ஆடை யாபரணங்களைக் களைகிறான்.)

மந் 1:—புஷ்கர ராஜனே! இதுவும் உமக்குத் தருமமோ?

புஷ்:— (கோபத்துடன் சீறி) உம்மைக் கேட்க வில்லை—சொன்னதைக் கேளும்—இல்லா விடில்—

நள:—ஐயோ! எனக்காக நீங்கள் அரசன் கோபத்திற்கு ஆளாக வேண்டாம்.—என் காரியத்தின் பலனை நான் அனுபவிக்கத் தானே வேண்டும்?—

புஷ்:—இங்கு அழுதுகொண்டிருக்க வேண்டாம்— செல்லலாம் —போடா.

நள:—(கை கூப்பி) செல்கிறேன்.—(இடதுபுறம் தலை வணங்கிக் கொண்டு சென்று, திரும்பி, எல்லோரும் வருந்துகிறதைக் கண்டு)— வருந்த வேண்டாம்— (கை கூப்பி) விடை யளியுங்கள்—(கை கூப்பிய வண்ணம், தலை குனிந்து, இடதுபுறம் போகின்றான்).— (எல்லோரும் இடதுபுறம் பின் தொடரப் போகின்றனர்.)

புஷ்:— நில்லுங்கள்— அவனுடன் செல்ல லாகாது.— (சிலர் நிற்கிறார்கள்.)— இனி ராஜ்யம் என்னுடையது—என் சொற்படி நடக்க வேண்டும். நாளைக் காலையில் சபை கூடும். அப் பொழுது என் அரசு முறை யெல்லாம் கூறு கின்றேன்.–இப் பொழுது நீங்கள் எல்லோரும் போகலாம்.—(எல்லோரும் இடது புறம் போகின்றனர்.)—(தனக்குள்) கலிபுருஷனுடைய உதவியா லல்லவா இவ்வளவு ஸாம்ராஜ்யமும் எனக்குக் கிடைத்தது?–அவரைத் தனிமை யிற் சந்தித்து, அவர் சொற்படியே நான் அரசாள்வேன்.—(வலதுபுறம் போகிறான்.)

அங்கம். 1.
காட்சி. 4.

[தமயந்தியின் ஏகாந்த அறை—பிற் பகல்—தமயந்தி மஞ்சத்தில் படுத்து உறங்கிக் கொண் டிருக்கிறாள்.—நளன் இடதுபுறம் வருத்தத்துடன் வருகிறான்.]

நள:—(தனக்குள்) எப்படிச் சொல்வேன்?—நேற்றைய தினம் பல அப சகுனங்கள் உண்டான பொழுதே ஏதேனும் தீங்கு வருமோ என்று நான் நினைத்ததும் ஒன்றும் வராது என்றனளே!—சிறிது நேரத்திற்குள் இந்திரசேனை ஏதோ கறுத்த உருவம் தோன்றிற்று என்று அலறி ஓடி வந்ததும் மகளை வாரி யணைத்து மனம் கலங்கினளே!—மேலும், நான் நேற்றிரவு ஒரு கெட்ட கனவு கண்டேன்—நாடு நகரம் எல்லாம் இழந்து காட்டுக்குச் சென்று மனைவி மக்களையும் இழந்ததாக—என்றதும் இன்று காலை மனம் துடித்தனளே!—ஹா! (பெருமூச்சு விட்டு)— மண்ணிழந்த துட னில்லாது மனைவி மக்களி னின்றும் பிரியவும் வேண்டி வருமோ?—என் செய்வேன்?—என் கண்ணே!—ஒன்று மறியாது தூங்குகின்றனையே! ஒருகாலும் பகலில் தூங்க மாட்டாயே! இன்று, இக் கேடுறுங் காலத்தில், என் மதி சோர்ந்தது போல் உன் உடல் சோர்ந்ததோ?—

தம:—(கனவில்) நாதா! எங்கு போனீர்?—

நள:—கனவு காண்கிறாள் அவளும் இவ் விதமே!—

தம:—(கனவில்) ஐயோ! பாம்பு விழுங்குகிறதே!—ஐயையோ!— (அலறி அழுது கொண்டு விழிக்கிருள்.)

நள:—கண்மணி!—(அவளைக் கையைப் பிடித்து எழுந்து உட்காரச் செய்கிறான். அவள் வெருண்ட பார்வை யுடன் நாலா பக்கமும் பார்க்கிருள்.)—கனவு கண்டாயா? (அவளைத் தடவிக் கொண்டு பக்கத்தில் உட்காருகிறான்.)

தம:—ஆமாம், நாதா! ஏதோ ஒரு கெட்ட கனவு கண்டேன்.— அதை நினைக்கவும் மனம் நடுங்குகிறது.—அதிருக்கட்டும் —என் தங்களுடைய முகம் வாடி யிருக்கின்றது?—ஏன் சொல்லத் தயங்குகிறீர்?

நள:—பிரியே!—(பெரு மூச்செறிந்து) ஐயோ! எப்படிச் சொல்வேன்?—(தலை குனிந்து கொண்டு) கண்ணே!— மந்திரிகள் தடுத்துங் கேளாது—புஷ்கரனுடன் சூதாடி— அரசும் நாடும் இழந்தேன்.—

தம:—ஹா! (மஞ்சத்தில் சாய்கிருள்.—நளன் அவளை ஆச்வாஸப் படுத்த அவள் மெல்ல எழுந்திருக்கிருள்.)

நள:—கண்ணே! மனம் தளராதே!—

தம:—நாதா! இப்பொழுது தான் கனவு கண்டேனே!— ஐயோ!—இதற்குள் அக் கனவு பலிக்குமா!—நாதா! ஒரு நாளும் தருமத்தினின்றும் தவருத நீங்கள் இன்று இவ் விதம் சூதாட இசைய வேணுமோ!—மந்திரிமார்களும் சும்மா இருந்தனரோ?—

நள:—கண்மணி! என் புத்தி கெட்டு நான் தவறிழைத்தால் அவர்கள் என் செய்வார்கள்? அவர்கள் எடுத்தெடுத்து நீதிகளைக் கூறினர்கள். ஆனல்,—கெடுங் காலத்திற் கேற்றபடி—எனக்கு அவ் வாட்டத்தில் இயல்பாக வுள்ள ஆசையுடன், இன்றைய தினம், புட்கரன் ஏளனமாயும் இறுமாப்புடனும் பேசியதும், என் மனம் முற்றும் கெட்டு அவ் வாட்டத்திலேயே நின்றது; அவனைத் தோற்கடிக்க வேண்டும் என்ற எண்ணம் உதித்தது; மந்திரிகள் சொல்லியது ஒன்றும் என் காதில் விழ வில்லை.—ஐயோ! உன்னைப் பார்க்கவும் வெட்கமாய் இருக்கிறதே! (முகத்தை மூடிக்கொண்டு வருந்துகிறான்.)

தம:—(நளன் கைகளைப் பிடித்துக் கொண்டு) நாதா! மன்னிக்க வேண்டும், நான் தங்களைக் கடிந்து கூறியதற்கு.—பிராணேசா! இனி அதைப் பற்றி யோசித்து என்ன பயன்? மேல் நடக்க வேண்டியதைக் குறித்துக் கவனிப்போம்.—எல்லாம் தெய்வத்தின் கூத்து!

நள:—தெய்வம் என்ன செய்யும், நமக்குப் புத்தியை அளித்த பிறகு அதை நாம் சரியாக உபயோகிக்கா விட்டால்? நாம் செய்யும் காரியத்தின் பலனை நாம் தானே அனுபவிக்க வேண்டும்! அத் தெய்வம் மந்திரிகள் மூலமாய் என்னைத் தடுக்க வில்லையா?—என் புத்தி கெட்டது; நான் தவறினேன்; நான் தோல்வி யடைந்தேன்; அதன் பலனை நான் அனுபவிக்க வேண்டும்.—ஆனால், கண்மணி! ஸகல ஸம்பத்துடன் உன் பெற்றோர்க்குத் தனிப் பெண்ணாய்ப் பிறந்து ஸர்வ ஸௌக்யங்களையும் அனுபவித்து வருத்தம் என்பதே தெரியாமல் இருந்த உனக்கும் கேடு விளைவித்து விட்டேனே என்பதை நினைத்தால், என் துக்கம் அடக்க முடிய வில்லையே!—

தம:—பிராண நாதா! தாங்களே கஷ்டப்படும் போது உங்கள் நிழலாகிய எனக்குக் கஷ்டம் என்பதும் உண்டோ?—இனி வருந்த வேண்டாம்.—

நள:—கண்மணி! வருத்தம் வந்த போது கணவனைத் தைரியப் படுத்துவது குல மகளிர்க்கு இயற்கை என்ற முது மொழியின் உண்மையை இன்றே கண்டேன். பெண் பாலாகிய நீ மன வுறுதி யுடன் இருக்குங்கால் நான் தளர்ச்சி யடைவது பேதைமை—முழுதும் பேதைமை—நீ சொல்வது உண்மை—செய்தது செய்தாய் விட்டது—இனி, யோசித்து என்ன பயன்?—வருந்தி யாவது என்?—ஆம்; ஆம்—கண்மணி! புட்கரன் உத்தரவுப்படி நாம் இன்றே இவ் வரண்மனையை விட் டகல வேண்டும்.

தம:—உடனேயா புறப்பட வேண்டும்?

நள:—ஆம்!—அவன் கொடியவன்.— உடனே புறப்படா விட்டால் நமக்கு அவமானம் நேரிடும்.

தம:—சரி—இவ் வூரிலேயே எங்கேனும்—

நள:—பிரியே! அது கூடாது—இந் நாட்டெல்லை விட்டேக வேண்டுமாம்.

தம:—ஹா!—எங்குச் செல்வது?

நள:—முதலில் இந் நகர் விட்டு நீங்குவோம். போக வேண்டிய இடத்தைப் பற்றிப் பிறகு யோசிப்போம்.

தம:-ஐயோ! எங்கே சென்றாலும், நாம் இன்னாரென் றறிந்தால், எல்லோரும் நம்மை இகழாரோ?—செல்வ மிழந்து—

நள:—நம் செல்வக் குழந்தைகள் எங்கே? அவர்கள் மழலைச் சொற்களைக் கேட்டாலும் நம் துக்கம் தீருமே!—சிறு குழந்தைகளான அவர்களுக்கும் என்னால் இக் கதி வாய்க்குமோ?—(வெளியில் இடதுபுறம் ஓசை யுண்டாக அதைக் கேட்டு) ஏதோ அரவ முண்டாகிறது.—நாம் இனி தாமதிக்க லாகாது.—நமது குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு உடனே இந் நகர் விட்டு நீங்க வேண்டும்.—(பெருமூச்செறிந்து) கண்ணே! புறப்படு. (கை கொடுத்துத் தூக்குகிறான்.)

தம:—(கண்ணீர் விட்டு) நாதா! இவ் வரண்மனையையும் செல்வத்தையும் விட்டுப் போக மனம் வர வில்லையே!—(தனக்குள்) சீ! என்ன என் புத்தி தடுமாறுகிறது!—ஐயோ! குழந்தைகளைக் கண்டு என்ன சொல்வேன்?—(சுற்றிப் பார்த்து) போகின்றேன்!—நாதா! (கண்ணீர் சொரிய நளன் கரத்தைப் பிடிக்க, அவன் அவளை அணைத்து இடதுபுறம் செல்கிறான்.)

அங்கம். 1.

காட்சி. 5.

[நிடத நாட்டு நகரத்தின் எல்லையில் ஒரு வீதி.—மாலை—நளன், தமயந்தி, இந்திரசேனன், இந்திரசேனை, (நால்வரும் ஆபரணங்க ளின்றி ஒவ்வொரு பழைய உடை மாத்திரம் தரித்தவர்களாக,) விருஹத்ஸேனை யுடனும், மந்திரிகள், சில நகர ஜனங்கள், எல்லோரும் பின் தொடரவும், இடதுபுறம் வருகிறார்கள்.]

நள:—(வருத்தத்துடன்) நீங்கள் எல்லோரும் இனி நின்று விடுங்கள். நீங்கள் எங்களுடன் வருவது நியாய மன்று.

மந் 1:—ஐயனே! தங்களை விட்டுப் பிரியவும் முடியுமோ? நீங்கள் சிறு குழந்தையாய் இருந்தது முதல், என் குழந்தைக்கு மேல், பார்த்து வந்தேனே! உமது தகப்பனுருக்கும் மேலாய், நீதி தவருது, முகம் கோணுது, நெறி பிறழாது, எங்கள் சொல் மறுக்காது, தருமமே கடைப் பிடித்து, அரசாண்ட தங்களை விட் டிருக்க மனம் ஒப்ப வில்லையே! உமது தந்தை யிடமும் உம் மிடமும் சேவகம் செய்து விட்டு இப் பாதகனிடமோ—

நள:—(செவி புதைத்து) ஐயோ! அப்படிக் கூற வேண்டாம். புஷ்கரன் இப்பொழுது நமது சக்ரவர்த்தி யல்லவோ?—

மந் 2:—அக் கொடியோனும் சக்ரவர்த்தி யாவனே? சூதாட்டத்தில் வஞ்சனையால் கொண்டது அரசுரிமை யாமோ? அதில் தாங்கள் ஒப்புக் கொண்டதும் யாரையேனும் கட்டுப் படுத்துமோ? ஆகையால், நீங்கள் நகர் விட்டு ஏக வேண்டாம்—அரசு தங்க ளுடையதே— நாங்கள் குடிகள் பார்த்துத் தருகின்ருேம், ஏற்றுக் கொள்ளும்.

நள:—ஐயா! எல்லா முணர்ந்த தாமே இப்படிச் சொல்லலாகாது.—

வேலை கரை யிழந்தால் வேதம்நெறி பிறழ்ந்தால்
ஞால முழுது நடுவிழந்தால்—சீலம்
ஒழிவரோ செம்மை யுரை திறம்பாச் செய்கை
அழிவரோ செங்கோ லவர்.—

நான் வாக் களித்த பிறகு பின் வாங்கலாமா? கொடுத்ததை மறுபடி கேட்கலாமா?

மந் 3:—மீட்க லாகாதோ? இன்னொரு முறை ஆடி வெல்லலாம்.

நள:—அதுவும் கூடாது. கொடுத்ததை எவ் விதத்தாலும் உடனே கொள்ளல் நியாயம் ஆகாது. மேலும், நான் எதை இனிப் பந்தயமாக வைத்து ஆடுவேன்? அப் பொழுதே, என் மனைவி மக்களைப் பணயமாக வைக்கும்படி அவன் கேட்டதும் என் மனம் துடித்தது!—ஆகையால், (கை கூப்பி) விடை யளிக்க வேண்டும்.

மந் 1:—அரசே! நான் ஒரு உபாயம் சொல்கிறேன் கேளும்.—தாங்கள் சூதாட வேண்டாம். நான் தங்களுடன் முன்பு விளையாட்டாக ஆடினேனே; இப் பொழுது நான் புட்கரனுடன் பந்தயம் வைத்து ஆடி, அவனை வென்று, ராச்சியத்தைத் தங்களிடம் ஒப்புவிக்கின்றேன்.—

நள:—ஐயனே! தாங்கள் எனக்குப் பல தர்ம சாஸ்திரங்களை எடுத்துரைத்து, சூதாட லாசாது என்று கூறினீரே! நீரே அதற்கு உடன்படலாமா?

மந் 1:—ராஜ விசுவாஸத்துடன், ராஜ ஸேவையாக, சுய லாபம் கருதாது, செய்வது பாப மாயினும் புண்ணியமே!

நள:—அப்படியே நீர் வென்றாலும், அரசு உம்முடையதே. அதை நான் கொள்ளல் தகாது. மேலும், நீர் இப்பொழுது புட்கர சக்ரவர்த்தியின் குடிகளுள் ஒருவர். ஆகையால், தாம் இவ்வித எண்ணம் கொள்ளுதல் தகாது.—ஐயன்மீர்! (கை கூப்பி) அஸ்தமிக்கும் ஸமய மாயிற்று, விடை யளிக்க வேண்டும்.

ஒரு கிழவன்:—தாங்கள் இருவரும் மணம் புரிந்து யானை மேலேறி இவ்வூர் வலம் வந்ததைப் பார்த்த நாங்கள், நீங்கள் குழந்தைகளுடன் பூமியில் கால் நடையாய் நடந்து காட்டுக்குப் போவதையும் காண இருந்தோமோ! (நகர மாந்தர் அனைவரும் வருந்துகின்றார்கள்;)— நீங்கள் இன்றாவது இங் கிருங்கள்; நாளைக் காலை வரையி லாவது எங்களுடன் இருந்து செல்லும்படி வேண்டிக் கொள்கிறோம். (எல்லோரும் கூச்ச லிடுகிறார்கள்.)

தம:—நாதா! இவர்கள் சொல்கிறபடி இன் றிரவு தங்கித்தான் செல்வோமே?

நள:—கண்ணே! நாம் இன்றே இந் நகரை விட்டு அகல வேண்டும் என்று அரசன் உத்தரவு இருக்க, நாம் தாமதிக்க லாகாது. —(இடதுபுறம் பெரிய ஓசை கேட்கிறது.)—(இடதுபுறம்) நோக்கி) இதென்ன சப்தம்?—

(ஒரு வெட்டியான் முரசு அறைந்து கொண்டு இடது புறம் வருகிறான்.)

வெட்டி:—நகரத்தாருக்கு புட்கர மகாராசர் உத்தரவு என்ன வென்றால்—“நளன் ராச்சியத்தைத் தோற்க, ராச்சியம் புட்கர சக்ரவர்த்தி யுடையதானதால், நளனுக்கு மரியாதை செய்பவர், மகாராசாவை அவமதித்ததாகக் கொல்லப் படுவார்கள்.” (முரசு அடித்துக் கொண்டே வலதுபுறம் போகிறான்)

நள:—(வருத்தத்துடன்) என்றால் இந் நகரத்தார்க்கு விளையும் கேடுகள் எவ்வளவோ?

மந் 1:—ஐயனே! இக் கொடியவனிடம் இக் குடிகளை நீர் ஒப்பு வித்துச் செல்வது நியாயமா? இவனை இப்பொழுதே எதிர்த்துப் பொடி யாக்குகின்றோம்.—

ஜனங்கள்:—ஆம், ஆம் (கூவுகின்றனர்.)

நள:—(கையைத் தூக்கி) ஐயன்மீர்! நீங்கள் சொல்வது மிகவும் தவறு. அரசன் உத்தரவைச் சிரமேற் கொண்டு அதன் படி நடக்க வேண்டும். உண்மையில், உங்களுக்கு என்னிடமும் என் மனைவி மக்களிடமும் அன்பு இருந்தால், நான் சொல்வதைக் கேட்டு உடனே போங்கள்.—நாழிகை யாயிற்று; நீங்கள் நில்லுங்கள்—எங்களுக்கு உத்தரவு அளியுங்கள்—நாங்கள் வருகிறோம்—விடை யளியுங்கள்.

[நளனும், தமயந்தியும், மக்களும் கை கூப்புகின்றனர். ஜனங்களும், மந்திரிமார்களும் அலறி அழுது கொண்டு இடதுபுறம் போகின்றார்கள். நளன், தமயந்தி, குழந்தைகள், விருஹத்ஸேனை, அவர்களைப் பார்த்து வருந்திக் கொண்டே, வலதுபுறம் போகின்றார்கள்.]

அங்கம் 2.

காட்சி 1.

[நிடத நாட்டை யடுத்த ஓர் காட்டுப் பாதை.—மறு நாட் பகல்.—நளன், தமயந்தி, இந்திரசேனன், இந்திர சேனை, விருஹத்ஸேனை இடதுபுறம் வருகிறார்கள்.]

தம:—நாதா! குழந்தைகளுக்கு நடக்க முடிய வில்லையே. எனக்கும் கால் வலிக்கின்றதே!

சேனை:—ஆமாம், அப்பா!

சேனன்:—பசியும் ஜாஸ்தியாய் இருக்கிறது; தாகமும் தாங்க முடிய வில்லை.

சேனை:—எனக்குக் கூடத்தான்.

தம:—வருந்தாதீர்கள்.—இதோ வந்து விட்டோம்.—இன்னும் கொஞ்சம் தூரந் தான் இருக்கிறது.

சேனன்:—அப்பா! காட்டைத் தாண்டினோமா?

நள:—(வருத்தத்துடன்) குழந்தைகளே! இன்னும் நாம் நகர எல்லையை விட்டு வெகு தூரம் வர வில்லையே! சற்றுப் பொறுத்துக் கொள்ளுங்கள்.—ஈசா! இதுவோ உனது திருவுள்ளம்! நாடு நகரம் முதல் யாவற்றையும் இழந்தது போதாமல், துன்ப மென்பதையே யறியாத இப் பால் மணமாறாப் பாலர்களுடனும், தரை மீது நடந்தறியா மெல்லிய பாதங்களை யுடைய இவ் விளங்கொடியாளுடனும் இக் கொடுங் கானில் அலைந்து திரிந்து வருந்தவும் வேண்டுமோ? என்னுடைய கொடிய செயலின் பயனும் இவர்களையும் துன் புறுத்துவது தருமமோ?—கண்மணீ! குழந்தைகளை யழைத்துக் கொண்டு காட்டிலும் முள்ளிலும் பாலை வனங்களிலும் நாம் செல்வது மிகவும் கஷ்டம்; அள வில்லாத துன்பங்களுக்குக் காரண மாகும். ஆகையால், நீ நமது மக்களை யழைத்துக் கொண்டு விருஹத்ஸேனை யுடன் உன்னுடைய தந்தை வீமராஜனுடைய பட்டணத் தைச் சேர்வாய்.—(பெரு மூச் செறிந்து) பின்பு—ஈச னருளால்—நாம் ஒன்று சேர வேண்டுமென் றிருந்தால்— அவன் திருவுள்ளப்படி யாகிறது.—

தம:-(அழுது கொண்டு) நாதா! இப்படிச் சொல்லத் தங்களுக்கு எப்படி மனம் துணிந்ததோ?— தங்களைத் தனியாய்க் காட்டில் விட்டு விட்டுப் போய், நான் சுகமாக என் தந்தை வீட்டிலிருக்கவா? கணவரின் நன்மையிலும் இன்மையிலும், சுகத்திலும் துக்கத்திலும், இன்பத்திலும் துன்பத்திலும், மனைவிக்கும் பாதி பாகம் இல்லையா? ஸஹதர்மசாரிணியாய் இருக்கிறேன் என்று அக்னி ஸாக்ஷியாய் நான் வாக்களித்ததை மறந்து, தங்களை விட்டுப் போவேனா?

நள:—கண்மணீ! உன்னை விட்டுப் பிரிய வேண்டுமென்ற எண்ணத்துடன் நான் அப்படிக் கூறவில்லை.—ஆயினும், நம்முடைய குழந்தைகளும் நீயும் படும் பாட்டைக் கண்டு மனம் தாளாமல் அவ் விதம் கூறினேன். அரண்மனையில் ஆட்கள் சூழ்ந்திருக்க, அலங்காரத்துடனும் அதிகாரத்துடனும் அமளி செய்து வந்த நம் இரு கண்மணிகளும் இக் கடுங் கானில் கொடிய மிருகங்களைக் கண்டு நடுங்கி, பசியாலும், தாகத்தாலும், களைப்பாலும் வருந்துவதை என் கண்களாற் கண்டு எப்படி சகிப்பேன்? என் உயிர்க் குயிரா யிருக்கும் நீயும் இக் காட்டின் கொடுமைகளால் கஷ்டப்பட என் மனம் எப்படித் தாளும்?

தம:—பிராணேசா! உம்முடன் இருக்கும்போது எனக்கு எதுவும் கஷ்டமா யிராது.—நீர் கஷ்டப்படும் போது எனக்கு மாத்திரம் ஸுகம் என்ன வேண்டி யிருக்கிறது?— எது என்ன வானாலும் ஒரு பொழுதும் உம்மை விட்டுப் பிரிய மாட்டேன்.—இது ஸத்யம்!

நள:—கண்ணே! நீ யோசியாமல் கூறுகிறாய்.—ஆனால், உன் னிஷ்டம்.—ஓர் யுக்தி சொல்கிறேன்.— குழந்தைகளை விருஹத்ஸேனை யுடன் குண்டின புரத்துக்கு அனுப்புவோம்.—

சேனன்:—தந்தையே! உங்களை இங்கே விட்டு நாங்கள் மாத்திரம் போக மாட்டோம்.—

சேனை:—ஆமாம், அப்பா!—நீயும் எங்களோடு வா.—

சேனன்:—நாம் எல்லோரும் போவோம்.—பிறகு புஷ்கரனை வென்று ராஜ்யத்தை யடைவோம்.—

தம:—நாதா! அப்படி யேன் செல்ல லாகாது?

நள:—ப்ரியே!—

மன்னராய் மன்னர் தமை யடைந்து வாழ் வெய்தி
இன்னமுதந் தேக்கி யிருப்பரேல்—சொன்ன
பெரும் பேடிக ளலரேற் பித்தரே யன்றோ
அரும் பேடை மானே யவர்?

நான் மன்னர் மன்னனாய் இருந்து விட்டு, இப் பொழுது இன்னொரு மன்னரிடம் சென்று அவரால் உணவு அளிக்கப் பட்டு என் வயிறு வளர்த்து வாழ்வேனாகில் என்னைப் போன்ற பேடியும் பித்தனும் உண்டோ?—என் வினைகளின் பலனை நான் அனுபவித்தே தீர வேண்டும்.—நற் காலம் வரும் வரையில் நான் காடுகளிலும் மறை விடங்களிலும் இருப்பேன்.—

தம:—என்னுடைய பிறந்த வீட்டில் இருப்பதால் அவ்வித குற்றம் ஏற்படாதே? என் தகப்பனார் தங்களை வெகு சந்தோஷத் துடன் வரவேற்று மரியாதை செய்து உபசரிப்பார். நாம் எல்லோரும் நமது தீ வினை யகலும் வரையில் அங்கு ஒன்றாய் இருக்கலாம்.—

நள:—

சினக் கதிர்வேற் கண் மடவாய்! செல்வர்பாற் சென் றீ
எனக் கென்னு மிம் மாற்றங் கண்டாய்—தனக்குரிய
தானந் தடைத்துத் தருமத்தை வேர் பறித்து
மானந் துடைப்ப தோர் வாள்.—

கண்ணே! ஒரு மருமகன் மாமன் வீட்டிற்குச் சென்று அங்கு அவர்கள் முகம் பார்த்துத் தனக்கு வேண்டியன வற்றைப் பெற்று இருத்தலினும் மானக் கேடானது வேறொன்று மில்லை. ஸரியான பதவியில் உள்ள மருமக னுக்குத் தான் மாமன்மார் மரியாதை செய்வார்கள்; தாழ்ந்த நிலைமைக்கு வந்த பின், மருமகனையும், அலக்ஷியமும் அவமரியாதையும் செய்வார்கள்.—

தம:—(அழுது கொண்டு) நாதா! என் தாய் தந்தையர் அப்படிச் செய்ய மாட்டார்கள். என் தந்தை தங்களைத் தன் மகனாகவே எண்ணி யிருக்கிறார்.—ஆயினும், உங்களுக்கு இஷ்ட மில்லா திருக்கிற விஷயத்தில் எனக்கும் ஸம்மதம் இல்லை.— குழந்தைகளை மாத்திரம் அனுப்புவோம்.—(விம்மி அழுது கொண்டு) விருஹத்ஸேனா!—நீ குழந்தைகளை

அழைத்துக் கொண்டு—போய்—என் தந்தை யிடம்—சேர்ப்பிப்பாய்.—(குழந்தைகளைக் கட்டி அணைத்து முத்த மிட்டு அழுது)—சேனு! சேனை! உங்களை எப்பொழுது மறுபடி பார்ப்பேன்?—

சேனை:—அம்மா! நான் போக மாட்டேன். (அழுகிருள்.)

சேனன்:—அப்பா! என்னையுமா அனுப்புகிறீர்?

நள:—(குழந்தைகளை அணைத்து முத்த மிட்டு) குமாரா! நீ தங்கை யுடன் சென்று உனது தாதா விடம் இரு.—நாங்கள்— சிக்கிரமாய்— கொஞ்ச காலத்தில்— வந்து சேருகிறோம்.—

சேனை:—(அழுது கொண்டு) சிக்கிரம் வர வேணும்.—

சேனன்:—(வருத்தத் துடன்) நாங்கள் வணங்குகிறோம். (கை கூப்பி இருவரும் வணங்க, நள தமயந்திகள் அவர்களைக் கட்டி யணைத்து வருந்துகின்றார்கள்.)

விருஹத்:—(அழுது கொண்டு) அம்மா! உங்க ளுடன் இல்லாது போக வேண்டுமே யென்று மனம் தடு மாறினாலும் குழந்தைகளை உத்தேசித்துப் போகிறேன்.—அவர்களைப் பாட்டனு ரிடம் ஒப்புவித்து விட்டு மீண்டும் வருகிறேன்.—

(குழந்தைகளுடன் விருஹத்ஸேனை இடது புறம் போகிருள். நளன் வருந்துகிறுன். தமயந்தி தேம்பித் தேம்பி அழுகிருள். இருவரும் குழந்தைகள் போன திக்கையே பார்த்துக் கொண்டு நிற்கையில் தமயந்தி மூர்ச்சித்து விழுகிருள். நளன் அவளை மடியில் போட்டுக் கொண்டு ஆச்வாஸப் படுத்த அவள் தேறுகிருள்.)

நள:—கண்ணே! ஸர்வமும் அறிந்த நீயும் இப்படி வருந்த லாமோ? நீயே உன்னைத் தேற்றிக் கொள்.

தம:—ஐயோ! நான் எப்படி ஸகிப்பேன்?—பெற்ற மக்களை விட்டுப் பிரிந்திட மனம் தாள முடிய வில்லையே! (அழுகிருள்.)

நள:—(அவளைத் தடவிக் கொண்டே) கண்மணீ! வருந்தி யென்ன பயன்? கொடிய பாதகனுன என்னுடைய

கருமத்தின் பலனுய் நீயும் நம் மக்களும் வருந்த வேண்டி யிருக்கிறது!—கண்ணே! மனதை தைரியப் படுத்திக் கொள்.

தம:—என் தலை சுழல்கிறதே!—என் வயிறு அலைகிறதே!—என் நா வரள்கிறதே!—எனக்கு ஒன்றும் புலப் படவில்லையே! என் உடல் துடிக்கின்றதே!—நாதா! நாதா!—என் செய்வேன்!—(துடித்து விம்மி யழுகிருள்.)

நள:—பிரியே! பசியினுல் உனக்குக் களைப்பா யிருக்கின்றது. இங்கேயே சற்றுப் படுத்துக்கொண் டிரு. (எழுந்திருந்து) நான் சென்று ஏதேனும் ஆகாரம் கிடைக்கின்றதா வென்று பார்த்து வருகிறேன்.— (வலதுபுறம் நோக்கி) அதோ! அதோ!— இரண்டு பக்ஷிகள் தோன்றுகின்றன.— எனது வேஷ்டியை வீசி அவற்றைப் பிடித்து வருகிறேன்.— (வலதுபுறம் போகிருன்.)

பறவைகள்:—(ஆகாயத்தி னின்றும்) நள ராஜனே! நீ சூதாட்டத்தில் தோல்வி யடைவதற்கு உதவிய பாய்ச்சிக்கைகளாய் மாரிய கலி புருஷனும் துவாபரனு மாகிய நாங்கள் இப்பொழுது பறவைகளாய் வந்து உன் ஆடைகளையும் கவர்ந்து உன்னைப் பரிபவப் படுத்தினேம்.—

நள:—(உள்ளிருந்தே) கண்மணீ! கேட்டனையா பறவைகள் கூறியதை?—உனது ஆடையில் ஒரு பாகத்தை எனக்குக் கொடு.—

தம:—(எழுந்து மெதுவாய்த் தடுமாறி நடந்து கொண்டு) தெய்வம் கெடுத்தால் நாம் செய்வ தென்ன இருக்கிறது?—பிராண நாதா! நம் உடல் வேருயினும், நம் இருவர் உயிரும் ஒன்ரு யிருப்பது போல்,உடையும் ஒன்ரு யிருக்க வேண்டுமென்று ஈசன் திருவுள்ளம் போலும்!— (வலதுபுறம் போகிருள்.)

அங்கம் 2.
காட்சி 2.

[காட்டில் இடது பக்கத்தில் ஓர் பாழ் மண்டபம்.—நள் ளிரவு.—மண்டபத்தில் நளனும் தமயந்தியும், இடதுபுறம் தலை வைத்தும் வலதுபுறம் கால் நீட்டியும், நளன்

முன்புறம் திரும்பியும் தமயந்தி பின்புறம் திரும்பியும், இருவரும் பக்கத்தில் படுத்து உறங்கிய வண்ணம் இருக்கின்றனர்.—நளன் திடீரென்று எழுந்து நாலா பக்கமும் சுற்றிப் பார்க்கிறான்.—தமயந்தியை உற்றுப் பார்த்துப் பெரு மூச்சு விடுகிறான். பின்பு தனக்குள் யோசிக்கிறான்.]

நள:—(தனக்குள்—பெரு மூச் செறிந்து) இவளை இட்டுச் செல்வதா? விட்டுச் செல்வதா?—விட்டுத் தான் செல்ல வேண்டும்.—அதில் என்ன தவறு?—இம் மெல்லியலாள் எனக்காக இந்த ஒரு நாளிற் பட்ட பாட்டைக் கருதினால் என் மனம் துடிக்கின்றது. இனி இக் காரிகையை இப்படி வெந் துபரங்களுக்கு ஆளாக்கிக் காண என்னால் இயலாது. —ஆகையால், இவளை இட்டுச் செல்ல லாகாது; விட்டே செல்ல வேண்டும். நான் இவளை விட்டு விட்டுச் சென்றால், காலையில் எழுந்ததும், என்னைக் காணாது வருந்தினாலும், இம் மண்டபத்திற்கு அருகாமையி லுள்ள பாதையின் வழியாய்ச் சென்று ஏதேனும் நகரத்தை யடைந்து அங்கிருந்து தன் குழந்தைகளுக்காக வாவது தன் தந்தை யிடம் போய்ச் சேருவாள்.—அப்படித் தான் செய்ய வேண்டும்.—ஆனால், இருவர் ஆடையும் ஒன்றாய் இருக்கிறதே! என்ன செய்வேன்?—துணி யில்லாமல் எப்படிச் செல்வது? எப்படி இதைக் கிழிப்பது?—(சுற்றிப் பார்க்கையில் தன் னருகில் ஒளி யுள்ள ஓர் அரிவாள் இருப்பதைக் கண்டு) நல்ல ஸமயத்தில் இந்த அரிவாள் அகப்பட்டது!—இக் காட்டில் இது எங்கிருந்து வந்தது? வேடர்கள் பகலில் இங்கு தங்கி யிருந்த போது இதை விட்டு மறந்து சென்றனரோ?— அல்லது—கடவுளுக்கு நாங்கள் பிரிய வேண்டு மென்று எண்ண மிருந்து இதை இங்கு உண்டாக்கி வைத்தாரோ? எது வாயினும், நம் எண்ணத்தை முடிக்க இது நல்ல உதவியாக அகப்பட்டது! —(ஆடையை மெதுவாய் அரிந்து, தன் இடையி லுள்ள பாதித் துகிலுடன் எழுந்து)—கண்ணே! ஒற்றைத் துகிலும், உயி ரொன்றும், உட லிரண்டுமாக இருந்த நாம், இனி, உடலும், உயிரும், உடுக்கு மாடையும் இரண்டாகும் படிக்கு அரிந்தனனே! எனக்கு உன்னிடம் இருந்த

அன்பையும் முற்றும் துறந்தனனே! உன்னையும் விட்டுப் பிரிந்தனனே! ஐயோ! என்னிலும் பாதகன் யாரேனும் உளனோ?—இனி, இங்கு அதிக நேரம் தங்கினால் விழித்து விடுவாள்; பிறகு எனது எண்ணம் நிறைவேறாது.—(வலது புறம் போகப் புறப்பட்டுத் திரும்பி) என் உயிரே! என் மீதுள்ள காதற் பெருக்கா லல்லவோ நீ படுங் கஷ்டத்தை யுங் கருதாது கானில் என்னுடன் திரிந்து அலைய உடன்பட்டாய்? அப்படி யிருந்த உன்னை விட் டகலவும் எனக்கு மனம் வர வில்லையே! என் செய்வேன்? (அவளை நெருங்கி அவளை முத்த மிட நினைத்து) கடைசி முறை முத்த மிட்டுச் செல்வோம் என்றால், விழித்து விடுவாளோ என்று பயமா யிருக்கிறது.—அவள் ஆடையில் அறுத்த இடத்தையே முத்த மிடுகின்றேன். (முந்தானையை முத்த மிட்டு எழுந்து, நகர்ந்து நின்று) கண்ணே! கரும்பே! காதலியே! விடை கொள்கின்றேன்.— திருடன் மாதிரி சொல்லாமல் போகின்றேன்.—உன்னை இந்த நள் ளிருளில், இப் பாழ் மண்டபத்தில், துணை யில்லாது, விட்டு ஏகு கின்றேன்.—கடவுள் தான் உன்னைக் காப்பாற்ற வேண்டும்! —(கை கூப்பிக் கடவுளை மனதினால் தியானித்து விட்டு அவளைப் பார்த்த வண்ணம் வலதுபுறம் மெதுவாய்ப் போய், மீண்டும் திரும்பி) ஈசா! போக மனம் வரவில்லையே! என் செய்வேன்?—இனித் தாமதித்தால் அவள் நித்திரை நீங்கினால் என்னாகும்?— ஆனால், என்னாருயிரே! இவ் விடத்தை விட்டுக் கால் எடுத்து வைக்கவும் என்னால் முடிய வில்லையே!—கண்மணீ! கடைசி முத்தம்—(அவள் முந் தானையை மறுபடியும் முத்த மிட்டு, நகர்ந்து நின்று)— பாதகன் போகின்றேன்! பாவி நான் உன்னைப் பிரிந்து செல்கின்றேன்.—பசுங் கிளியே! உன்னைப் பாழ் மண்டபத் தில் தனியாக விட்டுக் கடின சித்தனாகி நீங்குகின்றேன்.— ஐயோ! அயர்ந்து நித்திரை செய்யும் உனது வதனத்தைக் காணும் போதே பழைய ஞாபக மெல்லாம் திரும்பி வருகின்றனவே!—இந்திராதி நால்வரும் உன்னை நாடியும் அவர்களைத் திரஸ்கரித்து, அவர்களுக்காக நான் தூது வந்து மன்றாடியும், என்னைத் தவிர வேறு ஒருவரையும் மணப்ப தில்லை யென்று கூறி, பின்பு சுயம்வர காலத்தில்

அவர்கள் நால்வரும் என் னுருவுடன் வந்தும், உனது மாறாத காதல் வலிமை யாலும், தெய்வ பக்தியின் பலத்தாலும், அத் தேவர்களையே உனக்கு அருள் புரியச் செய்து, நீ எனக்கு மணமாலை சூட்டினாயே! அதற்குக் கைம்மாறாகவோ நான் உன்னை இக் கதிக் கெல்லாம் ஆளாக்கியது!—என்னை விட்டுப் பிரியேன் என்று ஒரே பிடிவாதமாய் என்னை நம்பி ஸகல துன்பத்திற்கும் மனந் துணிந்து நீ என்னுடன் வந்தும், உன்னைத் தன்னந் தனியே நான் விட்டுச் செல்வது என் மனதைப் பிளக்கின்றதே!—இப்படி யெல்லாம் யோசித்துக் கொண்டிருந்தால்—(தமயந்தி அசைகிறாள்)—அதோ! அவள் விழிப்பாள் போ லிருக்கிறது!—(சற்று நகர்ந்து, பெரு மூச்சு விட்டு நின்று, மீண்டும் அவளை யணுகி, முந்தானையை மறுபடியும் முத்த மிட்டு, நகர்ந்து கொண்டே)—கண்ணே! காதலி! கருமணியே! கற்பகமே! கற்புக் கரசியே! காதகன், பாதகன் உன்னை விட்டுப் போகின்றேன்.— விழித்ததும் என்னை என்ன நினைப்பாயோ? என்னைக் காணாமல் எப்படி மனந் தடுமாறுவாயோ?— (கை கூப்பி, உயர நோக்கி, மனதில் தியானித்து)—ஈசா! தீன ரக்ஷகனான நீ தான் என் கண்மணியைக் காப்பாற்ற வேண்டும்!—(தமயந்தி அசைகிறாள்)—அதோ அவள் விழிக்கிறாள் போலும்.—கண்மணீ! கடைசி முறை உன்னைக் கண்டு போகிறேன்.—மறுபடியும் எப் பொழுது உன்னைப் பார்ப்பேனோ?—கண்ணே! செல்கின்றேன்.—உனது கற்பும், கடவுள் கருணையுமே உன்னைக் காக்குமாக!—கண்ணே!—கண்ணே!—ஈசா!—(திரும்பிப் பார்த்துக் கொண்டே வலதுபுறம் போகிறான்.)

தம:—(கொஞ்ச காலத்தின் பிறகு, கனவு கண்டு, "ஐயோ! ஐயோ!" என்று கூக் குர லிட்டுக் கொண்டு எழுந்து, நாற்புறமும் வெருண்ட பார்வை யுடன் சுற்றிப் பார்த்து) நாதா! பிராண நாதா!—(எழுந்து)—ஐயோ! அவரைக் காண வில்லையே?—நாதா!(மண்டபத்தி னின்று பிரதித்வனி வருவது போல் உற்றுக் கேட்டு)—எங்கு இருக்கிறீர்?—பிராண பதே!—பதி யில்லையே! என் செய்வேன்? ஒருகால்,

தனியாய் விட்டுச் சென்றால்,நான் எப்படி யிருக்கின்றேன், என்ன செய்கிறேன் என்று பார்க்க மறைந் திருக்கிறீரோ? —நாதா! எனக்குப் பயமா யிருக்கிறதே! வந்து விடும்.— ஐயோ! ஒன்றும் பேச்சு மூச்சு இல்லையே!—(அங்குமிங்கும் சென்று பார்த்து) எங்கும் காண வில்லையே!— துகில் ஒன்று யிருக்க—(தன் துகில் அறுபட் டிருப்பதையும், கீழ் அரிவாள் இருப்பதையுங் கண்டு திகைத்து)— ஐயோ! என் ஆடையை அறுத்துச் சென்றனரே!— உயிர் ஒன்று யிருப்பது போல் உடையும் ஒன்று யிருந்தோமே! ஆடையை அறுத்தது போல் என் ஆவியையும் வெறுத் தீரோ?—எப் பொழுதும் என்னை விட்டுப் பிரிவ தில்லை யென்று வாக்களித்தீரே!—அன்று நீர் என்னை விட்டுப் பிரிந்த தாகக் கனவு கண்டதைக் கூறியதும் என்னைத் தேற்றினீரே!— என் காதலைப் போற்றினீரே!—போவ தில்லை என்று சாற்றினீரே!—ஐயோ!—நான் என் செய் வேன்? எங்கே போவேன்?—நீர் எங்குச் சென்றீரோ?— நான் கஷ்டப் படுவதைப் பார்த்து மனம் தாளாது என்னை விட்டுப் போனீரோ?—கணவனை விடவா என் ஸுகம் என்று நான் பல முறை கூறியும் நீர் என்னை விட்டு அகன் றீரே!—எனக்காக நான் வருந்த வில்லை.—என்னை விட்டுப் பிரிந்த நீர் எங்கு எப்படிக் கஷ்டப் படுகின்றீரோ என்றும், நீர் துயரப் படும்போது உம்மைத் தேற்ற நான் பக்கத்தில் இல்லாத பாவி யானேனே என்றுந் தான் எனக்குத் துக்கமா யிருக்கின்றது. நாடிழந்ததையும் மக்களை விட்டுப் பிரிந்ததையும் நினைத்தும், உமக்கு உண்டான மானக் கேட்டைக் கருதியும், என் கஷ்டத்தைப் பொறுக்காமலும் உயிர் நீத்தீரோ?—ஐயோ! நினைக்கவும் என் உயிர் துடிக் கின்றதே!—பொழுது விடிந்ததும் இக் காட்டில் எங்கும் திரிந்து பார்க்கின்றேன்; மாலைக்குள் அவர் அகப்படா விட்டால் நான் எப்படியாயினும் என் உயிரை விடுகிறேன்.

S. —ஈசா! ஈசா! நீர் தான் கதி!—(தியானித்துக் கொண்டே வலதுபுறம் போகிருள்.)

அங்கம் 2.

காட்சி 3.

S. [காட்டில் இன்னொரு பாகம்.— மாலை— ஓர் வேடர் தலைவன் வலதுபுறமாய்ப் பாடிக் கொண்டு, கையில் தடியுடன், வருகிறான்.]

வேட:—(தனக்குள்) நான் இந்தக் காட்டுக் கெல்லாம் ராசாவா இக்கிறதிலே கஸ்டம் இந்தாலும், என்ன அதிகாரம், எம் மாத்தம் சொகுசு! எங்கிந்தாலும் நம்ம ஆளுங்க நம்ப தின்றத்துக்கு கறி கிறி யெல்லாம் தராங்க.—எத்தினி வேடங்கள் நம்ம கீளே இக்கிறாங்க!—என்ன யிந்தா என்ன பிரயோசனம்? நம்மோடே குஸியா இக்கிறதுக்கு ஒரு பெண்சாதி இருந்திச்சின்னா இதெல்லாம் ஜோக்குத் தான்!—(இடதுபுறத்தில் தூரத்தில் அழுகைக் குரல் கேட்கிறது) என்னா! என்னா! யாரோ அளராப்லே யிக்குதே! (உற்றுக் கேட்கிறான்.)

தம:—(வெளியில் தூரத்தில் அழுது கொண்டு) ஐயோ! ஐயோ! மலைப் பாம்பு விழுங்குகிறதே!—நாதா! நாதா! மார்பு வரையில் விழுங்கி விட்டதே!—உம்மையே நம்பி யுள்ள என்னை இப்பொழு தாவது ஓடி வந்து காக்க மாட்டீரோ? ஐயோ! நாதா! தங்கள் திரு முகத்தைக் காணாமலும் பெற்றெடுத்த மக்களைக் காணாமலும் மாள்கின்றேனே!—ஈசா!—ஈசா!!

வேட:—யாரோ ஒரு பொம்பளை மாதிரி யிக்குது—பாப்போம். (விரைந்து இடதுபுறம் போகிறான்.)

தம:—(வெளியே) ஐயா! ஐயா! என்னைக் காப்பாற்றுங்கள்.—

வேட:—(வெளியே) யாரது?—நான் இக்கிறேன்.— (தடியால் பாம்பை அடித்துக் கொண்டு)—தீத்துட்டேன்— கொண்ணூட்டேன்.— பயப் படாமே என்னோடே வா.— வா,—வா.—

(வேடர் தலைவனும் பின்னால் தமயந்தியும் இடதுபுறம் வருகிறார்கள்.)

தம:—ஐயனே! அந்த மலைப் பாம்பின் வாயி லிருந்து என்னைப் பிழைப்பித்த உமக்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்?—(கை கூப்பி) மிகுந்த வந்தன எண்ணத் துடன் வணங்குகிறேன்.

வேட:—(அவளை வியந்து பார்த்துக் கொண்டே) நீ ஒன்னும் சேய வேண்டாம்.—கொஞ்ச நாளிக்கு முன்னே தான் நானு யோசிச்சிண்டே இந்தேன்.—நம்ப வூட்லே ஒத்தியும் இல்லே.—இந்தக் காட்டுக்கு நான் தான் ராசா.—நீ ராணியா யிரு—என்னு முளிக்கிறியே?— (தனக்குள்) பலே ஜோக்கா இக்கிறளே!—(உரக்க) என்னு தளுக்கு! என்னு டீக்கு! என்னு ஒய்பாரம்! எனக்கேத்தவள் நீ தான்.

S. —(பாடுகிறான்.)

தம:—ஐயோ! இக் கதியும் வாய்க்குமோ எனக்கு?—ஐயா! என்னைக் காப்பாற்றிய தங்களை என் தமையன் மாதிரி எண்ணுகிறேன்.—நான் ஒரு ராஜ குமாரி.—நான் ஒரு ராஜாவின் மனைவி.—

வேட:—நானும் ராசா தானே?— காட்டு ராசா.—(அவளை நெருங்கிக் கொண்டே) என்னோடே வந்துடு.—நான் அழகா யில்லையா?—என் ராணியா யிந்துடு—இக்கிரியா? (அவள் கையைப் பிடிக்கப் போகிறான்.) —

தம:—(வலதுபுறம் ஓடிக் கொண்டே) ஐயோ! நாதா! ஈசா! இப் பாவி என்னைத் தொட வருகிறானே! நான் பாம்பின் வாயிலேயே இறக்காமற் போனேனே இதற் காகவா?

வேட:—தா! குட்டி! என்னு! என்னு! நானு இக்கிச்சே நீ பூடறதா?—(அவளைத் தீண்டப் போக, அவள் ஓட) என்னுது! தப்பிச்சுக்குவையா?— முடியாது— (அவளைத் துரத்திக் கொண்டு இருவரும் வலதுபுறம் ஓடுகிறார்கள்.)

தம:—(வெளியே) ஈசா! நான் பதிவிரதை யானால் இப் பாவி எரிந்து போகட்டும்!—(உடனே ஜ்வாலை உண்டாகிறது. வேடன் 'ஐயோ' என்று கதறிக் கொண்டு மாய்கிறான்.)— ஒழிந்தான் பாபி!—(தமயந்தி மீண்டும் வலதுபுறம் வருகிறாள்.)—ஈசா! என்னை இப் பாதக னிடத்தி லிருந்து காப்பாற்றின தற்கு உம்மை எப்படித் துதித்தால் போதும்?

S. —(துதித்துப் பாடுகிறாள்.)—வீம ராஜனுக்கு மகளாய்த்

தோன்றி, தேவர்களை வெறுத்து, நள மஹா ராஜருக்கு மாலை யிட்டு, ஸகல இன்பத் துடனும் ஸாம்ராஜ்யத் துடனும் வாழ்ந்த நான், நாடிழந்து, மக்களை நீத்து, மணாளனை விட்டுப் பிரிந்து, பல பாடுகளும் பட்டு, உயிர் மாய்ப்பது என்று தீர்மானித்தும், பாம்பின் வாயில் இருக்கும் போது, பிழைக்க வேண்டும் என்று எண்ணிக் கூவி, இந்தப் பாவியின் கையிற் சிக் குண்டேனே!—அவனுடைய தீமையே தீயாகித் தானே இறந்தான் அத் தீயோன்!—நான் இனி எங்குச் செல்வேன்? எப்படி மானத்துடன் வாழ்வேன்?—ஐயோ! எனக் கொன்றும் புலப்பட வில்லையே!— (அழுகிறாள்.)— நான் உயிர் நீக்க வேண்டு மென்று எண்ணியும், தெய்வாதீனத்தால், உயிர் பிழைத்ததால், என் கணவரை ஒருகால் மீளவும் காணும் பாக்யமு மிருக்குமோ? ஈசா! உம்மையே நம்பினேன்!

S. நீரே காப்பாற்ற வேண்டும். (பாடுகிறாள்.)

(ஒரு வணிகர் தலைவன் வலதுபுறம் விரைவாய் வருகிறான்.)

வணி:—(தமயந்தியை உற்று நோக்கி) அம்மணீ! நீங்கள் யார்? சற்று முன்பு கூக்குர லிட்டது தாங்கள் தானோ? நான் ஏதாவது—உதவி செய்ய—

தம:—(திடுக்கிட் டெழுந்து நகர்ந்து) ஐயோ! இன்னும் ஒரு யமன் வந்தானே!—.

வணி:—அம்மணீ! பயப்பட வேண்டாம்.—நான் ஒரு வணிகன். —ஒரு வணிகக் கூட்டத்திற்குத் தலைவன்.—நாங்கள் சேதி நகரம் செல்கின்றோம்.—அவர்கள் எல்லோரும் சற்று தூரத்தில் இருக்கிறார்கள்.—தங்களுடைய குரலைக் கேட்டு நான் மாத்திரம் ஓடி வந்தேன்.

தம:—(கை கூப்பி) ஐயா! தெரியாது கூறியதற்கு மன்னிப்பீர். —சேதி நகருக்கா போகிறீர்கள்?—என்னையும்—

வணி:—அம்மா! தாங்கள் யார்? எவ்வூர்? எங்குப் போக வேண்டும்?

தம:—ஐயா! என் வரலாற்றைக் கேட்டாலும் பாப மாகும்.—என் கணவர் என்னை இக் காட்டில் தனியாய் விட்டுச் செல்ல நேரிட்டது.—

வணி:—அம்மணீ! உமது கணவர் யார்?

தம:—நிடத நாட் டரசரா—யிருந்தவர்.—

வணி:—(கை கூப்பி) அம்மணி! உங்களைக் கண்டதே பெரும் பாக்கியம்.—அவர் எங்குப் போனார்?—

தம:—ஐயனே! நாம் போகும் போது நடந்தனவற்றை யெல்லாம் ஸவிஸ்தாரமாய்க் கூறுகிறேன். நீர் எனக்கு உதவியதை எந் நாளும் மறவேன்.

வணி:—தாயே! தங்களுக்குப் பணிவிடை செய்யக் கடமைப் பட்டவ னல்லவா நான்?—நாங்கள் சேதி நகரம் போகின் றோம்.—எங்க ளுடன் தங்களை அழைத்துச் சென்று சேதி ராஜர் அரண்மனையில் விடுகிறேன்.—வாருங்கள். (இருவரும் வலதுபுறம் போகிறார்கள்.)

அங்கம். 2.
காட்சி. 4.

[சேதி தேசத்து அரண்மனையில் ஓர் அறை—மாலை—ராணி ஸௌதாமணி தேவி ஓர் ஆஸனத்தில் உட்கார்ந்து கொண்டு ஒரு புத்தகம் படித்துக் கொண் டிருக்கிறாள்.—ஒரு சேடி இடதுபுறம் வருகிறாள்.]

சேடி:—(கை கூப்பி) அம்மணி! யாரோ ஒரு ஸ்திரீ வாயிலில் காத் திருக்கிறாள்; தங்களைப் பார்க்க வேண்டும் என்கிறாள்.

ஸௌ:—யார் என்று விசாரித்தாயா?

சேடி:—அய லூராம்.— ஐயோ, பாவம்!—குறை யாடை யுடனும், குறையாது வடிகின்ற கண்ணீருடனும், வருந்தி நிற்கிறாள்.—அவளைப் பார்க்கும் போதே மிகவும் பரிதாபமா யிருக்கிறது.

ஸௌ:—உடனே கூட்டி வா.—(சேடி இடதுபுறம் போகிறாள்.) எங்களுடைய ராச்சியத்தில் கூடவா ஒரு ஸ்திரீ தன்னந்

தனியாய் அழுது கொண்டு நிற்க லாயிற்று? என்ன வென்று விசாரிக்க வேண்டும்.—

(தமயந்தி, சேடி யுடன் இடதுபுறம் வந்து, கை கூப்பித் தலை வணங்கி நிற்கிருள்.)

யாரம்மா? எவ்வூர்? உட்கார்—அழாதே—பயப்படாதே—உனக்கு யார் என்ன கெடுதல் செய் திருப்பினும் உடனே அவர்களைத் தக்கபடி தண்டிக்கச் சொல்கிறேன்.

தம:—(கீழே உட்கார்ந்து) அம்மணீ! எனக்கு இங்கு ஒருவரும் ஒரு தீங்கும் இழைக்க வில்லை.—நான் உயர் குலத்தில் பிறந்து இந்த ஸ்திதிக்கு வந்தவள்.—என் கணவர் சூதாடி எல்லாவற்றையும் தோற்க, நாங்கள் இருவரும் காட்டில் திரிந்து கொண்டு இருக்கையில், நான் வருந்துவதைப் பார்க்க ஸகிக்காமல், அவர், அக்கம் பக்கத்தில் உள்ள ஊர்களை யெல்லாம் எனக்குச் சொல்லி விட்டு, இரவில், நான் படுத்து உறங்குகையில், என்னை விட்டு விட்டுச் சென்ருர். நான் அவரைத் தேடித் திரிந்தும், எங்கும் காணுது, இந்த நகர் வந் தடைந்தேன்.—அவர் இல்லாது ஒரு நிமிஷமும் உயிர் வாழத் தாள முடிய வில்லை.—(அழுகிருள்.)

ஸௌ:—ஐயோ, பாவம்!—நீ இங்கு தானே என்னுடன் இரு. உன் கணவர் தாமாகவே இங்கு வந்தாலும் வருவார்.—நான் அவரைத் தேடிக் கண்டு பிடிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளும் செய்கிறேன்.

தம:—(நமஸ்கரித்து) அம்மணீ! இந்த ஏழை யிடம் கருணை புரிந்து, இவ் விதம் இனிய வார்த்தைகள் கூறியதை எந் நாளும் மறவேன்.—அம்மணி! உங்களுடன் இருப்பதற்குத் தடை யில்லை.—ஆனல்—

ஸௌ:—ஸங்கோஜப் படாது சொல்.—

தம:—அம்மணீ! எந்தப் புருஷ னுடனும் பேசும்படியான வேலை எனக்கு இடாமல் இருக்கும்படி வேண்டிக் கொள்கிறேன்.—அப்படி ஏற்பாடு செய்வ தானல் நான் தங்களுடன் இருக்கிறேன்.

ஸேள:—மேகங்களின் நடுவில் இருக்கும் சந்திரன் போல விளங்கும் உன் முகத்தின் அழகுடன் உன் அகத்தின் குணமும் இவ்வளவு நன்றா யிருக்கிறதை மெச்சுகின்றேன்.—நீ, உன் இஷ்டப்படியே, என் குமாரத்தி ஸுநந்தையோடு, கன்னி மாடத்தில் இரு. அங்கு புருஷர்கள் வர மாட்டார்கள்.—(சேடியைப் பார்த்து) ஸுநந்தையை அழைத்து வா.—(சேடி வலதுபுரம் போகிருள்.)—உன் புருஷனைக் கண்டு பிடித்துத் தருகிறேன்.

தம:—அம்மணீ! அப்படி ஏற்பாடு செய்தால், கண்டு பிடிக்கும் முறையைத் தாங்கள் அனுப்புபவர்களிடம் நான் கூறுவேன்.—(ஸுநந்தை சேடியோடு வலதுபுறம் வருகிருள். தமயந்தி யெழுந்து நின்று கை கூப்புகிருள்.)—

—அம்மா! ஸுநந்தை! இதோ இருக்கின்றவள் உன் னுடன் தோழியாயும் ஸைரந்திரியாயும் இருப்பாள். அவளை எப்பொழுதும் விட்டுப் பிரியாதே. அவள் மிக்க புத்திசாலியாயிருக்கிருள்;—கஷ்டப்பட் டிருக்கிறவள்;—அவள் மனம் கோணுமல் நடந்து கொள்!

ஸுந:—ஸைரந்திரீ! (தமயந்தியின் கையைப் பிடித்துக்கொண்டு) இன்று முதல் நாம் ஸ்நேகிதர்கள்.—உன்னைப் பார்த்ததுமே உன் னிடம் எனக்கு ப்ரீதி யுண்டாயிற்று.—என் னுடன் என் கன்னி மாடத்திலேயே இரு.—இவ் வாடை யெல்லாம் களைந்து விட்டு, ஸ்நானம் செய்து, நல்லாடைகள் அணிந்து, என் னுடன் ஸுகமாக இரு.—வா போவோம். (ஸுநந்தையும், ஸைரந்திரியான தமயந்தியும், சேடியும், ராணியை வணங்கி, வலதுபுறம் செல்கிருர்கள்.)

ஸேள:—ஐயோ, பாவம்! யாரோ உயர் குலத்துப் பெண் போல் இருக்கிறது.—என்ன அழகு! என்ன மரியாதை! என்ன குணம்! எக் காரணத்தினலோ, அவளைக் கண்டதும் என் மகளிடம் இருக்கும் அன்பை விட அதிகமாக அவளிடம் ப்ரீதி யுண்டாயிற்று.—ஸுவாகுவிடம் சொல்கிறேன். (வலதுபுறம் போகிருள்.)

அங்கம் 2.

காட்சி 5.

[காட்டில் ஒரு பாகம்.—நடுப் பகல்.—நளன் வருத்தத்துடன் தானே பேசிக் கொண்டு வலதுபுறம் வருகிறான்.]

நள:—என்னுடைய மதி யிழந்த தனால் மண்ணிழந்தேன், மக்களைத் துறந்தேன், மனைவியை வஞ்சித்து நீத்தேன்.—என்னிலும் பாதகன் இவ் வுலகினில் யாராயினும் இருக்கிறானோ? இரான்—இரான்.—ஒரு பொழுதும் அவளை விட்டுப் பிரியேன் என்று வாக் களித்த நான்—ஸத்ய விரதம் பூண்ட நான்—என் மனைவியைத் திருட்டுத் தனமாய்த் தன்னந் தனியே நள் ளிருளில் விட்டு விட்டு வந்தேனே!—பொய் கூறுவதிலும் கேடல்லவோ கள்ளச் செய்கை?—மந்திரிகள் கூறிய போது, "சொன்ன சொல்லினின்றும் தவறுவேனா" என்றேனே! என் மனைவிக்கு அக்னி ஸாக்ஷியாகக் கூறியதை மீறி அஸத்ய னானேனே!—இப் பாதகச் செயலுக்காக எனக்கு என்ன ஸம்பவித்தால் தான் தகாது? பொய் மொழிந்த என் பொய் யாக்கையைப் புழுக்கள் புசிப்பினும் புனிதமாம்; பறவைகள் பக்ஷிப்பினும் பாவனமாம்.—என் னுடைய மதிக் கேட்டால் எல்லோர்க்கு மல்லவா கேடு விளைவித்தேன்?—பாலகரைப் பெற்றவ ளிட மிருந்து பிரித்தேன்; பதியை விட்டுப் பிழைத்திரேன் என்ற நேரிழையைப் பாழ் மண்டபத்தில் நள் ளிருளில் வஞ்சித்து வந்தேன்.—நானே சூதாடிய பின், இப் பொழுது துவண்டு துவண்டு மனம் வாதாடின் என்ன பலன் வாய்க்கும்? சூதாட்டத்தில் எனக் கிருந்த பைத்தியத்தில் யார் என்ன சொல்லியும் என் காதில் விழவில்லையே!—பந்தய மாவது வைக்க வேண்டா மென்று என் மந்திரிகள் மன்றாடியும் கேட்காது பணயங்கள் வைத்து ஆடியதால், புஷ்கரன் என் மனைவியையும் பந்தயமாகக் கூறும்படி யல்லவோ கேட்க லாயிற்று! சூதாட்டத்தின் கொடுமையை எவ்வாறு அனுபவிக்க நேர்ந்தது! அம் மனைவியையும் பிரிந்தேனே!—அவள் எங்கு இருக்கிறாளோ?—என்ன கலங்குகிறாளோ?—பனி யிருளிற் பாழ் மண்டபத்திலே அவளை நான் நீத்து அகன்ற போது

தனியே நின்று என்ன நினைத்தாளோ? என்ன செய்தாளோ?—எப்படி யாவது மண்டபத்தின் பக்கத்தி லிருந்த பாதை வழியாய் ஏதாவது ஊர் சேர்ந் திருப்பாள்.

S. —ஈசா! என் காதலியைக் காத் தருளுவீர்.—

கார்:—(வெளியில் இடதுபுறத்தில்) ஐயோ! ஐயோ! நள மஹா ராஜரே! என்னைக் காப்பாற்றும். நான் வனத் தீயில் பதைத் துருகு கின்றேனே!—

நள:—யார் அது? என்னைப் பேரிட்டு அழைப்பது? யாராயினும், வருந்திக் கூப்பிடுவதால்,சென்று உடனே உதவ வேண்டும். —(இடதுபுறம் நெருங்கி உற்றுப் பார்த்துக் கொண்டே) ஒரு பாம்பைத் தவிர வேறு ஒருவரையுங் காணேமே! யார் அது கூவியது?—(நின்று உற்றுக் கேட்கிறான்.)

கார்:—(வெளியே இடதுபுறம்) மன்னரே! உமக் கபயம். வேத முனி யொருவர் சாபத்தால் ஸர்ப்ப ராஜனான நான் இவ் வெங் கானில் தீயில் அகப்பட்டு அழிகின்றேன். இங்கு வந்து என்னை எடுத்துக் காப்பாற்றுவீர்!—

நள:—(தனக்குள்) அக்னி பகவான் எனக் களித்த வரத்தால் இப் பாம்பைக் காப்பாற்றுகிறேன்.— இது பாம்பா யிருந்தும் மனிதக் குரலுடன் பேசுவதால் தெய்வத் தன்மை யுடையது என்று நம்புகிறேன்.—(உரக்க) இதோ வந்தேன்.—(இடதுபுறம் போகிறான்.)

கார்:—(இடதுபுறம் வெளியே, சற்றுப் பொறுத்து) நிடத நாட் டரசே! உமது கை பட்ட மாத்திரத்தில் தீயும் அவிந்தது. மிகவும் வந்தனம்.—நீர் என்னைக் கையி லேந்தி, ஒன்று முதல் பத்து அடிகள் கீர்வாண பாஷையில் எண்ணி நடந்து, பத்தாவது அடியில் 'தச' என்று சொல்லி என்னைக் கீழே விட்டால் உடனே எனது சாபம் தீரும்.— இவ் வுதவியைச் செய்ய வேண்டுகிறேன்.— இதனால் உமக்கும் நன்மையே நேரும்.

நள:—(வெளியே) அப்படியே செய்கிறேன்.—ஏக, த்விதீய........ தச.—ஹா! ஹா!—ஐயோ! பாம்பு என்னைக் கடித்து விட்டதே!—

(வாகுகனான நளன் தன் கையைப் பிடித்துக் கொண்டு
S. வருந்திக்கொண்டே இடதுபுறம் வருகிறான்.)

வாகுகன்:—உபகாரம் செய்ததின் பலனா இவ் வபகாரம்?—விஷத்தின் பலனாய் என் உடலும் கறுத்து என் உருவமும் சுருங்கி விட்டதே!—

(கார்க்கோடகன் ஒரு சிறிய தேவ வடிவுடன் இடது புறம் வருகிறான்.)

கார்:—(கை கூப்பி) நள மஹாராஜரே! நான் தான் கார்க்கோடகன் என்ற அரவரசன்.—எனக்கு உதவியதற்காக மிகவும் நன்றி யுள்ளவனாகிறேன்.

வாகு:—(கை கூப்பி) அரவரசே! உமக்குக் கோபம் உண்டாவதற்கு ஒரு தீங்கும் நான் இழைக்காதிருக்க, என்ன காரணம் பற்றி என்னைக் கடித்து விஷத்தால் என் உருவை மாற்றினீர்?

கார்:—அரசே! நீர் எனக்குச் செய்த உதவிக்கு மாறாக உமக்குத் தீங்கு இழைத்தேன் என்று எண்ணாதீர்!—உமக்கு உதவவே அப்படிச் செய்தேன்.—

வாகு:—(கை கூப்பி) ஸர்ப்ப ராஜனே! நான் தவறாக எண்ணியதற்கு என்னை மன்னித் தருளும்.—ஆயினும், நீர் எனக்கு உதவியதாகக் கூறியது மாத்திரம் விளங்க வில்லை.

கார்:—நள மஹாராஜரே! நீர் இங்கு வந்த வரலாறு முழுவதும் எனக்குத் தெரியும். இனி, நீர் உமது உண்மை உருவுடனேயே இருந்தால் உமக்கு நலமல்ல வென்றும், உமது உருவை மாற்றினால் நீர் யாரு மறியாமல் எங்கும் சென்று வாழலாம் என்றும்,எண்ணி உம்மைக் கடித்து உம் உடலில் விஷம் ஊட்டினேன்.—அதற்குத் தான் உமது வாயாலேயே 'தச' என்று உத்தரவு பெற்றுக் கடித்தேன்.—உமது வாகு குறைந்தமையால், உம் நாமம் இனி "வாகுகன்" என்றாகும்.

வாகு:—(கை கூப்பி) அரவரசே! அறியாது கூறியதையும் எண்ணியதையும் மன்னித்து அருளுவீர்.

கார்:—வாகுகா! என்னைத் தீயின் கொடுமையி லிருந்து நீர் காப்பாற்றியதற்குக் கைம்மாறாக, ஒரு தீயோனின் கொடுமையால் நீர் வருந்துவ தெல்லாம் நீங்க, நான் உதவுகின்றேன்.

—இதோ நான் மேல் அணிந்துள்ள இந்த ஆடையைத் தரு கின்றேன், பெற்றுக்கொள்ளும்.—(ஒரு சிவந்த ஆடையைத் தருகிறான்.)

வாகு:—(கை கூப்பிப் பின்பு கைநீட்டி அந்த ஆடையை வாங்கிக் கொண்டு) ஐயனே! மிகவும் வந்தனம்!—

கார்:—இந்த ஆடையை உபயோகிப்பதைப் பற்றிக் கூறு கிறேன், கேளும்.—நீர் இக் காட்டை விட்டு நீங்கி அயோத்தி நகரை யடைந்து ருதுபர்ண ராஜாவினிடம் தேர்ப் பாகனாக அமரும். பின்பு, விரைவில் கலி புருஷ னின் பலம் குறைய உமக்கு நற் காலம் உண்டாகி, நீர் உமது மனைவி மக்களையும் அடைவீர்!—அப் பொழுது, இந்த சாதி மாணிக்கம் போன்ற ஆடையை நீர் அணிந்து கொண்டால், இவ் வேற் றுருவம் போம்; உம்முடைய உண்மை உருவு உண்டாகும். நீர் உமது அரசையும் பெற்று மனைவி மக்களுடன் இனிது வாழ்வீர்!— (வாகுகன் வணங்கும் போது இடதுபுறம் மறைகிறான்.)

வாகு:—(குனிந்து வணங்கி எழுந்ததும் கார்க் கோடகனைக் காணாது திடுக்கிட்டு) அரவரசே! மறைந்து விட்டீரோ?— என்னை உதவ வந்த அவரை வீணாகப் பழித்தேனே!— அவரது வாக்கின் படியே எனது மனைவி மக்களை மீண்டும் பார்க்கும் பாக்கியமும் எனக்குக் கிட்டுமா? கண்ணே! உன்னை மறுபடி காணவும் எனக்கு வெட்கமா யிருக்குமே! காதலி! உன்னைக் காரிருளிற் கானகத்தே கை விட்ட பாதகனும் என் முகத்தையும் பார்க்கப் படுமோ நீ?— இருந்தாலும், உன்னைக் காணுங் காலம் எப்பொழுது கிட்டுமோ?—கார்க் கோடகன் வார்த்தை தவறாது.— அவர் கூறிய படியே செய்து வருவோம்.—முதலில், அயோத்தி நக ரடைந்து ருதுபர்ண ராஜனிடம் தேர்ப் பாகனாய் அமர்கிறேன்.—எல்லாம் ஈசன் செயல்!—ஈசா!

S. உன்னையே நம்பி யிருக்கிறேன். (துதித்துக் கொண்டே இடதுபுறம் போகின்றான்.)

அங்கம் 3.

காட்சி 1.

[சேதி அரண்மனைக் கெதிரில் ஒரு வீதி.—மாலை—ஸுதேவர் யோசித்த வண்ணம் இடதுபுறம் வருகிறார்.]

ஸுதே:—(தனக்குள்) அப்பா!—மூன்று வருடங்களாய் நான் எங்கெல்லாம் திரிகிறது! பல நாடுகளில் தேடியும் எங்கும் தமயந்தியையும் காண வில்லை, அவள் கணவனையும் காண வில்லை.—எங்கேனும் கொடிய மிருகங்களின் வாய்ப் பட்டனரோ?—எல்லாவற்றிற்கும் மிகுதியா யிருக்கும் சில நாடுகளிலும் தேடிப் பார்ப்போம்.—இவ்வளவு கஷ்டப் பட்டு விட்டு, பிரதிப் பிரயோஜன மின்றிப் போகலாமா? நமது வீம ராஜன் தன் மகளையும் அவள் கணவனையும் கண்டு பிடிப்பவர்க்குக் கேட்ட தெல்லாம் கொடுப்ப தாகக் கூறி யிருக்கிறாரே! நாம் சும்மா இருந்தால், அரசர் அனுப்பிய மற்றவர்களில் யாரேனும் வெகுமானத்தை அடைந்து விடுவார்களே! ஆகையால், நன்றாய்ப் பார்க்கத் தான் வேண்டும்.—இவ் வூரில் எங்கு திரிந்து பார்த்துங் காணோம்.—ஆயினும், அரண்மனையில் சென்று பார்க்க வேண்டும். ஏதாவது ஒரு வியாஜம் வைத்து அந்தப்புரம் சேர வேண்டும். என்ன செய்வது?—

(ஒரு புரோகிதர் வலதுபுறம் வருகிறார்.)

புரோ:—(கை கூப்பி) ஆரிய புத்திரரே! தேவரீர் எவ் வூரோ?

ஸுதே:—(கை கூப்பி) ஸ்வாமி!—அசலூர்—தாங்கள் எதற்காகக் கேட்கின்றீர்?

புரோ:—ஒன்று மில்லை— அ— அடியேன்— அரண்மனையில் வைதீக விஷயங்கள் பார்த்துக் கொள்வது.—இன்றைய தினம்—ராஜ குமாரத்தி—வரலக்ஷ்மி விரதம் கொண்டாடு கிறாள். அதற்குச் சில பிராம்மணர்களை அழைத்து வரப் புறப்பட்டேன்.—ஸ்வாமி வந்தால் போதும்.—

ஸுதே:—(தனக்குள்) பழம் நழுவிப் பாலில் விழுந்து என் வாயிலும் விழுந்தது—(உரக்க) அதற் கென்ன—ஆகட்டும்.

புரோ:—(சுற்றிப் பார்த்து) ஸ்வாமிக்கு ஒரு விஞ்ஞாபனம்.—ராஜ குமாரி தக்ஷிணையும், தேவரீர் பத்னிக் கென்று உத்தேசித்து, ஒரு ரவிக்கைத் துண்டும் ஸமர்ப்பிப்பாள்.—அதை யெல்லாம் என்னிடம் சேர்த்துவிட வேணும்.—தேவரீருக்கு அந்த தக்ஷிணையில் பாதி ஸமர்ப்பித்து விடுகிறேன்.—என்ன சொல்கிறீர்?

ஸுதே:—ஆஹா! அப்படியே.

புரோ:—(தனக்குள்) அப்பா! நம் அதிருஷ்டமே அதிருஷ்டம்! எல்லாம் பகவானின் கிருபை! (உரக்க) ஸ்வாமி என்னோடேயே வரலாமா?

ஸுதே:—ஸந்தியா வந்தனம் பண்ணி விட்டு வரலாமோ?

புரோ:—அப்படியே ஆகட்டும்.—ஆனால், அரண்மனைக் குள்ளேயே ஒரு நல்ல புஷ்கரணி யிருக்கிறது.—அதில் அனுஷ்டானம் முடித்துக் கொள்ளலாம்.

ஸுதே:—தேவரீர் போய்க் கொண்டிரும்.—நான் அதோ இருக்கிற சத்திரத்தில் என் மடி ஸஞ்சியை வைத்திருக் கிறேன்; அதை யெடுத்துக் கொண்டு வருகிறேன். தேவரீர் அரண்மனை வாசலில் இருந்தால், நானும் சீக்கிரம் வந்து சேருகிறேன்.

புரோ:—ஸ்வாமி சீக்கிரம் வரவேண்டும்.—(வலதுபுறம் போகிறார்.)

ஸுதே:—(சிரித்து) இது நன்றாய் வாய்த்தது!—அரண்மனை அந்தப்புரத்தில் நுழையும் மார்க்கம் கஷ்ட மின்றித் தக்க ஸமயத்தில் அகப்பட்டது.—மேலும், வரலக்ஷ்மி விரதம் என்றார் அல்லவா? அரண்மனையில் உள்ள எல்லா ஸ்திரீகளும் வருவார்கள். ஆகையால், நம்முடைய காரியம் ஸுலபமாய் முடியும்.—இங்காவது ஏதாவது புலன் அகப்பட ஜகதீசன் அருள்வாராக! (கை கூப்பி மனதில் தியானிக்கிறார்.)—புரோகிதர் காத்துக்கொண் டிருப்பார். சீக்கிரம் போகா விட்டால் நாம் பிறகு உள்ளே நுழைய முடியாது.—(வலதுபுறம் போகிறார்.)

அங்கம் 3.
காட்சி 2.

[சேதி அரண்மனைத் தோட்டம்.—மாலை.—ஒரு பீடத்தின் மேல் லக்ஷ்மியின் பிரதிமை வைக்கப்பட்டிருக்கிறது. ஒரு சேடி வலதுபுரம் வந்து, பூஜா திரவியங்களை வைத்து விட்டு, மீண்டும் வலதுபுறம் செல்கின்றாள்.—பின்பு புரோகிதரும் ஸுதேவரும் இடதுபுறம் வருகிறார்கள்.]

புரோ:—ஸ்வாமி இப்படி வரவேண்டும். இப்படி இந்த ஆஸனத்தில் அமரும். அவர்களெல்லோரும் வரும் நாழியாயிற்று.

ஸுதே:—இந்த ஊர் ராஜ குமாரன் ஸுவாகுவுக்கு இன்னும் விவாகம் ஆகவில்லையோ?

புரோ:—இல்லை, ஸ்வாமின்! எல்லோர்க்கும் அதுதான் நிரம்ப சங்கடமாயிருக்கிறது. ராஜ குமாரி ஸுநந்தைக்கும் கலியாணம் ஆகவில்லை. அதற்குத் தான் இந்த வரலக்ஷ்மி விரதம், ஸோமவார விரதம், எல்லாம் அனுஷ்டிக்கச் சொன்னேன்.

ஸுதே:—யார் அனுஷ்டிக்கிறார்கள்?

புரோ:—ஏங்காணும், இப்போ தான் சொன்னேனே? நம் ராஜகுமாரி ஸுநந்தை தான்.— தனக்கு நல்ல பர்த்தா கிடைக்கிறதற்கும், தன் தமையனுக்கு நல்ல பார்யை அகப்படுவதற்கு மாகத்தான். இன்றைக்கு ஆடி அமாவாஸை கழித்த சுக்லபக்ஷம் கடைசி வெள்ளிக்கிழமை யல்லவா? சாஸ்த்ரோக்தமாய் இன்றைக்குத் தானே வரலக்ஷ்மி விரதம் அனுஷ்டிக்க வேண்டும்?—அதோ வருகிறார்கள்; எழுந்திரும். (இருவரும் எழுகின்றனர்.)

[ஸுநந்தையும் ஸைரந்திரியும் வலதுபுறம் வருகிறார்கள்; சேடி, பூஜைக்கு வேண்டிய புஷ்பங்கள் பழங்கள் நிறைந்த ஒரு தட்டு ஏந்தி வருகிறாள். மூவரும் பிராம்மணர்களை வணங்க அவர்கள் ஆசிர்வதிக்கின்றனர்.]

புரோ:—அம்மணீ! இந்த வரலக்ஷ்மி விரதம் அனுஷ்டித்தால் நிரம்ப பலன் உண்டு என்று சொல்லியிருக்கிறது. கலியாணம் ஆகாதவர்களுக்குக் கலியாணமும், ஆனவர்களுக்கு புத்திர ஸம்பத்தும், ஸகல பாக்யமும்,

தரித்திர த்வம்ஸமும், ரோக நிவாரணமும் உண்டாகும். இது ஸ்திரீகளுக் கென்று எடுத்தது. கலியாணம் ஆன பிறகும் இதை அனுஷ்டித்து வந்தால் புருஷன் மிக்க ப்ரீதியுட னிருப்பான்; விட்டுப் பிரிய மாட்டான்; பிரிந்தாலும், வந்து சேருவான்.—(ஸைரந்திரி கண்களில் நீர் ததும்புகிறது.)

ஸுந:—அக்கா! ஸைரந்திரி! நீயும் என்னுடன் இப் பூஜை செய். காணமற் போன உன் கணவனும் உன்னை வந்து சேருவார்.—(ஸுதேவர் உற்றுப் பார்க்கிறார்)

ஸைர:—அப்படியே.

புரோ:—நம் பாக்கியம் இன்றைக்கு இந்த ஸ்வாமி கிடைத்தது. —இவர் அசஹாராம். இவர் நல்ல வேத வித்து. பரம வைதீகம்

ஸுந:—எல்லாம் எங்கள் அதிருஷ்டம். புரோகிதரே! ஆரம்பிக்க லாமே?

புரோ:—ஆஹா! (பூஜை செய்கிறார். லக்ஷ்மி அஷ்டோத்தர சத

S. நாமாவளி கொண்டு குங்குமத்தால் அருச்சிக்கிறார். தூபம் தீபம் நைவேத்யம் எல்லாம் ஸமர்ப்பிவித்து குங்கும ப்ரஸாதம் எல்லோருக்கும் கொடுத்து விட்டு) அம்மணீ! நீங்கள் எல்லோரும் பிரதக்ஷிணம் வந்து உங்கள் கையால் புஷ்ப தளங்களை எடுத்து அருச்சித்து, ஸேவித்து விட்டு, இந்த ஸ்வாமியையும் ஸேவித்து, அவருக்கு தக்ஷிணை முதலானவற்றைக் கொடுத்து, அவர் ஆசீர்வாதம் பெறுங்கள். (அப்படியே செய்கிறார்கள்.)

ஸுதே:—அம்மா! ஸுநந்தை! கூடிய சீக்கிரத்தில் உனக்கும் ஸுவாகுவுக்கும் விவாகமாய், அழகும் குணமும் வாய்ந்த புருஷன் உனக்குக் கிடைப்பானாக! உன் னிடத்தில் அன் புடன் இருப்பானாக! தீர்க்க ஸுமங்கலியா யிருப்பாயாக!—அம்மா! ஸைரந்திரி! நீ உன் கணவனைச் சீக்கிரம் அடைந்து ஸகல ஸம்பத்துடனும் இருப்பாய்!—(அவள் வணங்கி எழுந் திருக்கும் போது அவளை உற்றுப் பார்த்துப் பெரு மூச்சு விடுகிறார்.) நீ உன் புருஷனை விட்டுப் பிரிந்து எவ்வளவு கால மாயிற்று?

ஸைர:—(தலை குனிந்து வருத்தத்துடன்) மூன்று வருடங்க ளாயின.

ஸுதே:—(தனக்குள்) ஸரியாய்த்தா னிருக்கிறது. (உரக்க) பெண்மணி! உனக்கு ஒரு மந்திரம் உபதேசிக்கிறேன்; அதை ஜபித்து வந்தால்,உன் கணவனைக் கூடிய சீக்கிரத்தில் அடைவாய்.—ஆனல், நான் சொல்வது ஒருவர் காதிலும் விழக் கூடாது.

ஸுந:—ஸைரந்திரி! சேடி போகட்டும்; நாம் மாத்திரம் இருப்போம்.—(சேடி வலதுபுறம் போகிருள்.—புரோகிதரே! எல்லாவற்றையும் எடுத்துச் செல்லும்.

புரோ:—ஸ்வாமி!

ஸுதே:—தேவரீரே எல்லாவற்றையும் எடுத்துச் செல்லும்.—நான் அப்புறம் வருகிறேன். சத்திரத் தண்டையிருப்பேன்.

புரோ:—(ஸந்தோஷத்துடன்) அப்படியே—அம்மணி! நான் வருகிறேன். (அவர்கள் வணங்க) நீங்கள் நன்ருயிருக்கணும். சீக்கிரம் கலியாணம் ஆகணும். உங்கள் வம்சம் விருத்தியாகணும். நான் வருகிறேன். ஸ்வாமி! அனுக்கிரஹிக்கணும். (இடதுபுறம் போகிருர்.)

ஸுதே:—அம்மணீ! ஸுநந்தா தேவி! மந்திரோபதேசம் ரஹஸ்யமாகத்தான் செய்ய வேண்டும். ஆகையால், தாங்கள் அப்படிக் கொஞ்ச தூரத்தில் உலாவிக் கொண்டிருந்தால், நான் ஸைரந்திரிக்கு மந்திரோபதேசம் செய்வேன்.

ஸுந:—ஸைரந்திரி! பயப்பட வேண்டாம். நான் கொஞ்ச தூரத்தில் பூப் பறித்துக் கொண் டிருக்கிறேன். (பின் சென்று புஷ்பம் பறிக்கிருள்.)

ஸுதே:—(சுற்றிப் பார்த்து, மெல்ல) தமயந்தி!

ஸைர:—ஹா!—(திடுக்கிட்டு திகைக்கிருள்.)

ஸுதே:—பயப்படாதே! கூச்ச விடாதே! நான் விதர்ப்ப தேசம்; என் பெயர் ஸுதேவன். உன் தமயன் தமனுடைய ஸ்நேகிதன். உன் தகப்பனர் வீமராஜன் உத்தரவுப்படி பல இடங்களிலும் உன்னைத் தேடி இங்கு வந்தேன்.

ஸைர:—(சற்று உற்றுப் பார்த்து) ஸுதேவரே! அப்பா, அம்மா, என் குழந்தைகள் எல்லாரும் ஸௌக்யமா?

ஸுதே:—எல்லாரும் க்ஷேமந்தான். இருந்தாலும், உன்னைக் காணது அவர்கள் உயிரற் றிருக்கிருர்கள். உன் குழந்தைகளும் வருந்துகின்றன.

ஸைர:—ஹா! (அழுகிருள்.) ஐயோ! (ஸுநந்தை பார்த்து விட்டு வலதுபுறம் உள்ளே போகிருள்.)

ஸுதே:—தமயந்தி! அழாதே. உன் புருஷர் எங்கிருக்கிருர்?

ஸைர:—(கண்ணீர் விட்டு) ஸுதேவரே! நான் என்ன சொல்வேன்? காட்டில் என்னை விட்டுப் பிரிந்தார். எங்கிருக்கின்ருரோ தெரியாது. நான் இங்கு வந்து சேர்ந்தேன். இவர்கள் நிரம்பவும் மரியாதையாய் என்னை வைத்திருக்கிருர்கள். ஆனுலும், என் நாதரையும் மக்களையும் பாராமல் என் மனம் உருகுகின்றதே!

(ஸௌதாமணியும் ஸுநந்தையும் வலதுபுறம் வருகிருர்கள்.)

ஸௌ:—ஸ்வாமி! நீர் எந்த வூர்? உமது பெயரென்ன? இந்தப் பெண்மணி யார்? யாருடைய பெண்? யாருடைய மனைவி? உம்மைக் கண்டதும் இவள் அழுததாக ஸுநந்தை சொன்னுள். எல்லாம் எனக்கு விசதமாகச் சொல்லும்.

ஸுதே:—அம்மணீ! நான் விதர்ப்ப தேசம். என் பெயர் ஸுதேவன். இந்த மாது எங்கள் வீம ராஜருடைய புதல்வியும் நள மஹாராஜருடைய மனைவியுமான தமயந்தி!—

ஸௌ:—ஹா! (ஆச்சர்யத்துடன், தமயந்தியா? எப்படிக் கண்டு பிடித்தீர்?

ஸுதே:—அதோ பார்த்தீர்களா! இரண்டு புருவங்களுக்கும் மத்தியில் உள்ள பத்ம ரேகை.

ஸௌ:—ஹா! என் கண்மணி! (உடனே ஸைரந்திரியைக் கட்டியணைத்து அழுகிருள். ஸுநந்தையும் அழுகிருள்.)ஸ்வாமி! இந்த பத்மத்தை நான் இதுவரையில் கவனிக்கவில்லையே! நானும் என் அக்காளாகிய இவள் தாயார் தசார்ணையும் தசார்ண தேசத் தரசனுன ஸுதர்ம மஹா ராஜாவினுடைய புத்திரிகளாச்சுதே. இவள் எங்கள் தகப்பனுர் வீட்டில் பிறந்த போது நான் இருந்தேன். அப்பொழுது இந்த பத்மத்தைப் பார்த்தது எனக்கு நன்ருய் ஞாபகத்திற்கு வருகிறது.—தமயந்தி! என் கண்மணி! இத்தனை நாள் என் பெண்ணென்று தெரியாது உன்னைக் கவனிக்காமலிருந்தேனே!

தம:—அம்மா! எனக்கு ஒரு குறைவும் இல்லாமற் பார்த்து வந்தீர்களே!—ஸுதேவரே! இவர்கள் என்ன ஆதரவுடன் என்னைக் காப்பாற்றினார்கள்! இதை ஒரு நாளும் மறவேன்.

ஸுந:—அக்கா! உன்னை விளையாட்டாய் எப்பொழுதாவது என்ன சொல்லி யிருந்தாலும் அதை யெல்லாம் மறந்து விடு.—

தம:—தங்காய்! என்னுடன் இரண்டு தமையன்கள் பிறந் திருந்தும் எனக்கு ஒரு தங்கை கூட இல்லையே யென்று எனக் கிருந்த வருத்தம் இன்று நீங்கியது. நீ என்னுட னிருந்த ஸ்நேகமும் பிரீதியும் ஒரே வயிற்றில் பிறந்த வர்களுக் கிருப்பதினும் அதிகமா யிருந்ததே!

ஸுதே:— ஸௌதாமணி தேவி! வீம ராஜனும் தசார்ணை யம்மையும் இந்திர சேனனும் இந்திர சேனையும் அழுத வண்ணமா யிருக்கிறார்கள். ஆகையால், தமயந்தியை உடனே யழைத்துச் செல்ல உத்தர வளிக்க வேண்டும்.

தம:—ஆமாம், அம்மா! என் குழந்தைகள் நா னில்லாது என்ன அழுகின்றனவோ!

ஸௌ:—இதோ அனுப்புகிறேன். என் மகனும் உன்னைப் பார்க்க ஸந்தோஷிப்பான். அவ னிடம் சொல்லி எல்லாம் சீக்கிரம் ஏற்பாடு செய்யச் சொல்கிறேன்.—ஸுதேவரே! நள மஹாராஜரை எங்கும் கண்டி லீரோ?

தம:—ஸுதேவரே! நான் என் தாய் தந்தைகள் குழந்தைகளைக் கண்டாலும், என்ன ஸௌக்யங்க ளெனக் கிருப்பினும், என் பிராண நாதரைப் பிரிந்து உயிர் தரியேன். எது இருப்பினும், ஸ்திரீகளுக்குக் கணவன் பக்கலி லிராவிடின் ஒரு ஸுகமு மில்லை.—கணவனே எங்களுக்குச் செல்வம், பதியே தாய் தந்தை, பெற்ற மக்கள் எல்லாவற்றிற்கும் மேலான நிதி, எங்கள் துரையே எமது தெய்வம். என்னைக் கண்டு பிடித்தது போதாது. எனக்கு இன்னும் உதவி புரிய வேண்டும். (நமஸ்கரித்து) ஸ்வாமி! எனக்கு மாங்கல்யப் பிச்சை தர வேண்டும். உம்மையே நம்பி யிருக்கிறேன். நீரே சென்று என் கணவரையும் கண்டு பிடிக்க வேண்டும்.

ஸுதே:—அம்மணீ! உன்னைக் கொண்டு உன் தாய் தந்தைய ரிடம் ஒப்புவித்து விட்டு—

ஸேள:—நானே புறப்பட்டு இவளை அழைத்துச் செல்கிறேன். நீர் நள மஹாராஜரைத் தேடிச் செல்லும்.

ஸுதே:— ஆகட்டும். அப்படியே நான் சென்று எல்லா ஊர்களிலும் தேடுகிறேன். முக்கியமாய், நீங்கள் பிரிந்த காட்டிலும், அதைச் சுற்றிலு முள்ள— இந்தச் சேதி தேசமும் நிடத தேசமும் தவிர— மற்ற தேசங்களி லெல்லாம் தேடுகிறேன்.

தம:—ஸுதேவரே! அப்படியே நீர் அந்த தேசங்களுக் கெல்லாம் சென்று, ஆங்காங்கு "காரிருளிற் பாழ் மண்டபத்தே தன் காதலியைச் சோர் துயிலில் நீத்தல் துணிவன்றோ தேர் வேந்தர்க்கு!" என்று சொல்லும். நேர் நின்று எதிர் மாற்றம் தந்தாரை அறிந்து வாரும்.

ஸுதே:—அப்படியே செய்கிறேன்.—

தம:—உம்மைத் தான் நம்பி யிருக்கிறேன்.

ஸேள:—ஸுதேவரே! உமக்கு நாங்கள் மிகவும் கடமைப் பட்டவர்களானோம். உமக்கு வீம ராஜன் என்ன வாக்களித் தாரோ அதை நான் தருகிறேன். மேலும், ஒரு கிராமமும் உமக்கு ஸர்வ மான்ய மாகத் தருகிறேன். (ஸுதேவர் வணங்குகிறார்.) நீர் உடனே புறப்பட்டு நள மஹாராஜரைக் கண்டு பிடிக்க வேண்டும். நாளைய தினமே புறப்படும். அவரைக் கண்டு பிடித்தால் உமக்கு எது வேண்டுமானாலும் தருகிறேன்.

ஸுதே:—அப்படியே (வணங்குகிறார்.)

ஸேள:-தமயந்தி! உன் தாய் தந்தையர்களையும் குழந்தைகளையும் பார்க்க வேண்டும் என்று உனக்கு அதிக ஆசை யிருக்கும். —குழந்தைகளைப் பார்த்தாயினும் நீ தேறலாம்.—நானும் என் அக்காளைப் பார்த்து வெகு நாளாய்விட்டது. ஆகையால், நாளைக் காலையில் உன்னை அழைத்துச் செல்கிறேன். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லா வற்றையும் செய்வோம் வாருங்கள். ஸுவாகுவும் மிகவும் ஸந்தோஷப் படுவான். வாருங்கள் போகலாம். (எல்லோரும் வலது புறம் போகிறார்கள்.)

184 842
சென்னை-600 008

அங்கம் 4.
காட்சி 1.

[அயோத்யை.—ருதுபர்ண ராஜாவின் குதிரை லாயத்தி னருகில் ஓரிடம். வலதுபுறத்தில் ஒரு கல் மேடை யிருக்கிறது.—மாலை.—ஸுதேவர் இடதுபுறம் வருகிறார்.]

ஸுதே:—(தனக்குள்) ஹா! ஒரு வருடமாய் எங்கெங்கு திரிந்தேன்! கடைசியில் நல்ல வேளையாய் இங்கு வந்தேன். இன்று இந்த அரசரது ஸாரதிகளுள் ஒருவனாகிய ஜீவல னிடமிருந்து பல விஷயங்களை யறிந்தேன். வாகுகன் என்ற ஒரு தேர்ப்பாகன் மூன்று வருடங்களுக்கு முன் இங்கு வந்ததாகவும், அப்பொழுது ருதுபர்ண ராஜனுக்கு ஸிந்து தேச அரசனிடமிருந்து மிக வேகமாய்ச் செல்லும் சில குதிரைகள் வந்தமையால், தேர்த் தொழிலிலும் சமையல் தொழிலிலும் சிறந்தவனாகச் சொல்லிக்கொண்ட இந்த வாகுகன் என்றவனை வேலையில் அமர்த்தியதாகவும் கூறினான். அவன் சொன்னவற்றையெல்லாம் யோசித்துப் பார்த்தால், வாகுகன் நள மஹாராஜராகத்தான் இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. ஆயினும், கறுப்பு வர்ணம், இளைத்த மேனி, என்றனனே?— எல்லாவற்றிற் கும் அவ் வாகுகனை நேரிற் பார்க்கிறேன். அவர் தினந் தோறும் சாயங்கால வேளையில், தன் வேலை முடிந்த பிறகு, இந்த மேடையில் வந்து உட்கார்ந்து யோசித்த வண்ண மும் புலம்பிய வண்ணமுமா யிருப்பார் என்றனனே! இருந்து பார்ப்பதே நலம்.—அதோ வருகிறார்.— எங்கேனும் மறைந்திருந்து கவனிக்கிறேன்.— இடது புறத்தில் மறைந்துகொள்கிறார்.)

(வாகுகன் வலதுபுறம் வந்து, மேடையில் உட்காருகிறான்.)

வாகு:—(தனக்குள்) கண்மணீ! எங்கிருக்கிறாயோ? என்ன செய்கிறாயோ? என்ன வருந்துகிறாயோ?—வன விலங்குகள் வாய்ப்பட்டு இறந்தனையோ? இக் கொடியோனுடைய செய்கையை நினைத்து உயிர் விட்டனையோ?—ஹா! பெற்ற தாய் தந்தையர்களையும் ஈன்ற மக்களையும் விட்டு, செல்வத்தையும் ஸுகத்தையும் துறந்து, என்னையே

தெய்வமாகக் கருதி என்னை விட்டுப் 'பிரியேன்' என்று என்னுடன் வந்து, கல்லும் முள்ளும் தைக்கப் பசியாலும் தாகத்தாலும் வருந்தினையே! 'கணவனது ஸந்தோஷத்திலும், துக்கத்திலும் மனைவி ஸமபாக முடையவ ளல்லவா?' என்றனையே! காதற் கிளியே! அந்த வார்த்தைகளை நினைக்குந்தோறும் என் மனம் துடிக்கின்றதே!—ஆ! கண்ணே! நான் உனக்குக் கூறிய தெல்லாம் பொய்யே. நீ பல முறை கேட்டும், உன்னை விட்டுப் பிரியே னென்றனனே!—சொல்லி விட்டு, நள் ளிருளில், அக் கொடிய கானகத்தில், தன்னந் தனியே உன்னை விட்டு விட்டு, உனது துகிலையும் அறுத்து வந்தேனே! 'உயிரொன்றல்லவா, உடையும் ஒன்று யிருக்கட்டும்' என்றனையே! என் உயிரே! உன்னை யிழந்தேனே!—ஐயோ!—காதலி! நான் வேண்டுமென்று உன்னைப் பிரிய வில்லை. நீ படுந் துயரத்தைப் பார்த்துச் சகியாமல் மனம் புண் பட்டு, அச் சமயத்தில் ஏதோ மதி மயங்கி பைத்தியம் பிடித்தவன் போலாகி உன்னை விட்டுப் பிரிந்தேன்.—ஐயோ! என்னுடைய பாதகச் செயலை நினைக்க நினைக்க என் துக்கம் மேலிடுகிறதே!—(அழுகிறான்.)

ஸுதே:—(தனக்குள்) இவர் தான் போலும்.— இன்னும் பார்ப்போம்.

வாகு:—(தனக்குள்) கற்புக் கரசியே! நீ என்னை யிகழாய்; என்னை உள்ளபடி யறிவாய். அரசும் செல்வமு மிழந்து, பசியால் வருந்தி, துக்கத்தால் பீடிக்கப் பட்டுப் பரிதபிக்கத் தக்க ஸ்திதியில் இருந்தேன் என்பது உனக்குத் தெரியாதா? அப் பொழுது செய்தது புத்தி கெட்டதனால்தான் என்று என்னை நம்புவா யல்லவா?—ஹா! என்னையும் நீ நம்பவா? நான் உன்னிடம் சொன்ன சொல்லைக் கடந்து நடந்தேன். நானு ஸத்ய விரதம் பூண்டவன்? சீ! என்ன என் புத்தி!—உன்னை விட்டுப் பிரிந்தது முதல், இந் நான்கு வருடங்களும், இரவிலும் பகலிலும், உறக்க மென்பதில்லாமல் வருந்துகின்றேனே. நான் படுந் துயரத்தினின்றும் எப்பொழுது என்னை நீக்குவாய்? 'நாதா! கவலைப் பட வேண்டாம்' என்று உன் இனிய குரலால் வரும் ஒரு வார்த்தையைக் கேட்டால், என் துக்க மெல்லாம் எங்கோ

பறந்து விடுமே?—எனது செவியும் அப் புண்ணியம் செய் திருக்கிறதா? இனி உன்னைப் பார்க்கும் பாக்யமும் எனக்குக் கிடைக்குமோ?—ஏது?—நீயும் எங்கே என்ன கஷ்டப் படுகிறாயோ? என்னைப் பற்றி நினைந்து நினைந்து மன முருகுகின்றாயோ? உன் கண்களில் ஒரு துளி ஜலமும் வரப் பார்த்து ஸகிக்க மாட்டேனே! 'கண்ணே! அழாதே' என்று சொல்லி உன் கண்களைத் துடைக்க உன் பக்கலி லில்லையே?—என்னிலும் மடையன், கடையன், காதகன், அதமன், அயோக்யன் எவனாவது இருப்பானோ?—ஹா!

S. கண்மணி!—ஜகதீசா! (கை கூப்பித் தியானிக்கிறான்.) நான் என்ன தவறிழைத் திருப்பினும் என்னைத் தண்டிப்பீர். ஒன்று மறியாப் பேதை யாகிய என் காதலியை மட்டுங் காப்பாற்றும். திக்கின்றித் தயங்கித் திரியும் தையலை தீன ரக்ஷகா! தேற்றுவீர். கருணாநிதியே! காப்பாற்றுவீர்! —ஹா! ஈசனே! நானே அவளைக் கை விட்டு விட்டு, இப் பொழுது உம்மை வேண்டுவதும் பரிஹஸிக்கத் தக்கதே! —ஐயோ! கண்மணி! சூரியன் அஸ்தமித்து விட்டனனே! எங்கு இருக்கின்றனையோ? யாது செய்கின்றனையோ? உண்டனையோ? உறங்குகின்றனையோ?— ஹா! முன்பு மெல் லணை மேல் மென் துயின்ற மானே! மயிலே! மெல் லியலே! இனி, நீ காதலித்த கொடுங் கணவன் கருமத்தால் கல் லணை மேல் கண் துயிலக் கற்றனையோ? கார் குழலே! கண்மணியே! கலங்கிக் கரைந்துக் கருத் தழிந்துக் கதறு கின்றேனே!—(தலையில் கை வைத்துத் தேம்பி யழுகிறான்.)

ஸுதே:—(தனக்குள்) ஹா! இவர் தான் என்பதில் ஸந்தேக மில்லை. தமயந்தி கேட்கச் சொன்னதற் கெல்லாம் பதில் அகப்பட்டது. ஆயினும் கிட்டச் சென்று பேசிப் பார்க்கிறேன். நேரில் கேட்டால் வேறு பதில் கூறுகிறாரோ பார்க்கிறேன்.—(முன் வந்து) ஐயா! நீர் யார்? ஏன் வருந்து கிறீர்? உமக்கு என்ன துயரம்?

வாகு:—(திடுக்கிட்டு எழுந்து, வணங்கி) ஸ்வாமி! நீர் பிராம்மணரா யிருக்க, இந்தக் குதிரை லாயத்தி னருகில் எதற்காக வந்தீர்?—நீர் யார்?

ஸுதே:—நான் இப் பொழுது—இங்கு தா னிருக்கிறேன்.—இந்த மார்க்கமாய்ப் போய்க்கொண் டிருந்தேன்.—நீர் வருந்திக் கொண் டிருந்ததைக் கண்டு இங்கு வந்தேன்.—எதற்காகத் துயரப் படுகிறீர்? (வாகுகன் சும்மா இருப்பதைக் கண்டு) சொல்லக் கூடாததா யிருந்தால் சொல்ல வேண்டாம்.—ஏதோ துக்கப் பட்டீரே என்று கேட்டேன்.—

வாகு:—உங்களைப் போன்ற பிராம்ம ணோத்தமர்களிடம் சொன்னால் என்ன?—ஒருவ ரிடம் முறையிட்டால் தான் துக்கம் தீரும் என்பார்கள்.—சொல்கிறேன் கேளும்.—இந்த மேடையில் உட்காரும். (ஸுதேவர் உட்காருகிறார்.) நானும் என் மனைவியு மாக ஒரு காட்டின் வழியாய் வந்துகொண் டிருந்தோம். அப் பொழுது, அவள் தூங்கும் போது, அவளை விட்டுப் பிரிந்தேன். அது தான் என்னை வருத்து கின்றது.—

ஸுதே:—(தனக்குள்) இது தான் தக்க ஸமயம். (உரக்க) கானகத்துக் காதலியைக் காரிருளிற் கை விட்டுப் போனதுவும் உமக்கு அடுக்குமோ?

வாகு:—(தனக்குள்) ஈசா! இதற் கென்ன கூறுவேன்? நான் சொல்வதையும் நம்புவார்களா? (உரக்க) ஐயா! பண்டை விதியின் பயனுப், அச் சமயம் மதி மயங்கிச் செய்தேன். இப் பொழுது அதை நினைக்கவும் கஷ்டமா யிருக்கிறது.

ஸுதே:—ஐயா! நீர் மதி கெட்டுச் செய்த காரியத்திற்கு இப் பொழுது வருந்தி யென்ன பயன்? உமது மனைவி மனம் நோகாளோ? அவள் உம் மீது வெகுளாளோ?

வாகு:—ஸ்வாமி! ஸகல ஸௌக்கியங்களையு மிழந்து, காட்டிற்கு வந்து, கஷ்ட மடைந்து, ஸுக மற்று, புத்தி மழுங்கிய ஒரு மடையன் அவளை அச் சமயத்தில் விட்டுச் சென்றால், அது தெரிந்தும், அவள் கோபிக்க லாகுமோ? மேலும், என் மனைவி கற்பு என்பதே ஓர் உரு வெடுத்து வந்தவள். அவள் அப்படி நினையாள்; என் மீது கோபியாள்.

ஸுதே:—காட்டில் தனியாய் விட்டு வந்தீரே; பெண்பா லாயிற்றே; எப்படிக் காப்பாற்றிக் கொள்வாள்?

வாகு:—ஸ்வாமி! என் மனைவியைப் போன்ற பதிவ்ரதா ஸ்திரீகள் தாங்களே தங்களை என்ன கஷ்டம் நேர்ந்த போதிலும் காப்பாற்றிக் கொள்வார்கள்; நன் னடத்தையால் காப்புற்றுத் தங்கள் உயிர் தரிப்பார்கள்.—ஆயினும், நான் செய்த தவறை நினைக்குந் தோறும் என் மனந் துடிக்கின்றது. (வருந்துகிறான்).

ஸுதே:—ஐயா! வருந்தாதீர். நீரும் உமது மனைவியும் நற்குண நன் னடத்தை யுடையவர்களாகத் தோற்றுகிறது. அத்தகையவர்களுக்குத் துக்கம் நேரிடினும், கஷ்ட காலம் வரினும், அது கொஞ்சம் காலந்தான். கடவுள் எப்பொழுதும் உங்களைப் போன்றவர் பக்கலிலேயே இருக்கின்றனர் என்று மறைகள் அறைகின்றனவே! ஈசனருளால் நீரும் உமது மனைவியும் கூடிய சீக்கிரத்தில் ஒன்று சேர்ந்து ஸௌக்யமாக வாழ்வீர்கள்! (நளன் கை கூப்பி வணங்க ஆசிர்வதிக்கின்றனர்.)— அஸ்தமித்து விட்டது; நான் சந்திக் கடன் முடிக்கச் செல்ல வேண்டும். (மேடையி னின்று இறங்கி நிற்கிறார்.)

வாகு:—ஸ்வாமி! இன்று உம்மைத் தரிசித்தது நான் செய்த தவப் பயனே. என் மனதி லிருந்த பெரும் பளுவை யகற்றினாற்போ லிருக்கிறது.— உமக்குப் பல கோடி வந்தனம். (கை கூப்பி வணங்க, ஸுதேவர் இடதுபுறம் போகிறார்.)—ஹா! பாராண்ட நான் இன் னொருவர் கீழ் அமர்ந்து தேர்ப்பாகனும் சமையற்காரனும் இம் மூன்று வருடங்களாய் இருத்தலும், மனைவி மக்களை விட்டுப் பிரிந்து நான்கு வருடங்களாக வருந்துதலும், நான்செய்த தீவினையின் பயனே!—இப் பிராம்மண ருடைய வாக்கின் பலனாகிலும் என் மனைவி மக்களை மீண்டும் அடையும் பாக்கியம் எனக்கிருக்குமாக! "கடவுளை நம்பினோர் கைவிடப் படார்," என்ற முதுமொழி பொய்க்காது. அவரையே எக்காலும் நம்பி வணங்குவேன். (கை கூப்பித் துதித்துக் கொண்டே வலதுபுறம் போகிறான்.)

S.

அங்கம் 4.
காட்சி 2.

[தமயந்தியின் அறை.—பகல்—தமயந்தி ஒரு மஞ்சத்தில் உட்கார்ந்து யோசித்துக் கொண்டிருக்கிறாள். இந்திரசேனை கீழே உட்கார்ந்து விளையாடிக் கொண்டிருக்கிறாள்.]

தம:—(தனக்குள்) நான் சேதி நகரத்திலிருந்து புறப்படும்
போது அனுப்பிய அந்த ஸுதேவர் இன்னும் வரக்
காணோமே! எங்கெங்குத் திரிகின்றாரோ?—எனது துர்ப்
பாக்கியத்திற்காக எவ்வளவு பெயர்களை இன்னலிலாழ்த்து
கிறேன்!—என் குழந்தைகள் 'அப்பா எங்கே' என்று
கேட்கும்போதெல்லாம் என் உளம் பதைக்கின்றதே!—
மஹாலக்ஷ்மி! தேவி! உனது பாதமே தஞ்சமாகக் கருதி
வழிபடும் என்னைக் காத்தருளாயோ? என் கணவனை
மீளவும் கண்டு அவருடன் வாழச் செய்யாயோ? அம்மணி!
ஸகல துக்கங்களையும் நீக்கி எல்லாருடைய அபீஷ்டங்களை
யும் கொடுப்பவளென்ற உனது நாமதேயங்களும் என்னால்
பொய்த்து விடுமோ? ஸர்வ மங்களங்களும் உன்னா
லல்லவோ உண்டாகின்றன. நித்ய மங்கள ஸ்வரூபிணீ!
நீ உனது நாதனுடன் என்றும் பிரியாதிருப்பதால், உன்னை
வழிபடும் எல்லா ஸ்திரீகளையும் அவ்விதம் செய்வது ஸகஜ
S. மாதலால், எனக்கும் அருள் புரிவாய். (துதித்துப் பாடு
கிறாள்.) (ஒரு மணியோசை கேட்கின்றது.) நற்சகுன
மாகின்றது!—என் கணவர் வருவாரோ?—கொடும் பாவி
யாகிய எனது துரதிருஷ்டமல்லவா என் கணவனையும்
பீடித்து, அவரை நாடு நகரமும் இழக்கச்செய்து, காட்டிற்கு
ஓட்டி, என்னையும் விட்டகலச் செய்தது? பிரிந்து நான்கு
வருடங்களாகின்றனவே!—நாதா! எங்கு இருக்கின்றீரோ?
எனக்காக என்ன வருந்துகின்றீரோ?—ஐயோ! நாதா!
நாதா!! (அழுகிறாள்.)

இந்திரசேனை:—(ஓடி வந்து) அம்மா! ஏன் அழுகிறாய்?

தம:—(வாரி யெடுத்து மடி மீது வைத்து) என் கண்ணே! அப்பாவையும் பார்ப்பேனா! (அழுகிறாள். குழந்தை அவள் கண்களைத் துடைக்கின்றது.)

இ. சேனை:— அழாதே, அம்மா!— நீ அழுதால், நானும் அழுவேன்.—

தமய:— இல்லை— கண்மணீ!—

(கேசினி இடதுபுறமாய் வருகிறாள்).

கேசினி:— அம்மா! ஸுதேவர் வந்திருக்கிறார்.—

தமய:— (பரபரப்புடன் எழுந்திருந்து) அப்படியா? உள்ளே வரச் சொல்.— இந்திரசேனை! நீ கேசினியோடு போய் விளையாடிக்கொண்டிரு.— (கேசினியும் இந்திர சேனையும் இடது புறம் போகிறார்கள்).— ஜகதீசா! நல்ல வார்த்தை கேட்பேனோ! (ஸுதேவர் இடதுபுறமாய் வருகிறார்)— ஸ்வாமி! (எழுந்து கை கூப்பி) வாரும், உட்காரும். (ஆஸனமளித்து, பிறகு தானும் உட்கார்ந்து) பார்த்தீரோ என் பிராண நாதரை? எங்கிருக்கிறார்? என்ன செய்கிறார்?

ஸுதே:— தமயந்தி! கண்டேன் உனது பிராண நாதரை.

தமய:— எங்கே? ஏன் கூட்டி வரவில்லை?—

ஸுதே:— அம்மா! நான் சொல்வதை முற்றிலும் ஸாவதானமாகக் கேட்டு—

தமய:— ஸௌக்கியமாயிருக்கிறாரா?— என்ன சொன்னார்?

ஸுதே:— சேதி நகரத்திலிருந்து உன்னை விட்டுப் போன பிறகு, பல தேசங்களிலுஞ் சென்று பார்த்து, எங்கும் காணமல், கடைசியில், அயோத்தி மாநகரையடைந்தேன்.

தமய:— அங்கா இருக்கிறார்?—

ஸுதே:— அவஸரப் படுகிறாயே!— (தனக்குள்) கணவனைப் பிரிந்த ஆதுரம் கொடியதல்லவா? நான் கடிந்து கூறலாகாது. (வெளிப்படையாய்) தமயந்தி! அயோத்தியில் அரசாண்டு வரும் ருதுபர்ண ராஜனது அரண்மனையில் ஒருநாளுண்டேன்.— தேவாமிருதம் போல் இருந்தது.— உடனே ஸந்தேகங் கொண்டேன். அங்குள்ளோரை விசாரிக்க, ஜீவலன் என்ற நற்குணமுள்ள ஸாரதியொருவன் அச்சமையல் வாகுகன் என்றவனால் செய்யப்பட்டது என்றான். அவ் வாகுகனைப் பற்றி வினவியதில், அவ் வாகுகன் சுமார் நான்கு வருடங்களுக்கு முன் வந்ததாகவும்,—

தமய:— ஹா!— (பெருமூச்சு விடுகிருள்).—

ஸுதே:— ருதுபன்ன ராசனது பிரியம் மிக்க தேர்ப் பாகனென்றும், அழ விலாது உணவு அமிர்தமெனச் சமையல் தொழில் புரிவா னென்றும்,—

தமய:— உம்.—

ஸுதே:— அங்கு வந்தது முதல் நித்தமும் தன் மனைவியைப் பிரிந்ததை நினைத் துருகுவா னென்றும் சொன்னுன். அவனைக் காண வேண்டு மெனலும், ஓ ரிடத்தைச் சுட்டிக் காட்டி, தினம் வேலை முடிந்ததும் அங்கு வருவா னென்றனன். அன்று, அஸ்தமிக்கும் போது, அவ் விடத்தில் கண்டேன். ஜீவலன் சொன்ன தெல்லாம் உண்மையா யிருந்தது. உன்னை விட்டுப் பிரிந்த துக்கத்தை வாய் விட்டலறினுர், கதறினுர்.—

தமய:— ஐயோ! (கண்ணீர் விடுகிருள்.)

ஸுதே:— நான் உடனே சென்று 'ஏன் துக்கப்படுகிறீர்' என்று கேட்டேன். பிரிவாற்றுமையைக் கூறினதும், நீ சொல்லிய கேள்வியைக் கேட்டேன்.—

தமய:— என்ன சொன்னுர்?—

ஸுதே:— தக்க பதில் சொன்னுர்.— அன்பு குறைந்து உன்னை விட்டுப் பிரிய வில்லை யென்றும், தனது கருமத்தின் பலனுய், நீ கஷ்டப் படுவதைக் கண்டு ஸகியாமல், உன்னை விட்டுப் பிரிந்தா ரென்றும், நீ கற்புடையவ ளாதலால் தன்னைக் கோபிக்க மாட்டா யென்றும், எப்படி யாவது மானத்தையும் பிராணனையும் காப்பாற்றிக் கொள்வாய் என்றும் கூறி, மிகவும் வருத்தப் பட்டார்.—

தமய:— (பெருமூச்சு விட்டு) அவர் தான் என் பிராண நாதர்.

ஸுதே:— உண்மையில், வாக்கினுல் உன் மன்னவரை யொப்பார்;—ஆனுல்—

தமய:— என்ன?—

ஸுதே:—மறித் தொருகால், ஆக்கையை நோக்கின், அவ ரல்லர்.

தமய:— ஏன்?

ஸுதே:— ஜீவலன் கூறியது, அவ் வாகுகன் மொழிந்தது, எல்லாவற்றையும் பார்த்தால், நள மகாராஜரோ என்றையுற்றேன். ஆனால்,— அவரது உரு நோக்கியதும்— கறுத்துச் சிறுத்த தேகத்துடன் அடையாளமே தெரியாமலிருக்கிற படியால்,—

தமய:— காட்டில் திரிந்து, கஷ்டப் பட்டு, வேளையில் உணவில்லாமல், உறக்க மில்லாமல், மனம் வருந்தி, சமையல் வேலை செய்வதால், அப்படியா யிருக்கக் கூடாதா?—

ஸுதே:—ஆமாம்! நீ சொல்லுவதும் நியாய மாகத்தான் தோன்றுகிறது —

தமய:— அவரை எப்படி யாவது இங்கு அழைத்து வர வேண்டும்.

ஸுதே:— நான் சென்று, நீ இங்கு இருப்பதைக் கூறினால், உடனே வருவாரோ.—

தமய:— ஒருகால், அவரா யிரா விட்டால், என் செய்வது?—

ஸுதே:— அதுவும் வாஸ்தவந்தான்.

தமய:— (சற்று யோசித்து) எனக்கு ஓர் உபாயந் தோன்றுகிறது.— நீர் உடனே அயோத்திக்குத் திரும்பிச் சென்று, ருதுபன்ன மன்ன னிடம்: "நள மகாராஜன் உயி ருடன் இருக்கின்றாரோ இல்லையோ என்று தெரியாததனால், தமயந்தி மீண் டொரு சுயம் வரம் பூண்டாள்; அச் செய்தி கேட்டு எல்லா அரசர்களும் செல்கின்றார்கள்; நீரும் செல்லலாம்"—என்று உரையும். அந்தச் சுயம் வரம், நீர் அங்கு சென்று சேர்ந்த மறு நாள் சூர் யோதய மானதும் என்று சொல்லும். இதைக் கேட்டதும் ருதுபன்னன் உளம் மகிழ்ந்து புறப்படுவான். தேரை ஒரு நாளில் இங்கு வரச் செய்யும் வல்லமை என் நாத ரொருவருக்கே உள தாகையால், அவ் வாகுக னெனப் படுபவர் எனது கணவரோ என்று கண்டு பிடிக்கலாம்.

ஸுதே:— இது நல்ல யுக்திதான்!—

தமய:— இது ருதுபன்னனைத் தவிர வேறு ஒருவருக்குந் தெரிய வேண்டாம். என் தாய் தந்தையரும் அறியக் கூடாது. ஆனால், முடியுமானால், அவ் வாகுகர்க்கு மட்டும் தெரியட்டும்.

உடனே புறப்படும். உம்மை சீக்கிரம் எதிர் பார்த் திருப்பேன். உம்மை எவ் வளவு கஷ்டப் படுத்துவது என்று கவலையா யிருக்கிறது.

ஸுதே:— நீ உன் கணவ ருடன் கூடினல் அதுவே எனக்குப் போதும். கடவுள் கிருபை யிருக்குமாக! நான் வருகிறேன். (தமயந்தி வணங்க, ஆசிர்வதித்து, இடது புறம் செல்கிருர்).

தமய:— (தனக்குள்) எனது நாதராய்த்தா னிருக்க வேண்டும்.— ஐயோ! ஒரு வேளே, மறு சுயம்வரம் என்றதைக் கேட்டதும் என் கணவர் என்னே வெறுத்து உயிர் விடுவாரோ?— மாட்டார்.— அவர், இது நான் செய்த சூழ்ச்சி யென்று ஊகித் தறிவார்.— தம் கணவரைத் தம்மினும் புத்தி யுள்ளவ ரென்று கருத வேண்டாமா கற்புடைய மகளிர்?— என் நாதர்தான் அவர்.— எப்பொழுது அவரை அடை

S. வேனே! (துதித்துக் கொண்டே வலதுபுறம் போகிருள்).

அங்கம் 4.

காட்சி 3.

[அயோத்தி.— ருதுபர்ண ராஜாவின் அரண்மனேத் தோட்டத்தில் ஓர் பாதை.— காலே.— ருதுபர்ணனும் வாகுகனும் பேசிக் கொண் டிருக்கிருர்கள்.]

ருது:— வாகுகா! அச்வ சாஸ்திரத்தில் தேர்ந்த உன்னை லன்றி மற் றெவராலும் முடியாத தொரு காரியம் உளது. நீ அந்த உதவி எனக்குச் செய்ய வேண்டும்.

வாகு:— மஹா ராஜாவின் கட்டளேப் படி நடக்கக் காத்திருக் கிறேன்.

ருது:— இப் பொழுதுதான் ஒரு பிராம்மணன் எனது சபைக்கு வந்து, குண்டின புரத்தை யாளும் வீமராஜன் புதல்வி யாகிய தமயந்தியின் மறு சுயம்வரம் நாளே என்றுன்.—

வாகு:— (ஒரு புறமாக) ஹா! (பெருமூச்சு விடுகிருன்)—(உரக்க) மஹாராஜா! தமயந்தி கற் புடையவ ளாயிற்றே! அவ ளிதற்குச் சம்மதிப்பாளோ?

ருது:—அப்படி சந்தேகப் பட வேண்டாம். வேதமொழிவாணன் அவ்வாறே ஓதினான்; இங்குதானிருக்கின்றான். மேலும், முன் நாளில் என் மேல் எறிய வேண்டிய மாலை அந்த நளன் மீது விழுந்தது போலும்! அதனால் தான் அவள் இவ்விரண்டாம் சுயம் வரம் கோரி யிருக்கின்றாள். —தாமதிக்க லாகாது. நீ மனம் வைத்து விரைவினில் தேர் செலுத்தினால், ஒருகால் அங்கு போய்ச் சேரலாம்.—(வாகுகன் யோசிக்கின்றதைப் பார்த்து) அவ்வளவு தூரம் இவ்வொரு நாளில் நம் முடைய குதிரைகள் போகுமா என்று யோசிக்கின்றனையா? சீக்கிரம் யோசித்துக் கூறு. அதற்குள் நான் சில விஷயங்களைப் பற்றி ஏற்பாடு செய்து வருகிறேன். (இடது புறம் போகிறான்).

வாகு:—(தனக்குள்) ஹா! பாதகி! உன்னை யிவ்வளவு காலம் நம்பி மதி மோசம் போனேனே! கற்புக் கரசி நீயே என்று நினைத்தேனே! நீ இவ் விதம் துர் நடத்தையின ளென்று எண்ண வில்லையே!—சீ! நமது காதலியைப் பற்றி இப்படிக் கடிந்து கூறலாமா?— காதலி!— காதலி!— யார் காதலி யாகிறாளோ நாளை யிப் போதைக் குள்?— ஹா! அதைக் கேட்டதும் என் உயிர் துடிக்கின்றதே!— நான் செல்ல ஒத்துக் கொள்கிறேன். சென்று அவளைக் கொன்று பழி வாங்குகிறேன்.— ஹா! என்ன எண்ணினேன்? என்மீது உயிரா யிருந்த தமயந்தியைப் பற்றியா நான் இப்படி நினைப் பது?—சீ! உயிரா! என் உயிருக்கு உலை யல்லவா ஆயினாள்? அவள் பிரீதி யுள்ளவள் போல் காட்டியது எல்லாம் வேஷம். அவ்வளவு தான் ஸ்திரீகள் அன்பு! நான் நாடு நகரம் செல்வம் முதலியவை யுடன் இருந்த வரையில் என்னுடன் கூடிக் குலாவி யிருந்தாள். நான் காடடைந்ததும், வேறொரு வனை அடைய விரும்புகிறாள்.— நான் ருதுபர்ண னிடம் இத் தொழில் புரிய நேர்ந்தது இதற்குத்தானோ?—என் திறத்தால் போய்ச் சேருவேன் என்கிறானே? முடியாது என்று சொல்லி விடவா?—கூடாது.—நான் பொய் சொல்ல லாகாது. மேலும், அவ னிட்ட உணவை யுண்டு, அவ னிடம் ஊழியம் செய்து, அவன் எண்ணத்திற்கு மாறாக நினைக்க லாமா?—செல்ல வேண்டியது தான்.— ஆயினும், அங்குச்

சென்று, அவள் வேறொருவனை மணத்தலைப் பார்த்து, எப்படி ஸகிப்பேன்? எப்படி உயிர் தரிப்பேன்?— காதகி! உன்னைக் கண்டதும் கசக்கிப் பிழிந்து விடுவேன்.— சீ! அவள் என்ன செய்வாள்? என் மீ தல்லவா குற்றம்? நான் அவளைத் தனியே காட்டில் விட்டமையால், அவ ளிடம் எனக்குக் காதல் இல்லை யென்று எண்ணி, மனம் வருந்தி, வருத்த மேலீட்டால் இவ் விதம் செய்வதற்குச் சம்மதப் பட்டிருப்பாள். வெகு காலம் என்னை விட்டுப் பிரிந்தமை யால், அவளுக்கும் என் னிடம் காதல் குன்றி யிருக்கும். —நியாயந்தான.— நல்ல நியாயம்! இப் பொழு தல்லவா தெரிகிறது? மாதரை ஒருகாலும் நம்ப லாகாது.— சீ! மற்றைய ஸ்திரீகளைப் போலவா தமயந்தி? கற்புடைய சிமோட்டி யாயிற்றே!— ஒருகால் இவ் வளவும் பொய்யா யிருக்குமோ?— அந்தப் பிராம்மணன் போகும் போது பார்த்தேன். முன் னொரு நாள் என் னுடன் பேசினவர் மாதிரி யிருந்தது.— ஆமாம்! அவர் தான். (சற்று யோசித்து, — எனக்கு ஒன்று தோன்றுகிறது. இந்தப் பிராம்மணன், ஒரு கால் நம்மை ஸந்தேகித்து, தமயந்தி யிடம் கூறியதன் மேல், அவள் என்னைக் கண்டு பிடிக்க யுக்தியாய் இப்படிச் செய்திருக்க வேண்டும். இல்லா விடில், நாளை சுயம்வரம் என்றிருக்க, இன்று தான் வருமா செய்தி? —சீ! இது வீண் யோசனை.— ஒரு வேளை என்னைக் காண்ப தற்கே இச் சுயம் வரம் இழைத்தனள் என்று வைத்துக் கொள்கிறேன். அப்படி யிருப்பினும், கற்புடைய தமயந்தி இவ் விதம் செய்யச் சம்மதப் பட்டது, உண்மையில், மிகவும் கொடியது. அதுவும், அற்பனான, பாபியான, புத்தி யற்ற நான் அவளை ஏமாற்றியதற்காக வல்லவா? இவ் வுலகில், ஸ்திரீகள் மனதை யறிவது மிகவும் கடினம்.— ஆயினும், உலகத்தோர் பேசும்படி இப்படியும் செய்வாளா!—

S. (பாடுகிறான்):

முன்னை வினையான் முடிந்ததோ? மொய் குழலாள்
என்னைத்தான் காண விசைந்ததோ?— தன் மரபுக்
கொவ்வாத வார்த்தை யுலகத் துரைப் பட்ட
தெவ்வாறு கொல்லோ விது?—

(சற்று யோசித்து) உண்மையில் இப்படித்தா னிருக்க வேண்டும்.— எனக்காக எப் பொழுதும் வருந்துபவள் வேருெருவனை மணம் புரிய வேண்டு மென்ற எண்ணத் துடன் இது செய் திருக்கமாட்டாள். மேலும், என் னுடன் பன்னிரண்டு வருடங்களுக்கு மேல் கூடிச் சுகித்து இரண்டு குழந்தைகளையும் பெற்ற பின், புனர் விவாகம் செய்து கொள்ளாள்.— எல்லாவற்றிற்கும், நான் சென்று, இதில் உண்மை யிருக்கிறதா, அல்லது; நான் நினைத்த பிரகாரம், சூழ்ச்சி தானு வென்று நேரில் அறிகிறேன்; ஆகையால், ருதுபர்ணன் வேண்டுகோளுக்கிசைந்தால், என் காரியமும் கை கூடும்.—

(ருதுபர்ணன் இடதுபுறம் வருகிருன்).

ருது:—வாகுகா! என்ன சொல்லுகிருய்?

வாகு:—(கை கூப்பி) மஹாராஜா! உமது உத்தரவுப் படியே நாளை சூரியோதயத்திற்கு முன் குண்டின புரத்தில் உம்மைச் சேர்க்கிறேன்.— முடியு மானல், இன்று மாலைக் குள்ளாகவே அங்கே போய் விடவும் பார்க்கிறேன்.

ருது:—(நகைத்து) வாகுகா! என்ன! என் னுடன் விளையாடு கிருயா? நமது குதிரைகள் நம்மை அவ் வளவு தூரம் கொண்டு போகுமா அதற்குள்?

வாகு:—மஹா ராஜா! நான் விளையாட வில்லை. நான் அச்வ சாஸ்திரத்தில் தேர்ச்சி யுடையே னென்பது உங்களுக்குத் தெரிந்ததே.— நம் மிட மிருக்கும் ஸிந்து தேசக் குதிரை களுள் நான்கு குதிரைகளைத் தேர்ந்து எடுத் திருக்கிறேன். அவைகளுக்கு அச்வ சாஸ்திரத்தில் விதித்திருக்கிற லக்ஷணங்கள் எல்லாம் இருக்கின்றன. அவைகள் மெலிந்து, நீண்டு, சக்தி யோடு கூடி, சுலபத்தில் தாவுதல் புரிவனவா யிருப்பதுடன், நல்ல மயிர்ச் சுழிக ளுடன் கூடியவை: முகத்தில் ஒன்றும், பொறிகளில் இரண்டும், பக்கங்களில் நான்கும், மார்பில் இரண்டும், முதுகில் ஒன்றும், ஆகிய பத்துச் சுழிகளும் இருக்கின்றன. பரந்த நாசிகளும் பருத்த தாடைகளுங் கூடியன. ஆகையால், ஸந்தேக மின்றி அவைகளைக் கொண்டு இன்று சூரிய அஸ்தமனத் திற்கு முன்பே விதர்ப்ப நாட்டை யடையலாம்.

ருது:— மெச்சினேன் உனது திறத்தை! இவ்வுபகாரத்தை என்றும் மறவேன். உடனே புறப்பட வேண்டும். குதிரைகளுக்குத் தீனி போட்டு ரதத்தைத் தயார் செய். அதற்குள் நான் தக்க ஆடை யாபரணங்கள் அணிந்து வருகிறேன். செய்தி கொணர்ந்த பிராம்மணனும் நம்முடன் வருவார். (இடது புறம் போகிறான்.)

வாகு:— ஜகதீசா! 'கடவுளை நம்பினோர் கைவிடப் படார்' என்ற உலக வழக்குப் பொய் யாகுமோ? எனது ஸத்தியமும் எனது காதலியின் கற்பும் வீண் போகுமோ? உன் மீது எல்லா பாரத்தையும் போட்டு உன்னையே நம்பியுள்ளேன்.

S. (துதித்துக்கொண்டு வலது புறம் போகிறான்.)

அங்கம் 5.

காட்சி 1.

[குண்டினபுரம்.— தமயந்தியின் அறை.— மாலை.— தமயந்தி மஞ்சத்தில் உட்கார்ந் திருக்கிறாள். கேசினி பக்கத்தில் நின்று கொண் டிருக்கிறாள்].

தமய:— கேசினி! இப் பொழுது வந்த ரதத்தின் ஓசையைக் கேட்டு மேல் மாடத்திற் சென்று பார்த்தேன். அந்தத் தேர் நெருங்கிய போது உண்டாகிய ஓசையைக் கவனித்தேன். அந்தத் தேர் வந்த வேகத்தையும் பார்த்தேன்.— எனக்கு ஏதோ ஸந்தேகமாய் இருக்கிறது.— அவர்கள் இறங்கியதும் பார்த்தேன். நமது ஸுதேவரும், ருதுபர்ண ராஜனும், ஒரு ஸாரதியுந் தான் இருந்தார்கள்.— தேர் ஓசையைக் கருதினால், அந்த ஸாரதி என் நாதராகத்தா னிருக்க வேண்டு மெனத் தோன்றினும், அந்த ஸாரதியைப் பார்த்ததும், என் மனம் கலங்கிற்று.—

(ஸுதேவர் இடது புறம் வருகிறார்.)

(வணங்கி) ஸுதேவரே! வாரும், உட்காரும். (ஆஸனமளித்து)— அவர்தானா?— என்ன சொன்னார்?—

ஸுதே:— தமயந்தி!— இப்போது தான் வந்தோம்.—குதிரை என்ன வாயு வேகம் மனோ வேகமாய் வந்தது தெரியுமா?— வருகையில், வழியில், ருதுபர்ணன் 'மேலாடை வீழ்ந்த தெடு' என்றான்; அவ்வளவில், அத்தேர் நாலாறு காதம் கடந்ததே!— என்ன ஆச்சரியம்!—

தமய:— அந்த ஸாரதி தானா நீர் சொல்லியது?

ஸுதே:— ஆம்;— அவர் தான்.— இச் சுயம் வரச் செய்தி கேட்டது முதல், கோபிக்கிறார், அழுகிறார், துடிக்கிறார், மனம் பதைக்கிறார், பெருமூச்சு விடுகிறார்.—இருந்தாலும், ருதுபர்ணனிடம் வேலைக் கமர்ந்தமையால், அவன் ஏவலை முடித்துத் தானே தீர வேண்டுமென்று கருதியவர் போல் மன திடத்துடன் வந்திருக்கிறார்.— எனக்கு அவர் தான் நமது நள மஹாராஜா என்று தோற்றுகிறது.— எல்லாவற்றிற்கும் நீ சென்று பார்த்தால் நலம்.—

தம:— ஆம், ஸுதேவரே!— ஒருவருக்கும் தெரிய வேண்டாம்.— எல்லாம் சீக்கிரம் வெளியாய் விடும். என் தந்தை ருதுபர்ணனைச் சந்திப்பதற்கு முன், நாம் நமது ஸந்தேகத்தைத் தெளிந்து கொள்ள வேண்டும்.—

ஸுதே:— நான் சென்று வீம ராஜனிடம் ருதுபர்ண மன்னன் வந்திருப்பதாகக் கூறி வருகிறேன். (இடது புறம் போகிறார்).

தமய:— (தனக்குள்) என்ன நினைத்தாரோ?.— எதாயினும், துணிந்த பிறகு, இனி அதைப் பற்றி எண்ணிப் பயனென்? மேல் நடப்பதை யோசிக்க வேண்டும். (சற்று யோசித்து, உரக்க) கேசினி! நீ உடனே அந்த ஸாரதியிருக்குமிடம் போய், அவர் என்ன செய்கிறார், என்ன சொல்கிறார், எப்படிச் சமையல் செய்கிறார், எல்லாவற்றையும் பார்த்து, அவரையும் மெள்ள விசாரித்து வா. குழந்தைகளையுங் கூட்டிச் செல். குழந்தைகளைப் பார்த்து என்ன செய்கிறார் என்றும் கவனி. போ, சீக்கிரம். (கேசினி இடது புறம் போகிறாள்).— என் மனம் அவர் தான் என் நாதர் என்று சொல்கிறது.— ஆயினும், அவர் நிறமும் உருவமும் வேறாயிருக்கின்றனவே? அவர் இன்னொருவராய்

இருந்தால், நான் உயிர் விடுவேன்.— ஸுதேவர் சொன்ன தெல்லாங் கவனித்தால், அவர் தான் என்பதில் ஸந்தேகமே யில்லை. வேறொருவராலும் இவ்வளவு தூரம் ஒரு பகலுக்குள் கடக்க முடியாது. அவர் தேவாமிருதம் போல் சமையல் செய்கிறார் என்றும் முன்பே சொல்லியிருக் கிறாரே, அந்த ஸுதேவர்.— அவர் தான் என் நாதர். என் மனம் அவரிடமே நிற்கின்றதே!— அவரைச் சென்று பார்க்கவா?— அவரிடம் சென்றால், என்னைக் கண்டதும் என்ன நினைப்பாரோ? இச் சுயம் வரம் நோற்றாளே, இவள் முகத்திலும் விழிக்கக் கூடாது, என்று கருதினால், என் செய்வது?— எல்லா வற்றிற்கும் கேசினி வரட்டும். பிறகு, நடந்த விஷயங்களை யெல்லாம் எனது தாய் தந்தையர் களுக்குத் தெரிவித்து, அவரை அரண்மனைக் குள் வரவழைத்து உண்மையை அறிவோம்.— ஈசா! உன்னையே

S. நம்பி யிருக்கிறேன்.— (கடவுளைத் தியானித்துப் பாடிக் கொண்டே வலது புறம் போகிறாள்.)

அங்கம் 5.

காட்சி 2.

[வீமன் அரண்மனைத் தோட்டத்தில் ஒரு பாதை.— சாயங் காலம்.— வாகுகன் ஒரு கல் லாஸனத்தில் உட்கார்ந்து யோசித்துக் கொண் டிருக்கிறான்.]

வாகு:— (தனக்குள்) நான் ஸந்தேகித்த படியே ஏதோ சூழ்ச்சி நடந் திருக்கின்றது.— அந்தப் பிராம்மணன் மண நாளைக்குப் பின் அயோத்திக்கு வந்து சேர்ந்தாரோ? அல்லது, அவர் தவறுதலாய் 'நாளை' யென்று கூறினாரோ? நாளையா யிருந்தால், இன்று காலையா வந்து சொல்லி யிருப் பார்?— மாட்டார்.— பல முறை கேட்டும், நாளை தான் என்றனரே!— வரும் பொழுதும், என்னுடைய ஸாரதித் திறமையைக் கண்டு மெச்சி, நாளைக் காலை முன்னே இங்கு வந்து சேர முடியுமோ வென்று தனக்குத் தோன்றிய ஸந்தேகம் தீர்ந்தது என்று ஸந்தோஷித்தாரே!—ஆயினும், என்ன காரணம் பற்றி அரண்மனை யெங்கும் இதற்குள்

ஓசையின்றி இருக்கிறது?—வேறு அரசர்கள் வந்திருக்கும் அடையாளங்கள் ஒன்றுங் காணேமே!— மார்க்கத்திலும் மணக்கோலங்கள் ஒன்றும் புலப்பட வில்லையே!— நகர் முழுவதிலும் ஒருதோரணத்தையும் நான் காண வில்லை.— அந்த பிராம்மணன் ருதுபர்ண ராஜனை அரண்மனைக்குள் அழைத்துச்சென்றிருக்கிறார்.— போகு முன், ருதுபர்ண ராசன், என் போலவே ஸந்தேகப் பட்டு, என்னிடம் தனிமையாகப் பேசி, உடனே மீண்டு புறப்படுவதற்கும் தயாரா யிருக்கும்படி சொல்லிச் சென்றார்.— அவ் வந்தணர் பொய் பேசி யிருப்பாரோ?— இராது— ஆனால், கற்பிற் சிறந்த தமயந்தி மன மொப்பி மறு சுயம் வரம் நாடினாள் என்று நம்ப என்னால் முடிய வில்லையே!— ஒருகால் ருதுபர்ணனை ஏதாவது வியாஜத்தால் இங்கு வரவழைத்து மணம் செய்து கொள்ள எண்ணினாளோ?— சீ!— என்ன தவறு நினைத்தேன்?— ஒருகாலும், என் காதலி அப்படிச் செய் திருக்க மாட்டாள்.— ஒரு வேளை—ஒரு வேளை— என்னைக் காண இப்படி யுக்தி செய்தாளோ?— அப்படி யிருந்தால்?—இருந்தாலும், இப்படி இரண்டாம் சுயம் வரம் என்று ருதுபர்ண ராசனுக்குச் சொல்லி யனுப்பியது மானக் கேடு அல்லவா?— (இடது புறம் நோக்கி) அதோ யாரோ வருகிறார்கள்.—என் மக்கள் வருகிறார்கள்!— ஈசா! இதுவும் உமது திருவுள்ளமோ?— என்னைப் பல விதத்திலும் சோதிக்க வேண்டுமோ?— நான் தைரியத்தை விடாது, மனந் தளராது இருக்க அருளுவீர்!—

(கேசினி, இந்திர சேனன், இந்திர சேனை இடது புறம் வருகிறார்கள்.)

கேசினி:— ஐயா! தாங்கள் ருதுபர்ண ராஜாவோடு வந்தீரோ?

வாகு:— (குழந்தைகளை உற்றுப் பார்த்துக் கொண்டே) ஆம்; நான் அவருடைய தேர்ப் பாகனும் சமையற் காரனும்.

கேசினி:— ஆனால், சமையல் ஆய் விட்டதா? என்ன, சும்மா உட்கார்ந்து கொண் டிருக்கிறீரே?

வாகு:— இல்லை— நான் நினைத்த மாத்திரத்தில் சமையல் ஆய் விடும்.

கேசினி:— (சிரித்து) பெண் பிள்ளையாகிய என் னிடமா இந்தப் பொய் சொல்லுகிறீர்?

வாகு:— இல்லை யம்மா!— நீங்கள் குழந்தைக ளுடன் இங்கு விளையாடிக் கொண்டு பார்த்துக் கொண் டிருங்கள்; (வலது புறத்தைச் சுட்டி) அதோ தெரிகிற சமையல் அறையில் ஒரு நிமிஷத்தில் பல வகைகள் சமையல் செய்து வருகிறேன். (வலதுபுறம் போகிறான்.)

இ. சேனன்:— யார் இது?

கேசினி:— ருதுபர்ண ராஜா தாதாவைப் பார்க்க வந் திருக்கிறார். அவ ருடன் இவர் வந் திருக்கிறார்.— (வலது புறத்தில் இருக்கும் சமைய லறைப் பக்க மாகப் பார்த்து) என்ன ஆச்சரியம்! எல்லாம் செய்து விட்டு வருகிறாரே! ஸந்தேக மில்லை.— இன் னும் பார்ப்போம்.—

இ. சேனை:— என்ன ஸந்தேக மில்லை?

கேசினி:— ஒன் று மில்லை.—

(வாகுகன் வலதுபுறம் வருகிறான்.)

வாகு:— அம்மணி! சமையல் ஆய் விட்டது.—குழந்தைகளுக்கு என் கையால் உணவு கொடுக்க வேண்டு மென்று எனக்கு எண்ணம் உண்டாகிறது.— (குழந்தைகள் இருவரையும் கட்டி யணைத்து முத்த மிட்டு அழுகிறான். இரு குழந்தைகளும் வாகுக னிட மிருந்து திமிறிக் கொண்டு போய்க் கேசினியைக் கட்டிக் கொள்கின்றன.)

கேசினி:— ஐயா!— ஏன் இந்தக் குழந்தைகளைக் கண்டு இப்படி அழுகிறீர்?

வாகு:— அம்மணி! எனக்கும் இதே மாதிரி இரண்டு குழந்தைகள் உண்டு.— இவர்களைப் பார்த்ததும் அவர்கள் ஞாபகம் வந்தது.— மேலும், இந்தக் குழந்தைகள் தந்தையை இழந்த தோடு தாயும் மறு சுயம் வரம் பூண்டாள் என்று கேட்கவும் வருத்தமா யிருக்கிறது.—

கேசினி:—இவர்கள் தந்தை, நள மகாராசர், மக்கள் எல்லோரையும் விட்டு விட்டு, பிறகு, கொடுங் காட்டில், கரிய இருட்டில், பாழ் மண்டபத்தில், மனைவியைத் தனியாய் விட்டுச் சென்றார்.—

வாகு:— அதற்காக மறு சுயம் வரம் ஏற்பாடு செய்தாளோ?

இ. சேனன்:— சமையற்கார மடையா! என் னுடைய தாய் தந்தையர்களைப் பற்றி நீ யா ரடா இப்படிப் பேசுவதற்கு? எங்களைக் கண்டு நீ என்னடா பரிதாபப் படுவது?

வாகு:— குமாரா! உன் தந்தை, நாடு நகர மிழந்து செல்ல, நீங்கள் உங்கள் பாட்டனுரால் போஷிக்கப்பட நேர்ந்ததே என்றும், உங்கள் தாய் மறு விவாகம் செய்து கொண்டால், அதன் பின்பு உங்கள் கதி என்ன வாகுமோ என்றுந் தான் வருந்துகிறேன்.

இ. சேனன்:— மடையா! எனது தந்தை தன் வாக்கைக் காப் பாற்றும் பொருட்டே காடு சென்ருர்.—பல மன்னர்களும் வந்து வணங்கியதால் தன் பாதத்தில் தழும்பு உண்டாகப் பெற்ற நள மகாராஜருடைய புதல்வனுன நான் அந்தப் புஷ்கரனை வென்று ராஜ்யத்தை மீட்பதா கஷ்டம்?— ஆனுல், என் தந்தையின் ஸத்திய விரதத்தைக் கெடுக்கக் கூடாது என்றே சும்மா இருக்கிறேன்.—

வாகு:— (மைந்தனைக் கட்டிக் கொண்டு) குழந்தாய்! மன்னர் பெருமை மடையர் அறிவாரோ? நான் தெரியாமற் சொல்லியதற்கு என்னைக் கோபிக்காதே! மன்னிப்பாய். (கண்ணீர் விட் டழுகிருன்).

இ. சேனன்:— (வாகுக னின்றும் விலகி நின்று) இனி இவ் விதம் பேசாதே.

சேனை:— நன்ருயிருக்கிறது ஐயா! நீங்கள் செய்கிறதும் சொல் கிறதும்.— (குழந்தைகளை) வாருங்கள், நாம் உள்ளே போவோம். (மூவரும் இடதுபுறம் போகிருர்கள்.)

வாகு:— (தனக்குள்) ஹா! ஜகதீசா! என் மக்களை நேரிற் கண்டும், அவர்களை மன மாறக் கட்டி யணைத்து முத்தமிட்டு இன்புறக் கொடுத்து வைக்காத பாவி யானேனே!—என்ன வீரம்!— என்ன தீரம்!— என்ன பெருந் தன்மை!— இத் தகைய மகன் இருக்கும் போது எனக்கு என்ன குறைவு?— (வலது புற முள்ள சமைய லறைப் பக்கம் பார்த்து) அதோ ஒரு சேவகன் என் சமைய லறை யிடம்

செல்கிறுன்.— போய் என்னவென்று கேட்கிறேன்.— (வலது புறம் போகிறுன்).

அங்கம் 5.

காட்சி 3.

[வீமராஜன் அரண்மனையில் ஒரு மண்டபம்.— வீமராஜனும் ருதுபர்ணனும் பேசிக் கொண்டு இடது புறம் வருகிறுர்கள்.]

வீமன்:— ருதுபர்ண ராஜனே! என்னுடைய மகளும் அவளுடைய தோழி கேசினியும் என் மனைவியுமாக என்னிடம் தெரிவித்தனவற்றை உமக்குக் கூறினேன். ஆயினும், இவ் வாகுகனைப் பார்க்குங்கால், சிறிதேனும் நளமகாராஜன் உருவுக்கு ஸம்பந்தம் உள்ளதாகத் தோன்ற வில்லையே! நீர் சொல்லியபடி, அச்வங்களை இவ்வளவு கடிதில் பல காத தூரம் ஒட்டி வந்ததையும், தீ மூட்டாது மிகவும் ருசியான உணவுகளைத் தயாரித்ததையும், கேசினி உரைத்தபடி, குழந்தைகளைக் கண்டு கண்ணீர் விட்டதையும், கருதினுல், நள மகாராஜனு யிருக்கலாமோ என்று தோன்றுகிறது. அவனுக்குச் சொல்லி யனுப்பி யிருக்கிறேன். அவன் வந்ததும் அவனையே கேட்போம்.

ருதுபர்:— அப்படியே செய்வோம்.— நான் அவனிடம் பழகிய வரையில் உண்மையே பேசுவான் என்று எண்ணுகிறேன். (வாகுகன் வலதுபுறம் வந்து கை கூப்பி நிற்கின்றுன்.)

வீம:— (வாகுகனைப் பார்த்து) ஐயனே! இன்றைய தினம் இங்கு நீர் தேர் ஓட்டி வந்தது எக்காரணம் பற்றியென்று உமக்கே தெரியும். அதைக் குறித்து நீர் மனங் கலங்கி யிருப்பதை யறிந்தேன். நீர் இங்கு வந்த பிறகு செய்தனவற்றையும், கூறியவற்றையும், இருந்த நிலைமையையும் கவனித்தால், நீர் உம்முடைய உண்மை யுருவில் இல்லை என்று தோன்றுகிறது. தயவு செய்து, ஸத்தியத்திற்குக் கட்டுப் பட்டு, உம்முடைய உண்மை உருவை ஒளிக்காது காட்டும்படி வேண்டுகிறேன்.

வாகு:— (சற்று யோசித்து) அரசே! எனது முன் உருவில் இருந்த போது, நான் செய்த அடாத காரியங்களையும், அதனால் எல்லோர்க்கும் நேர்ந்த துன்பங்களையும் நினைத்தால், அத் தீய வினைகளே என் உடலை இவ் விதம் ஆக்கின என்று தோன்றும் படி யிருத்தலால், இவ் வுருவத்தை மாற்றவும் எனக்கு மனம் வர வில்லை. மேலும், இவ் வுருவத்தை விட்டு, என் னுடைய உண்மை உருவைக் கொண்டால், ருதுபர்ண மகாராஜருக்கும் உமது புத்திரிக்கும் வருத்த முண்டாகுமோ என்றும் தயங்குகிறேன்.

ருது:— வாகுகா! உண்மையை அறிந்ததும், முதலில், நான் வீம ராஜனிடமும் அவர் மகளிடமும் சற்று கோபங் கொண்டாலும், பின்பு, இவ் வீம ராஜனும் அவர் புதல்வியும் ஸந்தேகிப்பது உண்மை யாயின், பிரிந்து வருந்தும் சதிபதிகளைச் சேர்ப்பிக்கும் பாக்கியம் எனக்குக் கிடைக்குமே என்று நானும் மன மொப்பியே நாங்கள் இருவரும் உனக்குச் சொல்லி யனுப்பினோம். உன் னுடைய நிஜ ரூபத்தைக் காட்டி, இவ் வுருவம் எப்படி வந்த தென்றுங் கூற வேண்டுகிறேன்.

வாகு:— ஐயன்மீர்! நீங்கள் ஸந்தேகித்தது சரியே. சூதாடி, நாடு நகரை யிழந்து, மக்களை விட்டுப் பிரிந்து, பின்பு கொடிய கானகத்தில் காதலியை நள் ளிருளில் தனியே விட்டுப் பிரிந்த பிறகு, தெய் வானுகூலத்தால், ஸர்ப்ப ராஜனான கார்க்கோடகனால் கடிக்கப் பட்டு, இவ் வுரு அடைந்தேன். அச் சமயம் அந்த அர வரசன் எனக் கொரு ஆடையை யீந்து, அதைப் போர்த்ததும் என் னுடைய பழைய உரு மீண்டும் வரும் என் று கூறி யிருக்கின்றான். அவ் வாடையை ரதத்தின் பெட்டியில் வைத் திருக்கிறேன். அதை எடுத்து உடுத்தி, எனது உண்மை உரு பெற்று வருகிறேன். (கை கூப்பி வணங்கி, வலது புறம் போகிறான்.)

வீம:— ருதுபர்ண ராஜனே! நான் சென்று தமயந்தியையும் குழந்தைகளையும் அழைத்து வருகிறேன். நல்ல ஆடை ஆபரணங்களையும் நளமகாராஜனுக்கு அனுப்புகிறேன். (இடதுபுறம் போகிறான்.)

ருது:— (தனக்குள்) இதெல்லா வற்றையும் பார்த்தால், எனக்கு மிகவும் ஆச்சரியமா யிருக்கிறது. வீமராஜனைச் சந்தித்ததும், அவர் என்னை 'எங்கு வந்தாய்?' என்று கேட்டார். அதற்கு நான் ஒன்றும் பதில் சொல்லத் தெரியாமல், "உம்மைத் தான் கண்டு போக வந்தேன்" என்றேன். அதற்குள், அவருடைய மனைவியும் மகளும் அவரைக் கூப்பிட்டு ஏதோ பேசிக் கொண் டிருந்தார்கள். பிறகு, அவர் என் னிடம் தங்களுக் குள்ள சந்தேகத்தைத் தெரிவித்து இங்கு வாகுகனை அழைப்பித்தார்.— என்ன நடக்கின்றதோ பார்ப்போம்.—

(வீமராஜன், தமயந்தி, இந்திரசேனன், இந்திர சேனை, கேசினி, ஸுதேவர், இடது புறம் வருகிறார்கள். வலது புறமாய், நளன், தன் ஸ்வய ரூபத்துடனும், ஆடையாபரணங்க ளுடனும், கார்க்கோடகன் கொடுத்த ஜாதி மாணிக்க ஆடையை இடுப்பில் மடித்துக் கட்டிக்கொண்டும், வருகிறான்.)

தமய:— (ஓடி, நளனை அணைந்து) நாதா! நாதா!! (அழுகிறாள்)

நளன்:— கண்மணீ! நான் உனக் கிழைத்த தீங்கு எல்லா வற்றையும் மன்னிப்பாய்.— வீமராஜனே! என் னுடைய குற்றங்கள் யாவற்றையும் மன்னித் தருள்வீர்.

வீமன்:— விதியின் காரியத்திற்கு யார் என்ன செய்வது?

இ. சேனன்:— (ஓடி நளன் காலில் நமஸ்கரித்து எழுந்து) தந்தையே! தெரியாமல் நான் ஏதோ பிதற்றினதற்கு மன்னிக்க வேண்டும்.

இ. சேனை:— அப்பா! இத்தனை நாள் எங்கே போ யிருந்தீர்?

நள:— (குழந்தைகளைக் கட்டி யணைத்து முத்த மிட்டு) என் செல்வங்களே! என் னுடைய வினையின் பயனால், உங்களை யெல்லாம் விட்டுப் பிரிந்து, உங்களைப் பல கஷ்டத்திற்கும் ஆளாக்கினேன்.

ருது:— நளமகாராஜனே! உண்மை தெரியாது நான் உம்மை எனக்குக் குற்றேவல் செய்யும்படி சொல்லியதற்கும் உமக்குத் தக்க மரியாதை செய்யாமல் இருந்ததற்கும் என்னை மன்னித் தருள்வீர்.

தம:— (நளனைப் பார்த்து) நாதா! உம்மை யடைய வேண்டி, நான் மறு சுயம் வரம் என்று சொல்லி யனுப்பி ருதுபர்ண ராஜரை ஏமாற்றியதற்கு அவர் என்னை மன்னிக்கும்படிக் கேட்பீர்.

நள:— ருதுபர்ண ராஜனே! காலத்தின் கொடுமையால், என்னுடைய தீய செயல்களின் பலனாய், நான் உரு மாறி மறைந்து வசிக்க நேரிட்ட போதும், என்னை மிகவும் ப்ரீதியோடு உம் மிடம் நியமித்து, மிக்க அன்போடு பழகி, என்னை ஆதரித்து வந்ததற்கு நான் எவ் விதம் நன்றியைச் செலுத்துவேனோ அறிய வில்லை. நான் என் மனைவி மக்களுடன் மீளவும் சேர்வதற்கு ஓர் உபாய மாக உம்மை இங்கு வரவழைத்ததற்கு என் னுடைய காதலி தமயந்தியை மன்னித் தருள்வீர்.

ருது:—நள மகா ராஜனே! நீர் உமது மனைவி மக்களுடன் மீளவும் கூடி ஆநந்தமாய் வாழ நானும் ஒரு கருவி யானேனே என்பதில் எனக்கு மிகவும் சந்தோஷம். எல்லாம் இனிதே முடிந்தன. நாம் வரும் போது, தான்றி மரத்தி னருகில், நான் உமக்கு வாக்கு அளித்த படி, சூதாடும் வித்யையை உமக்கு நன்றாய்க் கற்றுக் கொடுக்கிறேன். அதைக் கொண்டு நீர் மறுபடியும் உமது ராஜ்யத்தைப் பெறலாம்.

தம:— (ஸுதேவரைப் பார்த்து) ஸ்வாமி! முன்பு அன்னத்தின் உதவியால் நான் அடைந்த கணவரை மீண்டும் இப்படி ஸந்தோஷமாகச் சேருவதற்குக் காரணமா யிருந்த அந்தணராம் தங்களை மிகுந்த நன்றி யறிவுடன் வணங்குகிறேன். (கை கூப்புகிறாள்.)

ஸுதே:— தீர்க்க ஸுமங்கலீ பவ! (ஆசீர்வதிக்கிறார்).

நள:— ஸுதேவரே! என் னுடைய தமயந்தியைக் கண்டு பிடித்துக் குழந்தைகளுடன் சேர்த்ததற்கும், என்னை வெகு சாதுர்யமாய் அறிந்து கொண்டு என் மனைவி மக்களுடன் ஒன்று கூட்டியதற்கும் கைம்மாறு என்ன செய்யப் போகிறேன்? வீமராஜன் முதலானோர்கள் உமக்கு என்ன அளிப்பதாக வாக் களித் திருந்தார்களோ அத் துணை யளவு நானும் உமக்குக் கொடுப்ப துடன், நீர் இனி என் னுடைய

மந்திரிகளில் ஒருவரா யிருந்து எப் பொழுதும் நாங்கள் உமக்குக் கிருதஜ்ஞதையைக் காட்டும் படியாக இருக்க வேண்டுமென்று மனப் பூர்வமாய் வேண்டிக் கொள்கிறேன். (கை கூப்புகிறான்.)

ஸுதே:— எல்லாம் பகவா னுடைய திரு வுள்ளம்!

கலிபுருஷன் (அசரீரியாய்):—நள மஹாராஜனே! கலி புருஷனாகிய நான் சொல்வதைக் கேள்:— தமயந்தியின் ஸ்வயம்வரம் நடக்கும் போது, மண மாலையைப் பெற வேண்டி இந்திராதி தேவர்கள் வந்தும், அவள், அவர்களை அலக்ஷியம் செய்து, உன்னை நாடியதனால், நான் வெகுண்டு உன்னை இக் கஷ்டங்களுக் கெல்லாம் ஆளாக்கினேன். இவ்வள விற்கும் ஸத்யத்தி னின்றும் தவறாது, நீயும் உன் காதலியும் இருந்தமையால், உங்க ளுடைய கஷ்ட தசை இன்றே முடிந்தது. இனி, உங்களுக்கு ஸர்வ மங்களங்களும் உண்டாகும்! சூதாட்டத்தில் புட்கரனை வென்று, நீ உன் அரசை மீளவும் அடைய நானே உதவி செய்கிறேன். உன்னை வருத்தியதற்காக நான் மிகவும் வருந்துகிறேன். அதற்குப் பிராயச்சித்தமாக, உன் கதையைச் சொல்வோர், கேட்போர், நடிப்பவர், முதலியவர்களை நான் ஒரு காலும் பீடிப்ப தில்லை என்று உறுதியாய்க் கூறுகிறேன்.

நளன்:—கலி புருஷரே! பகவா னுடைய அருளால், என் னுடைய தீ வினைகள் யாவும் கழிய அவருடைய கருவியாய் நின்று நீர் எனக்கு உதவியதற்கும், இப் பொழுது நீர் கூறிய மொழிகளுக்கும், என் னுடைய க்ருதஜ்ஞதையைக் காட்ட வணங்குகிறேன். (கை கூப்புகிறான். தேவர்கள் பூமாரி பொழிகின்றனர்).— (மற்றவர்களைப் பார்த்து) நம் மெல் லோரையும் காத்தருளிய பகவானை நாம் கூடி வணங்குவோம்.

எல்லோரும்:— S. (கை கூப்பி ஸ்தோத்திரம் செய்கிறார்கள்).

மங்களம்.

N32
184842
சென்னை-600 008